# கோகுலம்

GOKULAM டிசம்பர் '99

ரூ. 6/-



## வண்ணக் கோலத்தில் கார்த்திகை விளக்கு!

# DUKES

**MARK OF QUALITY**

## BISCUITS AND WAFERS

வழங்கும்

# SCHOOL

சலுகைகள்

# இலவசம்




டியூக்ஸ் மெர்ரி மில்க்
உடன்ரூ.3/- மதிப்புள்ள
ஒரு பேனா



'டுடேஸ்' பேனா




டியூக்ஸ் மாரியுடன்
ஒரு ஸ்கேல்





'டுடேஸ்' ஸ்கேல்

முந்துங்கள்! இச்சலுகை சரக்குகள் உள்ளவரை மட்டுமே!

* மேற்கூறிய சலுகைகள் இல்லாமலும் இப்பொருட்கள் கிடைக்கும்.

# கோகுலம்



டிசம்பர் '99 ♦ மலர் : 17 இதழ் : 11

***அன்புள்ள சிறுவர் சிறுமியரே,***

**ஹை**தராபாத்தில் நடந்த ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் டெண்டுல்கரின் சாதனை உங்களை அசத்தியிருக்கும். இந்த மாட்சில் இந்தியா அடைந்த மொத்த ரன்கள் 376. இத்தகைய ஒருநாள் போட்டிகளில் இதற்கு முன் ஸ்ரீலங்கா 398 எடுத்துள்ளது. இப்போது இந்தியா இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது! இந்த ஒரு ரிகார்ட் மட்டும்தானா! டிராவிட் 153 ரன்கள் குவித்தார். ஒருநாள் போட்டிகளில் டிராவிட் எடுத்துள்ள அதிகபட்ச ரன்கள் இதுதான். தவிர அவரும் டெண்டுல்கரும் இணைந்து எடுத்த 331 ரன்கள் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் முதலிடம் பெறுகிறது. இதற்கு முன் இத்தகைய ஒரு பார்ட்னர்ஷிப் சாதனையை ஒருநாள் போட்டிகளில் கிரிக்கெட் உலகு கண்டதில்லை!

இப்படி பல வெற்றிகளைக் கண்டாலும் ஹைதராபாத் ஒருநாள் போட்டியில் மிக முக்கியமானது டெண்டுல்கரின் 186 தான். காரணம், முதுகிலே அவருக்கு இருந்த ஒரு உபாதையை வெற்றிகொண்டு அவர் நிகழ்த்திய சாதனை இது! அது மட்டுமல்ல. இதற்கு முன் ராஜ்கோட்டில் ஆடிய ஒருநாள் போட்டியில் 43 ரன்கள் தோல்வியை ஹைதராபாத்தில் 174 ரன் வித்தியாச வெற்றியாக மாற்றிக் காட்டியிருக்கிறார்! இதை நினைவில் வையுங்கள்.


**வா**ழ்க்கை என்பது எப்போதுமே மலர்ப் பாதையாக அமைந்து விடுவதில்லை. அதிலே முட்களும் இருக்கும். குத்தி, துன்பம் தரும். ஆனால் அதையெல்லாம் மீறி முன்னேற்றப் பாதையில் செல்வதுதான் சாதனை. எதிர்ப்பிலே காணும் வெற்றியிலேதான் இன்பம் இருக்கிறது. இதை உணர்ந்தால் உங்களுக்கு அவ்வப்போது ஏற்படக்கூடிய மனச்சோர்வுகள், ஏமாற்றங்கள் போன்றவற்றை மறந்து முன்னேற ஊக்கம் பிறக்கும்.


அரையாண்டு பரீட்சையில் ஏதோ ஒரு பாடத்தில் மார்க் குறைந்து விடுவதாகவே வைத்துக் கொள்ளுங்கள். அதற்காகக் கலங்காமல், முழு ஆண்டு பரீட்சைக்கு மூன்று மாதம் முன்னரே இந்த எச்சரிக்கை கிடைத்ததற்கு சந்தோஷப்பட வேண்டும்! முனைந்து படித்தால் முன்னேற்றம் காண முடியும். டெண்டுல்கரைப் போலவே நீங்களும் சதமென்ன, இரட்டைச் சதம் கூட அள்ளலாம்!

அன்புடன்,

கி.ராஜேந்திரன்
ஆசிரியர்.

• சச்சின்





• டிராவிட்


**உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்**
**உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.**

# கோகுலம்

## டிசம்பர் '99 இதழில்...













# குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா நினைவுப் பரிசுப் போட்டிகள்!

ஒவ்வொரு ஆண்டும் பள்ளி மாணவர்களுக்குக் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் நினைவாக சிறுகதைப் போட்டிகளை நடத்தி வந்தோம். மாணவர்களுக்கு மட்டும்தான் போட்டியா? எங்களுக்குக் கிடையாதா என்று பெரியவர்களும் கேட்டனர். அதனால் இந்த ஆண்டு மாணவர்/ஆசிரியர்/பெற்றோர் ஆகிய முத்தரப்பினருக்கும் போட்டிகள் அறிவித்திருக்கிறோம்.

## மாணவர்களுக்குக் கட்டுரைப் போட்டி

மாணவர்கள் எந்தத் தலைப்பில் வேண்டுமானாலும் கட்டுரையை எழுதி அனுப்பலாம். கட்டுரை கோகுலத்தில் ஒரு பக்க அளவில் இருக்க வேண்டும்.

முதல் பரிசு ரூ. 300
இரண்டாம் பரிசு ரூ. 200
(இரண்டு கட்டுரைகளுக்கு)
மூன்றாம் பரிசு ரூ. 100
(3 கட்டுரைகளுக்கு)

## ஆசிரியர்களுக்குக் கவிதைப் போட்டி

சிறுவர்களுக்கான கவிதைகளை பள்ளி ஆசிரியர்கள் எழுதி அனுப்ப வேண்டும். எந்தத் தலைப்பிலும் 16 முதல் 24 வரிகளுக்கு மேற்படாமல் கவிதை எழுதலாம்.

முதல் பரிசு ரூ. 300
இரண்டாம் பரிசு ரூ. 200
(இரு கவிதைகளுக்கு)
மூன்றாம் பரிசு ரூ. 100
(மூன்று கவிதைகளுக்கு)

## பெற்றோர்களுக்குச் சிறுகதைப் போட்டி

சிறுவர்களுக்கான சிறுகதைகளை பெற்றோர்கள் எழுதி அனுப்ப வேண்டும். நகைச்சுவை, துப்பறிதல், வரலாறு, அறிவியல் என எத்தகைய சிறுகதையாக வேண்டுமானாலும் இருக்கலாம். சிறுகதைகள் கோகுலத்தில் மூன்று பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

முதல் பரிசு ரூ. 400
இரண்டாம் பரிசு ரூ. 300
(இரு கதைகளுக்கு)
மூன்றாம் பரிசு ரூ. 250
(இரு கதைகளுக்கு)

**போட்டி விதிகள் :**

1. வெள்ளைத் தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதி அனுப்ப வேண்டும்.
2. பரிசு பெற்ற படைப்புகளைத் திரும்பப் பெற போதிய தபால் தலைகளை ஒட்டிய உறையை அதனுடனே அனுப்ப வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயன் இல்லை. இதுகுறித்து எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.
3. ஒருவரே எத்தனை படைப்புகளை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
4. அயல்நாட்டில் உள்ளவர்கள் இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியைக் கட்டாயம் தரவேண்டும்.
5. படைப்புகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை – 97 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மேல் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதை/கட்டுரை/கவிதைப் போட்டி எனக் குறிப்பிட வேண்டும்.
6. போட்டி குறித்து எழும் எவ்விதப் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆசிரியர் எடுக்கும் தீர்ப்பே முடிவானதாகும்.

**கடைசி தேதி : 31.12.99**

# கார்த்திகை விளக்கு!

தீபாவளியைக் கொண்டாடி முடித்ததும் கார்த்திகையில் வரும் பண்டிகை கார்த்திகை தீபம். தீபாவளிக்கு வெடித்தது போக மிச்சமிருக்கும் பட்டாசுகளைப் பத்திரப்படுத்தி கார்த்திகைத் திருநாளில் வெடித்து மகிழ்வார்கள்.

கோயில்களிலும் வீடுகளிலும் தீபங்கள் ஏற்றி ஒளி வீசச் செய்வதே இப் பண்டிகையின் சிறப்பு!

கார்த்திகைத் திருநாள் கொண்டாடுவதன் காரணம் என்ன? அடைமழையில் கதிரவனின் ஒளி காணாமல் தவித்த மக்கள் சூரிய ஒளியைக் காண விரும்பி மலை மீது விளக்கிட்டு மகிழ்வதைக் கார்த்திகை விளக்குகள் குறிக்கிறது என புராணங்கள் கூறுகின்றன.

திருவண்ணாமலை மற்றும் சில மலைகளின் உச்சியில் கார்த்திகை விளக்கிட்டு பூஜை செய்வது வழக்கம். ஒளிப் பிழம்பான சிவபெருமான் அருணகிரியாக நின்று கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்திலே மலை மீது காணும் விளக்கை வழிபடுவோருக்கு நலம் அருள்வதாய் பெரியோர்கள் கூறுவர்.

மலைப்பிரதேசங்களைத் தவிர்த்து தமிழ் நாட்டில் பரவலாக வேறொரு காரணத்திற்காக இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சிவபெருமான் அசுரரை எரித்த விழாவாக கோயில்களில் இது நடத்தப்படுகிறது. கீற்றுகளால் சொக்கப்பனை ஒன்று பெரிதாய்கட்டி அதன் அருகில் சிவ பிரானுடைய உற்சவ விக்கிரகத்தைக் கொண்டு வந்து நிறுத்தி வைப்பார்கள். பிறகு சொக்கப்பனை அசுரர்களாக நினைத்துக் கொளுத்துவர். சிறுவர்கள் கள்ளிக் குச்சிகளை வைத்துக் கொண்டு அவற்றின் முனையில் தீயை வைத்து மகிழ்வர்.



இவ்வாறு பல காரணங்கள் சொல்லப் பட்டாலும் மாலை நேரத்தில் இருட்டில் வீடெங்கும் ஜெக ஜோதியாக மின்னும் விளக்குகளும் வண்ணக் கோலங்களும் கார்த்திகைப் பொரி மற்றும் பட்டாசுகளும் எல்லோர் மனதிலும் சந்தோஷத்தை ஏற்படுத்துவது நிச்சயம்!



அட்டையில் :
**வர்ஷா**
வண்ணப்படம் :
**ஸ்ரீஹரி**

# தேவபாலனுக்கு ஒரு குடில்

**அ. ஜெசி**

**ப**ள்ளி விட்டு வீடு திரும்பினான் அலெக்ஸ். "அம்மா! அப்பா சம்மதிச்சிட்டாரா?" என்று ஆவலுடன் கேட்டான்.

"அப்பா சரின்னுட்டார். ஆனால் கிறிஸ்துமஸுக்குப் புது டிரஸ் நீ போடாதது எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு" என்றார் அலெக்ஸின் அம்மா.

''போன மாதம் மாமா வாங்கிக் கொடுத்த டிரஸ்ஸை நான் இன்னும் போடலை. அதனாலதான் கிறிஸ்துமஸுக்கு டிரஸுக்குப் பதிலா பணம் கேட்கறேன்.''

"தேவபாலனுக்குக் குடில் போடுவதற்கு இந்தப் பணம் போதுமா'' என்றாள் தங்கை ஜான்சி.

''நான் ஏற்கெனவே சேர்த்து வைத்திருக்கிற பணம் இருக்கு. அதோட இந்தப் பணத்தையும் சேர்த்து அருமையா குடில் தயாரிக்கப் போறேன். இந்தக் குடிலைப் பார்த்து எல்லோரும் அசந்து போகப் போறீங்க'' என்று கூறிவிட்டு படிக்கச் சென்றான் அலெக்ஸ்.



**ம**றுநாள் காலை. "அலெக்ஸ் இங்கே பாரு, ஜோசப் வந்திருக்கான். சீக்கிரம் கிளம்புடா" அம்மா குரல் கொடுத்தார்.

இருவரும் வேகமாகப் பள்ளிக்கு விரைந்தனர். ''அலெக்ஸ் உனக்கு குடில் போட பணம் கிடைச்சிருச்சா?'' - ஜோசப்.

"அப்பா சரின்னு சொல்லிட்டார். நாளையோட பரீட்சை முடியுது. அடுத்த நாளில் இருந்து குடில் செய்ய ஆரம்பிச்சிருவேன்" என்று பெருமையாகக் கூறினான் அலெக்ஸ்.

''எனக்கும் கிடைச்சிடும்டா... அலெக்ஸ், மணி ஏன் நேற்று பரீட்சைக்கு வரலை? எனக்கு ரொம்பக் கவலையா இருக்குடா" என்று வருந்தினான் ஜோசப்.

"நானும் யோசிச்சிட்டுத்தான் இருக்கேன். நாளைக்குப் பரீட்சை முடிந்ததும் ரெண்டு பேரும் போய் பார்த்துட்டு வரலாம்" - அலெக்ஸ்.

**அ**லெக்ஸ், மணி, ஜோசப் மூவரும்

நெருங்கிய நண்பர்கள். இதில் மணிக்கு அப்பா இல்லை. அம்மாதான் ஏதோ வேலை செய்து அவனையும் அவன் தங்கையையும் படிக்க வைக்கிறார். மணிக்குப் பணக்கஷ்டம் இருந்தாலும் படிப்பில் அவன்தான் முதல்.

கணக்குப் பரீட்சை முடிந்து அலெக்ஸும் ஜோசப்பும் வெளியே வந்தனர்.

"அலெக்ஸ் மணிக்குக் கால் உடைஞ்சிருக்காம். நம்ம வகுப்பாசிரியர் எங்கிட்டே சொன்னார்."

"எப்படிடா?"

"அதெல்லாம் தெரியலை. வா போகலாம்."

இருவரும் சைக்கிளில் பறந்தனர். மணியின் வீட்டை நெருங்கும்போதே அவர்களுக்கு ஓரளவு நிலைமை புரிந்தது. வீட்டின் சுவர் ஒரு பக்கமாக சரிந்திருந்தது.


வீட்டிற்குள் சென்றார்கள். மணி ஒரு தொங்கிப் போன கயிற்றுக் கட்டிலில் பழைய புடைவையைப் போர்த்திக் கொண்டு ஜுரத்தில் படுத்திருந்தான். காலில் பெரிய கட்டுப் போட்டிருந்தது. மணியின் அம்மாவிடம் விசாரித்தனர்.

"மூணு நாளைக்கு முன்னாடி பெய்த மழையில மண்சுவர் இடிந்து தூங்கிட்டு இருந்த மணி மீது விழுந்துடுச்சு. அதுல கால் உடைஞ்சு போயிருச்சு. அதோட காய்ச்சலும் வந்துருச்சு. என்ன பண்றதுன்னே தெரியலை. இவனுக்கு மருந்து வாங்கிக் கொடுப்பேனா? இல்லை வீட்டைச் சரிசெய்வேனா? கையில இருந்த காசும் போயிருச்சு. யாரும் கடன் கொடுக்க மாட்டாங்க" என்று அழுதார் மணியின் அம்மா.

இதைப் பார்த்த மணியின் தங்கையும் அழ ஆரம்பித்தாள். அலெக்ஸும் ஜோசப்பும் செய்வதறியாது நின்றனர்.

கொஞ்சம் சுதாரித்த அலெக்ஸ், "அம்மா கொஞ்சம் வெளியில் வாங்க" என்று எழுந்து போனான். ஜோசப்பும் மணியின் அம்மாவும் பின்தொடர்ந்தனர்.

"நீங்க ஒண்ணும் கவலைப்பட வேண்டாம். மணியின் மருந்துச் சீட்டைக் கொடுங்க. எங்க மாமா மெடிக்கல்



ரெப்ரெசன்டேடிவ்வாக இருக்கார். மருந்து எல்லாம் வாங்கிடலாம். நாளைக்கு சாயங்காலம் வர்றோம்" என்று கூறி கிளம்பினான் அலெக்ஸ்.

வழியில், "அலெக்ஸ் அவங்க வீட்டை எப்படிடா சரிபண்றது?" என்றான் ஜோசப்.


"நான் ஒரு முடிவு பண்ணிட்டேன். தேவபாலனுக்குப் போடற குடிலை நிறுத்திட்டு அந்தப் பணத்தைக் கொடுக்கப் போறேன்."

"என்னடா சொல்றே? ஒரு வருஷமா கனவு கண்டு காசெல்லாம் சேர்த்து வச்சு..." என்றான் ஜோசப்.

"இந்தக் காரியத்தை தேவனே விரும்புவார். எங்கிட்ட எப்படியும் ஆயிரத்து ஐநூறு ரூபாய் தேறிடும்."

"சரி! நானும் ஒரு ஆயிரம் ரூபாய் தரேன். குடில் வேண்டாம்" என்று ஜோசப் கூற அலெக்ஸ் சந்தோஷப் பட்டான்.

மறுநாள் மாலை மணியின் அம்மாவைச் சந்தித்து பணத்தைக் கொடுத்தனர். "அம்மா இது மணிக்குத் தெரிய



அப்பா, "உங்க வீட்டில் குடில் செஞ்சிருக்கிறானாமே! எப்படியிருக்கு?" என்றார்.

"உங்க வீட்லதான்னு ஜோசப் சொன்னானே" என்றார் ஜோசப்பின் அப்பா.

"அப்பா, குடில் ரெண்டு பேர் வீட்லேயும் இல்லை. வேறொரு இடத்தில் இருக்கு. கிளம்புங்க" என்றான் அலெக்ஸ்.

"அப்பா! அண்ணா ஏதோ ஏமாத்தறான்" என்றாள் ஜான்சி.

"சரி,சரி அவன் சொல்ற இடத்துக்கே போய்ப் பார்த்திடலாம்" என்றார் அலெக்ஸின் அம்மா

எல்லோரும் கிளம்பினர். தூரத்தில் மணியின் வீடு தெரியும்போதே, "இதுதான் நாங்க கட்டின குடில்" என்று காட்டினான் அலெக்ஸ்.

நடந்ததை விவரித்த ஜோசப், "மணியின் வீட்டில் இதைப் பற்றி கேட்காதீங்க" என்றான்.

எல்லோரும் வீட்டிற்குள் நுழைந்தனர். புதிதாக சுவர் எழுப்பப்பட்டு ஓலையும் வேயப்பட்டிருந்தது.

மணியின் அம்மாவிடம் பட்சணங்களைக் கொடுத்தனர்.

"ஐயா! நீங்க இந்தப் பிள்ளைகளைப் பெற கொடுத்து வச்சிருக்கணும். என் பிள்ளையையும் காப்பாத்தி, வீட்டையும் சரிசெய்து கொடுத்தவங்க ஜோசப்பும் அலெக்ஸூம்தான்'' என்று கண்ணீர் மல்கக் கூறினார் மணியின் அம்மா.

மணியின் காலை விசாரித்தனர். "இப்ப கொஞ்சம் நடக்க முடியுது. ஆனால் அரைப் பரீட்சை எழுதாததுதான் எனக்கு வருத்தமா இருக்கு" என்றவன் ஜோசப், அலெக்ஸ் கைகளைப் பிடித்து, ''எப்படிடா நன்றி சொல்வேன்'' என்றான்.

எல்லோரும் விடைபெற்று வீடு நோக்கி வந்து கொண்டிருக்கும்போது, "அலெக்ஸ், ஜோசப் நீங்க தேவபாலனுக்குக் குடில் செய்யாவிட்டாலும் இந்தக் காரியத்தை நினைத்து நாங்கள் ரொம்பவே மகிழ்ச்சியடையறோம். பெருமைப்படறோம். யேசு பாலனும் இதைத்தான் விரும்புவார்'' என்றார் ஜோசப்பின் அப்பா.

எல்லோரும் மனநிறைவுடன் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடி முடித்தனர்.

வேண்டாம்'' என்று கேட்டுக் கொண்டனர். மணியின் அம்மா நன்றியுடன் கண்ணீர் பெருக இருவரையும் பிடித்துக் கொண்டார்.

வீடு திரும்பும் வழியில், "கிறிஸ்துமஸ் வரப் போகுது. குடில் ஏன் போடலைன்னு கேட்டா என்னடா சொல்றது?" என்று கேட்டான் ஜோசப்.

"அதை அப்ப பார்த்துக்கலாம். குடிலைப் பத்தி உங்க வீட்டில் யாராவது கேட்டால் எங்க வீட்ல இருக்குன்னு கூட்டிட்டு வந்துடு" என்றான் அலெக்ஸ்.

கிறிஸ்துமஸ் அன்று புத்தாடை அணிந்து நண்பர்களுக்கு இனிப்புக் கொடுத்து மகிழ்ந்தான் அலெக்ஸ்.

''அப்பா அண்ணாவின் குடிலைக் காட்டச் சொல்லுங்க'' என்றாள் ஜான்சி.

"அவன்தான் ஜோசப் வீட்டில் செஞ்சிருக்கானாமே. சாயங்காலம் போய்ப் பார்க்கலாம்" அப்பா சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஜோசப்பின் பெற்றோரும் ஜோசப்பும் வீட்டிற்குள் நுழைந்தனர்.

அவர்களை வரவேற்ற அலெக்ஸின்

**உங்கள் கோகுலம் ஜனவரி இதழிலிருந்து புத்தம் புதுப் பொலிவுடன் வெளிவர இருக்கிறது. நீங்கள் விரும்பும் பல புதிய பகுதிகளும் இடம்பெற உள்ளன. தவற விடாதீர்கள்!**

காணப்படும் இடம் எது?

1. வடதுருவம், 2. இமயமலை, 3. தென் துருவம்.

விடையை ஒரு தபால் கார்டில் எழுதி அனுப்புங்கள்.


மேலுள்ள நான்கு மாவட்டங்களுக்கான போட்டி இந்த இதழுடன் முடிவடைகிறது. அடுத்த மாதம் இந்த அரிய வாய்ப்பைப் பெறப் போகும் மாவட்டங்கள் எவை என அறிய ஆவலுடன் இருக்கிறீர்களா? அடுத்த இதழ் வரை காத்திருங்கள். தொடர்ந்து எல்லா மாவட்டங்களுக்கும் வாய்ப்பு கிடைக்கும். தவற விட்டு விடாதீர்கள்.


– ஆசிரியர்

மூன்று மாதங்களுக்குக் குறிப்பிட்ட சில மாவட்ட வாசகர்களுக்கு மட்டும் மாதம் ஒரு போட்டி அறிவிக்கப்படும். இந்தப் போட்டிகளில் ஒவ்வொரு மாதமும் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசாக வழங்கப்படும். எனவே இந்தப் போட்டியில் கலந்து கொள்வதுடன் சீக்கிரமாக அனுப்பி வைப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த மாதமும் மதுரை, தேனி, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்ட வாசகர்களுக்கான போட்டி.

பெங்குவின்கள்





# யாரும் சிரிக்கக் கூடாது!

**திருவாழத்தான்**

சுபாகு ராஜாவுக்கு சிரிக்கவே தெரியாது. குழந்தையாகப் பிறந்த போதே, அழத்தான் தெரிந்து இருந்ததே தவிர, சிரிக்கத் தெரியவில்லை. குழந்தையை அவ்வப்போது வந்து பார்ப்பவர்கள் எல்லோரும், அதன் கன்னத்தில் விரலை வைத்து, 'சிரி சிரி' என்று சொல்லிப் பார்த்தார்கள். ஊஹூம். குட்டி ராஜா உம் என்று முகத்தை வைத்துக் கொண்டிருந்தாரே தவிர, சிரிக்க முற்படவே இல்லை.

இப்போது வளர்ந்து, இளைஞன் ஆகி, பட்டம் சூடி, ராஜாவாக ஆன பிற்பாடு கூட சிரிப்பு என்பதான உணர்வு ராஜாவுக்கு வரவில்லை. சிரிப்பு என்பது மூளை சம்பந்தப்பட்டது. அதன் ஒரு பகுதி சிரிப்பு உணர்வை ஏற்று, சிரிக்க வைக்கிறது என்று யாரோ ஒரு மருத்துவர் சொல்லவும், அந்த மருத்துவரிடமே ராஜா தனது மூளைக்குச் சிரிப்பு உணர்வை உண்டாக்குமாறு கட்டளை பிறப்பித்தார். 'ஐயோ, அதுக்கு எல்லாம் என்னிடம் மருந்து கிடையாது' என்று அந்த மருத்துவர் சொல்லவும், ராஜாவுக்குக் கோப உணர்வு மேலிட்டது. மருத்துவரைச் சிறையில் அடைக்குமாறு உத்தரவு போட்டு விட்டார்.

அடுத்து ஒரு சோதிடர் ராஜாவிடம் மாட்டிக் கொண்டார். "நீர் பெரிய சோதிடர் என்று ஊர், உலகமே சொல்கிறது. எனக்கு ஏன் சிரிப்பு வருவதில்லை என்பதை என் ஜாதகத்தைப் பார்த்துச் சொல்லவும்" என்று அந்த சோதிடரிடம் ராஜா கூறினார்.

இது என்னடா வம்பு என்பதாக நினைத்து அந்த சோதிடர் திருதிரு என விழித்தார். ராஜாவின் ஜாதகத்தைக் கொண்டு வரும்படி சொன்னார் அவர். அந்த ஜாதகம் வருவதற்கு முன்பாக, தன் ஜாதகத்தை மனதுக்குள் புரட்டிப் பார்த்துக் கொண்டார். ராகுவை சனி பார்ப்பதாகத் தெரிந்தது. அதன் பலன் என்ன வென்றால் சிறை பிரவேசம். மனதுக்குள் அழுதார் சோதிடர்.

ராஜாவின் ஜாதகம் வந்தது. வெகு தீவிரமாகக் கோள்களைக் கணித்துப் பார்த்தார் சோதிடர். செவ்வாயை கேது வக்கிரமாகப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. இப்படி ஜாதகம் இருந்தால், சம்பந்தப்பட்டவருக்கு நகைச்சுவை உணர்வு இருக்காது என்று சோதிட சாஸ்திரம் கூறுகிறது. இதை ராஜாவிடம் எப்படிச் சொல்வது? ஜாதகத்தைக் கண்களைக் கொட்டாமல் சோதிடர் பார்த்துக் கொண்டேயிருந்தார். சிறைச்சாலையில்

அடைபடுவது கொஞ்ச நேரம் தள்ளிப் போகட்டுமே என்பது அவருடைய எண்ணம்.

"என்ன?" ராஜா சிங்கமாகக் கர்ஜித்தார்.

அவர் எதிரே ஆட்டுக் குட்டியாக நடுங்கினார் சோதிடர்.

"ஏன் பேசாது இருக்கிறீர்? சொல்லும்!"

"ராஜா, உங்களுக்குச் சிரிப்பு வராது."

"ஏன்?"

"செவ்வாயைக் கேது வக்கிரமாகப் பார்க்கிறது."

"செவ்வாய்க்கும் சிரிப்பதற்கான என் வாய்க்கும் என்ன சம்பந்தம்?"

"சிரிக்க மாட்டீர்கள்."

"ஏன்?"

"கிரக தோஷம். அது அப்படித்தான்."

"தோஷத்தை நிவர்த்திப் பண்ண ஏதாவது யாகம், ஹோமம் செய்யலாமா?"

சோதிடர் யோசித்தார். யாகம், ஹோமம் செய்யச் சொல்லி, தனது சிறைச்சாலை நுழைதலை சில காலம் தள்ளிப் போடலாம். அவ்வளவுதான். அது எதுக்கு? தனது ஜாதகப்படி சிறைச்சாலையில்



அடைபட வேண்டும் என்றால், அடைபட்டு விடுவதுதான் நல்லது என்று அவருக்குத் தோன்றியது.

"ராஜா, யாகம், ஹோமம் செய்வதால், சிரிப்பு உணர்வு உங்களுக்கு வந்து விடாது" என்றார் சோதிடர்.

"அப்புறம் நீர் என்ன சோதிடர்? உடனே சிறைக்குப் போகவும்" என்றார் ராஜா.

கதைப் புத்தகங்கள், நகைச்சுவைத் துணுக்குகள், தெனாலிராமன் கதைத்



தொகுதி என்று எதெதையோ வரவழைத்து ராஜா படித்துப் பார்த்தார். ஊஹூம். சிரிப்பு நெருங்கவே மறுத்தது.

ராஜாவின் வாய்தான் சிரிக்கவில்லையே தவிர, அவருடைய காதுகள் அவ்வப்போது சிரிப்பு ஒலிகளைக் கேட்டமயமாக இருந்தன. அரண்மனையுள் ராணி சிரித்தாள். அவளுடைய சேடிகள் கை கொட்டிச் சிரித்தனர். அமைச்சர்கள் தங்களுக்குள் நகைச்சுவையை பரிமாறி ஓகோ எனச் சிரித்தார்கள். அரண்மனை அதிகாரிகளும், பாதுகாவலர்களும் எது எதுக்கோ சிரித்துக் கொண்டார்கள். நாட்டு மக்கள், அசட்டுத்தனமாகவும் ஆணவத்துடனும் இளித்துக் கொண்டும் ஈ என்று பல்லைக் காட்டியும் உயிர் எழுத்துக்களால் சிரிப்பது, ராஜாவின் காதுகளுக்கு படு நாராசமாக இருந்தது.

ஆகவே, ராஜா ஒருநாள் திடுதிப்பென்று, 'என் நாட்டில் வாழும் குடிமக்கள் இந்த அறிவிப்பு அறிந்த விநாடியிலிருந்து சிரிக்கக் கூடாது' என்று தண்டோராப் போட்டு, நாட்டின் மூலை முடுக்கெல்லாம் அறிவிப்புச் செய்தார். "ராஜாவின் இந்த அறிக்கையை மீறி எவராவது சிரித்தால், அவருக்குப் பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனை" என்று குரல்கொடுத்து, தண்டோரா அடித்துச் சென்றான் அறிவிப்பாளன்.

இப்படி அவன் அறிவிப்புச் செய்து கொண்டே சென்றபோது, எதனாலோ அவனுக்கே சிரிப்பு பொத்துக் கொண்டு வந்து விட்டது. 'களுக்'கென்று சிரித்து விட்டு, வாயை இறுக மூடிக் கொண்டான். இருந்தாலும், பக்கத்திலிருந்த அரண்மனை அதிகாரி ஒருவர் அவனிடம், "ஏன் சிரித்தாய்? வா, சிறைக்கு" என்று கூறி அழைத்துச் சென்றார்.

நாட்டு மக்கள் நடுங்கினர். கப்சிப் என்று வாயை மூடிக் கொண்டனர். வாயைத் திறந்தால், எங்கே சிரிப்பு வந்து விடுமோ என்று எண்ணி, பேசவே தயங்கினர். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தால், முகத்தில் சிரிப்பு அலை எழும் என்று கருதி, முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்தனர்.

இவ்விதம் நாட்டில் சிரிப்பு அற்றுப் போனதால், குடிமக்கள் எவ்வித உணர்வும்

இன்றி, உம் என்று முகத்தை வைத்துக் கொண்டு வேலைக்குப் போனார்கள். ஆண்களும் பெண்களும் குளிக்கச் செல்லும் ஆற்று ஓரங்களில் பேச்சே எழவில்லை. யாரும் கதைகள் சொல்வது கிடையாது.

இப்படிப் பொம்மைகளாக நாட்டு மக்கள் இயங்கியதால், நாட்டில் உற்பத்தி குறைந்தது. நெல் முதலான தானியங்கள் சரிவர அறுவடை ஆகவில்லை. கடைகளில் வியாபாரம் குறைந்தது.

மொத்தமாக நாட்டு மக்கள் அனைவருமே சாபம் போல மெலிந்து விட்டனர். 'சிரித்துப் பாரு' என்பதான பழமொழி உண்டு. அந்தப் பழமொழியை அந்நாட்டு மக்கள் மறந்து விட்டனர்.

அரண்மனையுள் ராணியும் சிரிப்பது இல்லை. அவள் ராஜாவின் முகத்தைப் பார்ப்பதே இல்லை. பார்த்தால், இப்படியும் ஒரு ராஜாவா என்ற நினைப்பில் அவளுக்குச் சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டு, ராஜாவின் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்தாள்.

இந்த உலகம் இருக்கிறதே, இது ரொம்பக் குறும்புக்கார உலகம். எங்கு எது இல்லையோ, அதை அங்கே புகுத்தப் பார்க்கும். எங்கு எது நிறைய இருக்கிறதோ, அவற்றை உலகம் அகற்ற முயலும்.


ஒரு நல்ல நாளில் ராணிக்குக் குழந்தை பிறந்தது. ரொம்ப அழகான பெண் குழந்தை. பிறந்ததும் குழந்தை அழ வேண்டுமே! அதுதான் இல்லை. குவா, குவா என்று அழுவதற்குப் பதிலாக, அது களுக், களுக்கென்று சிரித்தது. சிரிப்பு என்றால் அப்படி ஒரு கொள்ளைச் சிரிப்பு. சிரிக்கும்போது, குழந்தையின் இரு கன்னங்களிலும் அழகான குழிகள் விழுந்தன. சிரிப்புப் பூவாக மலர்ந்தது.

---

**''அவன் ஏன் பாதி நேரம் கூவிகிட்டே இருக்கான்?''**

**''ஏதோ 'அறை கூவல்' விடறானாம்!''**

**– சக்தி. சரவணன்**



ராணியும் சேடிகளும் மருத்துவச்சியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். முகத்தைக் கடுமையாக வைத்துக்கொண்டு, தங்கள் மகிழ்ச்சியை மறைத்துக் கொண்டனர். குழந்தை இப்படி பிறந்தவுடன் சிரிக்கிறதே என்று ராணிக்கு அச்சமாக இருந்தது. ராஜா என்ன சொல்வாரோ, குழந்தையை என்ன செய்வாரோ என்பதான அச்சம்.

குழந்தை பிறந்துள்ள செய்தி கேள்விப் பட்டு, பார்ப்பதற்காக ராஜா வந்தார். ராணியும் சேடிப் பெண்களும் பயத்துடன் விலகி நின்றனர்.

தொட்டிலில் பூமாலை போலக் கிடந்த குழந்தையை ராஜா பார்த்தார். சந்தோஷமாக இருந்தது அவருக்கு. லேசாகக் கன்னத்தைத் தொட்டார். 'களுக்'கென்று சிரித்தது குழந்தை.


ராணியும் சேடிப் பெண்களும் நடுங்கினர்.


அப்போது அந்த அதிசயம் நிகழ்ந்தது. ராஜாவின் மூளையில் சிரிப்புப் பகுதி, குழந்தை மீதுள்ள பாசத்தால், சட்டென்று திறந்து கொண்டது. தன்னையும் அறியாமல் ராஜா சிரித்தார். கடகடவென்று கொட்டும் மழையாகச் சிரித்தார். உடல் குலுங்கச் சிரித்தார். இத்தனை காலமாக சிரிக்காது சேர்த்து வைத்திருந்த அத்தனை சிரிப்பையும் சிரித்துச் சிரித்துக் கொட்டித் தீர்க்கத் தொடங்கினார்.

ராஜாவின் சிரிப்பைக் கண்டு ராணிக்கு ரொம்ப சந்தோஷம். அவளும் லேசாகச் சிரிக்கத் தொடங்கி, பிறகு கலகலவென்று சிரிக்க ஆரம்பித்தாள். இதைப் பார்த்த சேடிப் பெண்கள் சிரித்தனர். அப்புறம் அரண்மனை அதிகாரிகள், பாதுகாவலர்கள் என்று அனைவரும் அரண்மனையுள் சிரிக்கத் தொடங்கினர்.

சில விநாடிகளில் இந்தச் சிரிப்பு சமாச்சாரம் அரண்மனைக்கு வெளியே பரவியது. ராணிக்குக் குழந்தை பிறந்திருப்பதும் அது பிறந்தவுடன் அழாமல் சிரித்ததும் அக் குழந்தையின் சிரிப்பைக் கண்டு ராஜா சிரித்ததும் ராஜாவின் சிரிப்பைப் பார்த்து ராணி சிரித்ததும், ஊர் மக்களுக்கு, பிறகு நாட்டு மக்களுக்குத் தெரிந்தது. உடனே அவர்களும் சிரிக்கத் தொடங்கினர்.

# குறுக்கெழுத்துப் புதிர்



## இடமிருந்து வலம்

1. வரிசை மாறாமல் செல்லும் இந்தப் பூச்சி சுறுசுறுப்பிற்கும் கடின உழைப்பிற்கும் உதாரணம் (4)

3. திமிங்கலத்திற்கு உறவு. இது மிகவும் சாதுவானது. புத்திசாலியானது (4)

8. பருப்புகளில் இந்தச் சத்து அதிகம் (4)

## வலமிருந்து இடம்

6. லட்சக்கணக்கான இந்த இழைகள் சேர்ந்தது ஓர் ஆடை (2)

7. துவர்ப்புச் சுவையுடைய இது வெற்றிலையுடன் சாப்பிடப்படும் (3)

11. இரும்பை ஈர்க்கக் கூடிய உலோகம் (4)

12. கார்த்திகை மாதம் இது வீடெங்கும் ஏற்றப்படும் (3)

13. இலை, காய், கனி, கிழங்கு என அனைத்து பாகமும் பயன்படக் கூடிய உயரமான மரம் (2)

15. பழங்களில் ஒன்று. காஷ்மீரில் அதிகம் விளைகிறது (4)

16. உலக அதிசயங்களில் ஒன்றான தொங்கும் தோட்டம் இங்கு இருந்தது (4)

**விடை 67 ஆம் பக்கம்**

## மேலிருந்து கீழ்

1. கேரளத்தின் இரட்டை நகரங்களில் ஒன்று (6)

2. தொடர்ந்த காற்றும் மழையும் இதுக்கான அறிகுறி (3)

8. சிங்கத்தை விட உறுதி வாய்ந்த விலங்கு (2)

10. ஆடை நெய்யப் பயன்படும் சாதனம் (2)

13. இதை எதிர்பார்க்காமல் உதவி செய்ய வேண்டும் (3)

14. கொடுக்கில் விஷமுடைய பூச்சி. தென்னை மரங்களில் அதிகம் காணப்படும் (2)

## கீழிருந்து மேல்

4. இனிப்புச் சுவையற்ற குளிர்பானம் (2)

5. ஔவைக்கு இது விழுந்திருக்கும் (2)

9. ஆடு, மாடுகளின் உணவு (2)


11. கல்கத்தாவில் பிரசித்தி பெற்ற தெய்வம் (2)

15. உத்தரவு என்பதை இப்படியும் அழைக்கலாம் (2)

16. ஜோர்டான் நதி ஓடும் நாடு (6)

— க. தமிழ்ப் பொழில்,
ஆதனூர் அஞ்சல்,
நீடாமங்கலம் தாலுகா








● ந. கலாமணி, குமாரப்பாளையம்.
● ஆர். வேங்கடேஷ், குத்தாலம் - 1.

*? உடல் எப்பொழுதும் சூடாக இருக்க என்ன காரணம்? உடலில் உள்ள சூட்டைக் குறைக்க என்ன செய்ய வேண்டும், டாக்டர்?*

! எப்படி ஒரு இரண்டு சக்கர வாகனத்தில் பெட்ரோல் ஒரு எரிபொருளாகப் பயன்பட்டு அதன் இயக்கத்திற்குத் தேவையான சக்தியைத் தருகிறதோ, அப்படியே நம் உடலில் உள்ள ஒவ்வொரு அணுவிலும் உணவு எரிக்கப்படும் பொழுது குறிப்பிட்ட அளவில் வெப்பம் வெளிப்பட்டு சக்தியைத் தருகிறது. இதுதான் உடல் சூடாக இருப்பதற்கு அடிப்படைக் காரணம். உழைப்பின்மை, இயக்குநீர்க் கோளாறுகள், மனப்பிரச்னைகள், உணர்ச்சிவசப்படுதல் போன்றவை உடல் வெப்பத்தை அதிகரிக்கக்கூடியவை. இக்கோளாறுகள் உள்ளவர்களுக்கு உடல் கதகதப்பாக இருக்கும். ஆனால், வெப்பமானியில் இயல்பான அளவைக் காண்பிக்கும். முறையான உடற்பயிற்சி, காய்கறிகளும் பழங்களும் நிறைந்த உணவு, போதிய ஓய்வு, தியானம் ஆகியவை உடல்சூட்டைக் குறைக்க உதவும்.

# இதயம் வேகமாகத் துடிப்பது ஏன்?

● எம். ஸ்கூவ், சத்துவாச்சேரி.

*? அதிர்ச்சியான தகவல்களைக் கேட்கும் போது இதயம் வேகமாகத் துடிக்கிறதே... ஏன் டாக்டர்?*

! அதிர்ச்சியான தகவல் மூளைக்கு வந்து சேரும் பொழுது மூளை சில நொடிகளுக்கு என்ன செய்வதென்று தெரியாமல் ஸ்தம்பித்துவிட, உடல் இயக்கத்தில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்கின்றன. குறிப்பாக, உயிர் காக்கும் உறுப்புகளுக்கு ரத்தம் செல்வது தடைபடுகிறது. இதன் விளைவாக 'அவசர காலச் சுரப்பி' என்றழைக்கப்படுகின்ற அட்ரீனல் சுரப்பியிலிருந்து 'அட்ரீனலின்' என்னும் இயக்குநீர் சுரக்கிறது. இது இதயத் துடிப்பை அதிகரிக்கச் செய்கிறது; தோல் மற்றும் ரத்தநாளங்களைச் சுருக்கி புறரத்த ஓட்டத்தைக் குறைத்து, இதயம், மூளை, கல்லீரல், நுரையீரல், சிறுநீரகம் போன்ற முக்கிய உறுப்புகளுக்கு ரத்தம் தடையின்றி செல்ல உதவுகிறது. மேற்சொன்ன செயல்களின் முதல்படியாக இதயத் துடிப்பு அதிகரிப்பதுதான், இதயம் வேகமாகத் துடிப்பதற்குக் காரணம்.

● ஒ.சே. அறிவழகன், திருப்புவிவனம்.

*? சனி பிடித்திருக்கும் போது காது சரியாகக் கேட்பதில்லை. ஏன் டாக்டர்?*

! மனிதக் காது மூன்று பாகங்களைக் கொண்டது. அவை 1. வெளிக்காது, 2. நடுக்காது, 3. உட்காது. காது மடலும் செவித்துளையும் வெளிக்காதைச் சேர்ந்தவை. செவித்துளை செவிப்பறையில் முடியும். செவிப்பறைக்குப் பின்புறம் நடுக்காது உள்ளது. இதில் செவிச் சிற்றெலும்புகள் உள்ளன. இவற்றின் தொடர்ச்சியாக உட்காது அமைந்துள்

ளது. அதில் நத்தை எலும்பும் அரை வட்டக் குழல்களும் அடக்கம். இவை தவிர, நடுக்காதையும் தொண்டையையும் 'காது தொண்டை இணைப்புக் குழல்' (EUSTACHIAN TUBE) இணைக்கிறது. காது சரியாகக் கேட்க வேண்டுமென்றால் இந்தக் குழல் ஒழுங்காக இருக்க வேண்டியது முக்கியம். நமக்கு சளி பிடிக்கும் போது காது தொண்டை இணைப்புக் குழல் உட்பக்கமாக வீங்கி அடைத்துக் கொள்வதால் செவிச் சிற்றெலும்புகள் ஒலியைக் கடத்துவதற்கு சிரமப்படுகின்றன. விளைவு காது மந்தமாகக் கேட்கிறது அல்லது காது அடைத்துக் கொள்வது போன்றதொரு உணர்வைத் தருகிறது.



● சிந்துஜா, பொறையார்.

*? 'BLACK HEADS' என்று டீ.வி.யில் விளம்பரம் காண்பிக்கிறார்கள். அப்படியென்றால் என்ன டாக்டர்? இதுவும் மருவும் ஒன்றா? எப்படி ஏற்படுகிறது?*

! BLACK HEADS என்பது பருக்களைக் (PIMPLES) குறிக்கும்; மருக்களை (WARTS) அல்ல! பருக்களின் மேற்பகுதித் தோல் கருப்பாகத் தோன்றுவதால் பருக்களுக்கு ஆங்கிலத்தில் இப்படியொரு பெயர் உண்டானது. பருக்கள் வருகின்ற விதம் பற்றிச் சென்ற இதழில் விரிவாகக் கூறியுள்ளேன். படித்துக் கொள், சிந்துஜா!

● என். ராஜி, மேலப்பாதி.

*? வெட்டுக்காயம் ஏற்பட்டு விட்டால் டாக்டரிடம் செல்வதற்கு முன்பு வீட்டில் நாம் செய்ய வேண்டிய முதலுதவி என்ன, டாக்டர்?*


! சுத்தமான துணியால் காயத்தை சுத்தப்படுத்த வேண்டும்; ஈரத்துணியால் காயத்திற்குக் கட்டுப் போட வேண்டும்; காயத்தில் ரத்தக் கசிவு தொடர்ந்து இருக்குமானால், காயம் ஏற்பட்டுள்ள உடல் பாகத்தை உயர்த்திப் பிடிக்க வேண்டும். சிறு காயமென்றால் காயத்தை சுத்தப்படுத்தியதும் மருந்து பிளாஸ்டரை அதன் மேல் ஒட்டி விடலாம்; பெரிய காயமென்றால் சில நேரங்களில் தையல் போட வேண்டியது வரும்; அதற்கு மருத்துவரின் உதவி தேவைப்படும்.



● செ. சரவணக்குமார், சாத்தூர்.

*? நாம் உள்ளிழுக்கும் காற்று நுரையீரல், இதயம், உதர விதானம் போன்ற மார்பக உறுப்புகளைத்தானே சென்றடைகிறது. பிறகு ஏன் டாக்டர் வயிறு எழுந்து எழுந்து இறங்குகிறது?*

! நாம் உள்ளிழுக்கும் மூச்சுக் காற்று நுரையீரல்களுக்கு மட்டுமே செல்லும். இதயம், உதரவிதானம் ஆகியவற்றுக்குச் செல்வதில்லை. மூச்சு இயக்கத்தின் போது மார்புத் தசைகள் விரிவதும் சுருங்குவதுமாக இருக்கும்; மார்பையும் வயிற்றையும் பிரிக்கின்ற உதரவிதானம் மேலும் கீழுமாக விரிந்து சுருங்கும். ஆகையால்தான் உதரவிதானத்தை ஒட்டியுள்ள வயிற்றுத்தசைகளும் சுவாசத்தின் போது ஏறி இறங்குகின்றன. புரிந்ததா, சரவணகுமார்?



● ஆர். வேங்கடேஷ், குத்தாலம் – 1.

*? எந்த வயது முதல் 'யோகா' பயிற்சிகளை மேற்கொள்ளலாம், டாக்டர்?*

! ஐந்து வயதிலிருந்து! காரணம், இந்த வயதில், உடலில் உள்ள குருத்தெலும்புகளில் (CARTILAGES) சுமார் 80 சதவீதம் முழு எலும்பாக வளர்ச்சி பெற்றிருக்கும்; அப்போதுதான் யோகா பயிற்சிகளை முறைப்படி செய்ய இயலும். இந்த வயதிற்கு முன்பு யோகா செய்தால் எலும்புகளின் வளர்ச்சியிலும் அமைப்பிலும் மாறுதல்கள் உண்டாக நிறைய வாய்ப்புகள் உள்ளன. ◎

**டாக்டர். கு. கணேசன்**

# பலகார மழை!


கதை: ஹமிதா உபைத்,
பதினோராம் வகுப்பு, இமாம்
கஸ்ஸாலி மெட்ரிக் பள்ளி,
லால்பேட்டை.
படம்: மகேஸ்





ஓணான் ஒத்துக் கொள்ள முத்து முள்ளை எடுத்து விட்டான்.
ரொம்ப நன்றி. அந்த ஆல மரத்தடியில் ஆட்டைக் கட்டு. அந்தப் புதருக்குள் இருக்கும் பணத்தை எடுத்துக்க.
உனக்கு ரொம்ப நன்றி.
முத்து புதரிலிருந்த பணமூட்டையைப் பிரித்தான்.
நூறு ரூபாய் போதும்.
வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.
அம்மா இந்தாங்க நூறு ரூபாய்.
நோய் பிடித்த ஆட்டுக்கு எந்த மடையன் நூறு ரூபாய் கொடுத்தான்?
முத்து நடந்ததைக் கூறினான்.
அட முட்டாளே! கிடைச்ச பணத்தை விட்டுட்டு வந்துட்டியே! சரி கோணிப்பையை எடுத்துட்டு வா.


ஆலமரத்தை அடைந்தனர்.
பணத்தையெல்லாம் போடு. நல்லவேளை யாரும் பார்க்கலே. சீக்கிரம் நட.
வீட்டில்—
முத்து இந்த விஷயத்தை யாரிடமும் சொல்லாதேடா.
சரிம்மா!
மறுநாள் முத்து ஆடு மேய்க்கும் போது—
முத்து நேத்து உன்னைக் காணோமே?
பணப் புதையல் எடுக்க எங்கம்மா கூட போயிட்டேன்.
இரவு வீட்டில்—
யார்கிட்டேயும் சொல்லாதேன்னு சொன்னேன். முத்து சொல்லித் தொலைச்சிட்டானே.
நாளைக்குப் பஞ்சாயத்தார் விசாரிப்பாங்களே! என்ன பண்ணலாம்?
பொன்னம்மாளுக்குத் திடீரென ஒரு யோசனை வந்தது.
ம்.. அதுதான் சரி.


நள்ளிரவில்—
முத்து முழிச்சிப்பாருடா.
என்னம்மா? ஆ... வாசலில் பலகாரமா இருக்கு!
இன்னிக்கு பலகார மழை பெய்ததுடா.
அப்படியா!
மறுநாள். பஞ்சாயத்தில்—
பொன்னம்மா பணப் புதையல் கிடைச்சுதா?
ஐயா இல்லைங்க!
நீ சொல்லமாட்டே முத்து உண்மையைச் சொல்.
ஆமாங்க ஐயா!
என்னிக்கு எடுத்தீங்க?
பலகார மழை பெய்த முதல் நாள்.
பலகார மழையா?
ஆமாம். லட்டு, முறுக்கு, அதிரசம், வடையெல்லாம் பெய்ததே!
எல்லோரும் சிரித்தனர்.
நல்ல வேடிக்கை! இவன் பேச்சை நம்பி பஞ்சாயத்துக் கூட்டினோமே. எல்லோரும் போங்க.
வரேன் ஐயா!

# புதிர் உலகம்

**I.** ராசப்பருக்கு மூன்று புதல்வர்கள். மூவரும் ஒருவரை ஒருவர் மிஞ்சியவர்களாகத் திகழ்ந்தனர். ராசப்பருக்கு வயது ஆகிக் கொண்டே சென்றது. ஒருநாள் உடல்நிலை பாதிக்கப்பட்டு படுக்கையில் வீழ்ந்து விட்டார். மூன்று புதல்வர்களுக்கும் ஒரே கவலை. அவர் தன் மகன்களை அருகில் அழைத்து தான் இறந்த பின் தன் கட்டிலுக்குக் கீழே உள்ள பெட்டியில் தங்கக் கட்டிகள் உள்ளன. அவற்றை மூவரும் சமமாகப் பிரித்துக் கொள்ளும்படி கூறிவிட்டு இறந்து விட்டார். பின்னர் மூவரும் அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தனர். அதில் கால் கிலோ, அரை கிலோ, முக்கால் கிலோ என 8 தங்கக் கட்டிகள் இருந்தன. அவற்றில் கால் கிலோ, அரை கிலோ, முக்கால் கிலோ கட்டிகள் எத்தனை இருந்தன? அவற்றை அவர்கள் எப்படிச் சமமாகப் பிரித்துக் கொண்டனர்?

— பி. சதீஷ்குமார்,
திருப்பூர் – 4.

**II.** ஒருநாள் என் தம்பி என்னிடம் வந்து, "அண்ணா! ஒரு புதிர் கணக்குப் போடுகிறேன். செய்கிறாயா?" என்றான். "சரி சொல்" என்றேன் நான். அவன் சொன்ன புதிர் இதுதான்!

"அண்ணா! நான் இங்கு மூன்று கட்டங்கள் வரைந்துள்ளேன். நீங்கள் சில கற்களை வைக்க வேண்டும். முதல் கட்டத்தில் பாதி கற்களையும், கூடுதலாக ஒரு கல்லையும் வைக்க வேண்டும். இரண்டாவது கட்டத்தில், முதலாவது கட்டத்தில் வைத்தது போக மீதி உள்ளதில் பாதியும், கூடுதலாக ஒரு கல்லையும் வைக்க வேண்டும். இதேபோல் மூன்றாவது கட்டத்திலும் வைக்க வேண்டும். கடைசியில் உங்களிடம் ஒரு கல் மட்டும் மிச்சம் இருக்க வேண்டும். அப்படியென்றால் நீங்கள் எத்தனை கற்களை எடுத்திருப்பீர்கள்?" என்றான். நானும் முயற்சித்து விடை கொண்டு வந்தேன். எங்கே நீங்களும் முயற்சிக்கலாமே!

— து. கார்த்திகேயன்,
கோவில்பட்டி.

## III. எண் விளையாட்டு

1X8+1 = 9
12X8+2=98
123X8+3=987
1234X8+4=9876
12345X8+5=98765
123456X8+6=987654
1234567X8+7=9876543
12345678X8+8=98765432
123456789X8+9=987654321

37X3=111
37X6=222
37X9=333
37X12=444
37X15=555
37X18=666
37X21=777
37X24=888
37X27=999

— ஆர். வேங்கடசுப்பிரமணியன்,
விருதுநகர்.

## IV. தந்திரக் கணக்கு

பழைய புத்தக வியாபாரியிடம் இந்திய வரலாறு; தமிழக வரலாறு, சேரன் வரலாறு, சோழன் வரலாறு, பாண்டியன் வரலாறு ஆகிய ஐந்து வகைப் புத்தகங்கள் விற்பனைக்குத் தயாராக இருந்தன. இந்திய வரலாறு 5.00 ரூபாய்; தமிழக வரலாறு 3.00 ரூபாய், சேரன் வரலாறு 1.00 ரூபாய், சோழன் வரலாறு 50 பைசா; பாண்டியன்

வரலாறு 0.25 பைசா. வாங்கிய புத்தகங்களின் விலை 100 ரூபாய். வாங்கிய புத்தகங்களின் எண்ணிக்கையும் 100. அப்படியானால் ஒவ்வொரு வகைப் புத்தகங்களிலும் வாங்கியவை எத்தனை?

மேற்கூறிய புத்தகங்கள் புதிய பதிப்பில் கடையில் தற்போது வகையே 50.00 ரூபாய்; 30.00 ரூபாய், 10.00 ரூபாய், 5.00 ரூபாய், 2.50 ரூபாய் ஆகின்றன.

பழைய பதிப்பாக இருந்தால் 100.00 ரூபாய்க்கு 100 புத்தகங்கள் கிடைக்கும். புதிய பதிப்பாக இருந்தால் 1000.00 ரூபாய்க்கு 100 புத்தகங்கள்தான் கிடைக்கும். அப்படியானால் நான் ஒவ்வொரு வகையிலும் வாங்கிய புத்தகங்கள் எத்தனை?

– ஏ. ஜோதி மோகன்,
திருவாரூர்.

## V. நினைத்த எண்ணைச் சொல்லலாம்

உங்கள் நண்பரை 2--லிருந்து 10-க்குள் ஒரு எண்ணை நினைத்துக் கொள்ளச் சொல்லுங்கள். நினைத்த எண்ணை அதே எண்ணால் பெருக்கச் சொல்லுங்கள். பிறகு நினைத்த எண்ணிலிருந்து 1-ஐ கழிக்கச் சொல்லவும். வந்த விடையை அதே எண்ணால் பெருக்கச் சொல்லுங்கள். முதலில் பெருக்கிய எண்ணிலிருந்து இப்போது பெருக்கிய விடையைக் கழிக்கச் சொல்லவும். வந்த விடையுடன் ஒன்றைக் கூட்டி என்ன எண் வருகிறது எனக் கேளுங்கள். அவர் சொல்லிய எண்ணை 2-ஆல் வகுத்து விடையைச் சொல்லுங்கள். அது உங்கள் நண்பர் நினைத்த எண்ணாக இருக்கும்.

– ப. காளிதாசன், புதுக்கோட்டை.



## விடைகள் :

I. மூன்று ¾ கிலோ கட்டிகள், நான்கு ½ கிலோ கட்டிகள், ஒரு ¼ கிலோ கட்டி. மொத்தம் 8 கட்டிகள்.

முதல் புதல்வன் = ¾+¾=1½ கிலோ
2-வது புதல்வன் = ¾+½+¼ =1½ கிலோ
3-வது புதல்வன் = ½+½+½=1½ கிலோ
மொத்தம் 8 கட்டிகள்.

II. கற்கள் : 22
விளக்கம் :
முதல் கட்டத்தில் = 11+1
இரண்டாவது கட்டத்தில் = 5+1 (12 போக மீதி 10)
3-வது கட்டத்தில் = 2+1
(18 போக மீதி 4)
மீதி அவனிடம் இருப்பது 4-3=1

IV. 5+9+20+46+20=100 புத்தகங்கள்.

| | | |
|---|---|---|
| இந்திய வரலாறு | 5.00X5 | = 25.00 |
| தமிழக வரலாறு | 3.00X9 | = 27.00 |
| சேரன் வரலாறு | 1.00X20 | = 20.00 |
| சோழன் வரலாறு | 0.50X46 | = 23.00 |
| பாண்டியன் வரலாறு | 0.25X20 | = 5.00 |
| மொத்தம் | 100 | =100.00 |

| | | |
|---|---|---|
| | 50.00X5 | = 250.00 |
| | 30.00X9 | = 270.00 |
| | 10.00X20 | = 200.00 |
| | 5.00X46 | = 230.00 |
| | 2.50X20 | = 50.00 |
| மொத்தம் | 100 | =1000.00 |

V. நினைத்த எண் 7 எனில்
7X7 = 49
7-1 = 6
6X6 = 36
49-36 = 13
13+1 = 14 ÷ 2 = 7

# யார் சிறந்த பக்தன்?

சந்திர வம்சத்து அரசன் ரந்திதேவன். இல்லை என்ற சொல்லே அவனிடம் இல்லை. நீதி நெறியோடு அரசாண்டவன். ஏராள மான யாக யக்ஞங்கள் செய்தான். முப் போகம் விளைந்து நாடு செழிப்பாக இருந்தது.

இந்திராதி தேவர்களும் பிரம்மாவும் ஒருநாள் வைகுண்ட வாசனைத் தரிசிக்க வந்தனர்.

"யார் சிறந்த பக்தன்?" என்ற கேள்வி எழுந்தது. ''சந்தேக மென்ன? இப்போது பூலோகத் திலிருப்பவர்களில் ரந்தி தேவனே சிறந்தவன்'' என்றார் திரு மால்.

''எதை வைத்து அப்படிச் சொல்கிறீர்கள்? கொடையாளி என்பதாலா?'' என்று கேட்டார் பிரும்மா.


''அவன் சுயநலமற்ற தரும வான். தான் மேன்மையானவன் என்ற கர்வமே அவனிடம் கிடை யாது'' என்று உறுதியாகச் சொன் னார் விஷ்ணு.

"சோதித்துப் பார்க்கலாமா?" என்று கேட்டான் இந்திரன். "தாராளமாக! நெருப்பில் போட் டாலும் தங்கம் கறுக்காது!'' என்று கூறினார் ஸ்ரீஹரி.

இந்திரன் ரந்திதேவன் ஆட் சிக்குட்பட்ட நாடுகளில் மழை பெய்யாது தடுத்து விட்டான். நாட்டில் பஞ்சம் தலை விரித்தாடியது. நிலங்கள் பாளம் பாளமாக வெடித்துக் கிடந்தன.

ரந்தி தேவன் பொக்கிஷம் காலி யாகும்வரை அன்னதானம் செய்தான். மக்களெல்லாம் செழிப்பான வேறு ஊர்களுக்குக் குடியேறினர். ரந்தி தேவனிடம் விற்பதற்கு ஒரு பொருளும் இல்லை.

ஆர். பொன்னம்மாள்



ஒரு மண்டலம் - (நாற்பத்தெட்டு நாட்கள்) உபவாசம் இருப்பதாக வேண்டிக் கொண்டு நீரும் அருந்தாமல் பட்டினி கிடந்தான்.

நாட்டிலே ஒரு காக்கை கூட இல்லை. பூமியிலும் புழு, பூச்சி கிடையாது. 49-வது நாள் கண் விழித்தான் ரந்தி தேவன்.

அப்போதும் பகவான் அருள் புரியவில்லையே என்று பரந்தாமனைத் திட்டவில்லை. 'அந்த அளவு என்ன தப்பு எப்போது செய்திருக்கிறோம்' என்று யோசித்தான்.

அப்போது இந்திரன் துறவி வடிவில் ஒரு பாத்திரத்தில் கோதுமைக் கஞ்சியும் குவளையில் தண்ணீரும் கொடுத்து; "பாரணை பண்ணு" என்று சொல்லிச் சென்றார்.

"ஆஹா! பகவானுக்கு என் மீது கருணை பிறந்திருக்கிறது!" என்று ஆனந்தப்பட்ட ரந்தி தேவன் கண் மூடி இறைவனை தியானித்த பிறகு கஞ்சி குடிக்க முற்பட்டான்.

அப்போது பிரம்மா ஒரு வேதியர் வடிவில் வந்து "ஸ்வாமி! சாப்பிட்டு ஒரு வாரமாகிறது. பசிக்கு ஏதாவது கிடைக்குமா?" என்றார்.

அன்போடு முகமலர்ந்து "உட்காருங்கள்" என்று உபசரித்தார் ரந்தி தேவன். "இந்தாருங்கள். வேண்டியது சாப்பிடுங்கள்" என்று பாத்திரத்தோடு கொடுத்து விட்டான்.

பிரம்ம வேதியர் பாதியைக் குடித்து விட்டு "போதும். ரொம்பத் திருப்தி" என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டார்.




நேரே இந்திரனிடம் சென்று "பெருமாள் சொன்னது ரொம்பப் பொருத்தமானது. முன்னே பின்னே தெரியாத பரதேசிக்கு ஒரு மண்டலம் பட்டினி கிடந்தவன் அப்படியே தூக்கிக் கொடுத்து விட்டான்" என்று புகழ்ந்தார்.

இந்திரன் "நீங்கள் அந்தணர் என்பதால் இரக்கம் காட்டி இருப்பான். பஞ்சமனாகப் போகிறேன்" என்றபடி பார்க்க அருவறுப் பூட்டும் கோலத்தில் நான்கு சொறி நாய்களையும் பிடித்துக் கொண்டு, "சாமி! பசியிலே உயிர் போய் விடும் போலிருக்கிறது. ஏதாச்சும் கிடைக்குமா?" என்று கெஞ்சினான்.

"ஆஹா! நான் சாப்பிட்டிருந்தால் உன் பசியை எப்படிப் போக்கியிருப்பேன்!" என்றபடி அவனிடமும் பாத்திரத்தோடு கஞ்சியைக் கொடுத்தார்.

"சாமி! உங்களுக்கு கொஞ்சம் கூட வைச்சுக்கலியே" என்று கேட்டான் பஞ்சமன்.

"இந்தக் கஞ்சியை யாரோ



''எங்க வகுப்புல தாமோதரன் தினமும் பள்ளிக்கு லேட்டா வர்றாண்டா!''

''அதனால்தான் அவன் நண்பர்கள் அவனை 'தாமத'ரன்னு கூப்பிடறீங்களா?''

— பா. ஜெயக்குமார்

கொடுத்தார். இது எனக்குச் சொந்தமில்லாதது. இன்னும் சில நாள் விரதம் அனுஷ்டிக்க பகவான் எனக்குச் சொல்லி இருப்பதாக நினைத்துக் கொள்வேன். உன் வயிறு நிறைந்தால் என் வயிறு நிறைந்தாற் போல் ஆகும்'' என்று அன்போடு கூறினான் ரந்தி தேவன்.

பஞ்சமன் அதில் பாதியைக் குடித்தான். மீதியை நான்கு நாய்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்தான்.

"நாய்களுக்கும் ரொம்பப் பசி" என்று சமாதானமும் சொன்னான். நாய்கள் கஞ்சி குடித்த பிறகு ரந்திதேவன் முன் காலிப் பாத்திரத்தை வைத்து விட்டுப் போனான் பஞ்சமன் வடிவில் இருந்த இந்திரன்.

பிரம்மாவிடம் சென்று ''நீங்கள் சொன்னது நூற்றுக்கு நூறு சரி. நாம் தோற்றுவிட்டதை வைகுண்டம் போய் சொல்லலாம்'' என்று புறப்பட்டான் இந்திரன்.

யமன் அவனைத் தடுத்து "அவசரப் படாதீர்கள்! எதையும் மூன்று முறை சோதிப்பதே சிறந்தது. இப்போது நான் போகிறேன்'' என்று புறப்பட்டான்.

எப்படி? சிக்குப் பிடித்த தாடியும் தலையும்! அதில் பேன்கள் ஊர்ந்தன. ஒருகால் குட்டை. தாங்கிப் பிடிக்க ஒரு கம்பு. காலில் பிய்ந்த செருப்புகள். இடுங்கிய கண்களில் பீளை.

"சாமி! தாகம் நாக்கை வறட்டுது. கொஞ்சம் தண்ணி கிடைக்குமுங்களா?" என்று ஈனஸ்வரத்தில் கேட்டான் யமன்.

'இந்தா! குடி!' என்று குவளையை நகர்த்தினான் ரந்தி தேவன்.


யமன் பேசாமல் திரும்பி நடந்தான் "ஏனப்பா போகிறாய்? தாகம் என்றாய்!'' ஆற்றாமையோடு எழுந்து குவளையுடன் அவன் அருகில் வந்தான்.

"ஐயோ! சாமி! கிட்ட வராதீங்க! நீங்க ஒசந்த ஜாதி!நான் சேரி வாசி! பாத்திரத்தைத் தொட்டா தீட்டாயிடும்" என்று விலகினான் யமன்.

''மழைக்கும், காற்றுக்கும் தீட்டு உண்டா! உன் மேல் வீசுகிற காற்றுதான் என் மேலும் வீசுகிறது. உனக்கொரு மழை. எனக்கொரு மழையா பெய்கிறது! நீ விறகொடிக்கிறாய்! அதை எரித்து நான் சமையல் செய்கிறேன். நீ தொட்ட விறகை நான் கழுவினால் ஈரமாகி எரியாதே! நீ போட்ட விதை முளைத்து அரிசியானால் அதைச் சாப்பிடலாமா? அது தீட்டில்லையா?'' என்ற ரந்தி தேவன் அவன் கையில் பாத்திரத்தைத் திணித்தான்.

அப்போது ஆகாயத்தில் கரு மேகங்கள் திரண்டு இடி இடித்து, மின்னல்கள் கண்ணைப் பறிக்க மழை பிரளயமெனக் கொட்டியது.

மும்மூர்த்திகளும் தோன்றி ரந்தி தேவனை ஆசீர்வதித்தார்கள். இந்திரனும், யமனும் தங்கள் தோல்வியை ஒப்புக்கொண்டனர். சோதனை ஏற்படினும் லட்சியத்தைக் கைவிடாத ரந்தி தேவன் பெருமையை வானோரும் போற்றிப் புகழ்ந்தனர்.







# முடியாது!





- கங்காருவால் நான்கு கால்களால் நிற்க முடியாது.
- நாம் தும்முவதை நம்மால் கண்ணாடியில் கூட பார்க்க முடியாது.
- துருவப் பிரதேசத்தில் புறாக்களால் வாழ முடியாது.
- சாதாரண துப்பாக்கிக் குண்டுகளால் நீர்யானையின் தோலை ஊடுருவ முடியாது.
- ஆப்பிரிக்க யானைகளை வேலைகள் செய்யப் பழக்க முடியாது.
- ஆஸ்ட்ரிச் பறவையால் பறக்க முடியாது.
- பூனைகளால் இனிப்புச்சுவையை அறிய முடியாது.
- முட்டைக்கருவை நோய்க் கிருமிகளால் தாக்க முடியாது.
- கண்ணீர்ப் புகைக் குண்டால் குதிரைக்கு பாதிப்பு ஏற்படுத்த முடியாது.
- தேள்களால் ஓசையைக் கேட்க முடியாது.
- பெங்குவின் பறவைகளால் பறக்க முடியாது.
- முதலையால் தனது கீழ்த்தாடையை அசைக்க முடியாது.
- ஒட்டகத்தால் நீந்த முடியாது.
- குதிரையால் படுத்து உறங்க முடியாது.
- மீன்களால் கண்ணை மூடித் தூங்க முடியாது.




– சா. ஆனந்தகுமார்
தோட்டக்கலை
ஆராய்ச்சி நிலையம்,
பேச்சிப் பாறை
குமரி மாவட்டம்.






# டெஸ்ட் போட்டிகளில் பிரகாசித்தவர்கள்!



• இயன்ஹீலி

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவிற்கு வந்து இந்திய அணியோடு மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாடியது. இதில் இரண்டு டெஸ்ட் போட்டிகள் டிராவில் முடிந்து விட்டன. ஒரு போட்டியில் இந்தியா வென்று தொடரைக் கைப்பற்றிக் கொண்டது. இந்த டெஸ்ட் போட்டிகளில் இந்திய வீரர்கள் சிலர் தனிப்பட்ட சாதனைகளைப் படைத்துள்ளனர்.

முதுகுவலியால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுத் திரும்பிய கேப்டன் சச்சின் மூன்று டெஸ்ட் போட்டிகளிலுமே சிறப்பாக ஆடினார். நியூசிலாந்திற்கு எதிரான இந்த மூன்று டெஸ்ட் போட்டிகளில் மட்டும் 2 சதங்கள் அடித்திருக்கிறார். இத்துடன் டெஸ்ட் போட்டிகளில் அவர் எடுத்துள்ள சதங்களின் எண்ணிக்கை 21. இத்தனை சதங்களை எடுத்துள்ள சச்சின் முதல் முறையாக இரட்டைச் சதத்தை இந்தத் தொடரில் அடித்திருக்கிறார்.



பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்டில் ஒரே இன்னிங்ஸில் பத்து விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்த அனில் கும்ப்ளே இந்தத் தொடரில் 250 விக்கெட்டுகளை எட்டியிருக்கிறார். கபில் தேவ் 434(131



• திருநாவுக்கரசு குமரன்

• ஸ்ரீநாத்



• அனில் கும்ப்ளே

டெஸ்ட்), பிஷன் சிங் பேடி 266 (67 டெஸ்ட்) ஆகியோருக்கு அடுத்து 55 டெஸ்ட்களில் 250 விக்கெட்டுகளை எடுத்த கும்ப்ளே மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறார்! இந்த டெஸ்ட் தொடரின் தொடர் நாயகன் பரிசையும் வென்றார்.

இதேபோல் 40 டெஸ்ட்களில் விளையாடி 150 விக்கெட்டுகளை வீழ்த்திய ஸ்ரீநாத் ஒன்பதாவது இடத்தில் வருகிறார்.

சியட் சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் வரிசையில் முதல் மூன்று இடங் களை இந்திய வீரர்களே பிடித்திருக்கிறார்கள்! முதலிடம் சச்சின், இரண்டாவது கங்குலி, மூன்றாவது திராவிட்.

## ஓய்வு

ஆஸ்திரேலிய விக்கெட் கீப்பர் இயன்ஹீலி. முப்பத்தைந்து வயதாகும் இவர் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்து விட்டார். அனுபவம் வாய்ந்த சிறந்த ஆட்டக்காரரான இயன் ஹீலி ஓய்வு பெற நினைத்தது தன் கை விரல்களில் ஏற்பட்ட காயங்களினால்தான்.

பதினோரு ஆண்டுகள் ஆஸ்திரேலிய அணிக்காக விளையாடி இருக்கிறார். 119 டெஸ்ட்களில் விளையாடி 4356 ரன்கள் அடித்திருக்கிறார். இதுவரை 395 ஆட்டக்காரர்களை ஆட்டமிழக்கச் செய்திருக்கிறார். இதில் 366 கேட்சுகளும் 29 ஸ்டம்பிங்குகளும் அடக்கம். இவர் குணமடைய வாழ்த்துவோம்!

## புதியவர்

ஜனவரி மாதம் இந்திய அணி ஆஸ்திரேலியாவிற்குச் செல்கிறது. ஆஸ்திரேலியா அணியுடன் விளையாடும் போட்டிகளில் பங்கேற்க தமிழ்நாட்டைச் சேர்ந்த திருநாவுக்கரசு குமரன் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். ரமேஷைத் தொடர்ந்து இரண்டாவது இடம் பெறும் தமிழக வீரர். 24 வயதாகும் குமரன் வலது கை வேகப் பந்து வீச்சாளர். இந்த வாய்ப்பை எப்படி பயன்படுத்திக் கொள்கிறார் குமரன் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்! ஸ்ரீநாத், பிரசாத்துக்கு தற்காலிக ஓய்வு தேவைப்பட்டதால் குமரன் நியூசிலாந்து போட்டிகளிலேயே விளையாட இருக்கிறார்.



• டெண்டுல்கர்





உலகிலேயே மிகப் பெரிய பிராணி நீலத் திமிங்கலம் என்பது உங்களுக்குத் தெரியும். இது எவ்வளவு பெரிதாக இருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். இரண்டு யானை அளவு.. ம்... ஹூ"ம். பத்து ஆப்பிரிக்க யானைகளை நீலத்திமிங்கலத்தின் தலையில் இருந்து வால் வரை நிறுத்தி வைக்கலாம். அவ்வளவு பெரியது! இதன் கண்கள் கால் பந்து அளவில் இருக்கும்.

நீரில் வாழும் மீன் வடிவப் பாலூட்டிகள் சிட்டேசியா


**எஸ். சுஜாதா**




# மிகப் பெரிய பிராணி திமிங்கலம்!

என்னும் வரிசையைச் சேர்ந்தவை. டால்பின், பார்ப்பாய்ஸ், நார்வால், பலினா முதலிய பல வகைகள் திமிங்கலம் என்ற பெயரில் அடங்கும்.

படகு நடுப் பாகம் அகன்றும் முன்னும் பின்னும் குறுகியும் இருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதைப் போலவே திமிங்கலத்தின் தலையும் வாலும்





குறுகலாகவும் நடுப்பகுதி அகன்றும் காணப்படும். கழுத்து, தலைப்பகுதி வேறுபட்டிருக்காமல் உடலோடு தொடர்ச்சியாகக் காணப்படும்.

திமிங்கலத்தின் உடல் முடிகளற்று வழவழப்பாகக் காட்சி தரும். இவற்றிற்கு வியர்வைச் சுரப்பிகள் கிடையாது. தோலின் அடியில் கொழுப்புப் பொருள் தடித்த அடுக்காக அமைந்திருக்கும். உடல் முழுவதும் இந்தக் கொழுப்புப் பொருள் சூழ்ந்திருக்கும். வெப்பக் காலங்களில் உடலை வெப்பம் தாக்காமல் கொழுப்பு பாதுகாக்கும். அதே சமயம் உணவுப் பஞ்சம் ஏற்படும்போது உணவாகவும் இது பயன்படுகிறது.

உடலின் முன்புறம் இரு துடுப்புகள் உள்ளன. இவை நீந்துவதற்கு மிகவும் உதவி செய்கின்றன. முதுகின் மேற்புறத்தில் நீரைக் கிழித்துக் கொண்டு செல்லும் வகையில் ஒரு துடுப்பு இருக்கும்.

வால் துடுப்பு கிடைமட்டமாக இருப்பதால் ஆழத்திற்குப் போகவும் மேலே வரவும் முடிகிறது. வாலை வேகமாகக் கீழ் நோக்கி அடித்தால் மேலே செல்ல முடியும். மேல் நோக்கி அடித்தால் கீழே செல்ல முடியும். கப்பலுடன் போட்டி போட்டுக் கொண்டு நீந்துவதென்றால் திமிங்கலங்களுக்கு மிகவும் விருப்பம்.

இவற்றிற்குப் புறச்செவி கிடையாது. ஆனால் மிகச் சிறிய செவித்துளை உண்டு. நீரில் உண்டாகும் அதிர்ச்சிகள் தலையிலுள்ள எலும்புகள் வழியாகவும் மற்ற திசுக்கள் வழியாகவும் செவியைச் சென்றடையும்.

கண்கள் சிறியவை. கண்ணிமை கிடையாது. மூக்குத் துளை தலையின் மேற்புறத்தில் இருக்கும். இதை மூடக்கூடிய வால்வு உண்டு.

திமிங்கலம் 5 முதல் 10 நிமிடங்களுக்கு ஒருமுறை மூச்சு விடுவதற்காக மேலே வரும். சில சமயம் 45 நிமிடங்கள் வரை உள்ளிருந்து விட்டு மேலே வருவதும் உண்டு.

திமிங்கலங்கள் பொதுவாக ஒரு முறைக்கு ஒரு குட்டியே போடுகின்றன. எப்போதாவது அரிதாக இரண்டு குட்டிகள் பிறப்பதுண்டு. பிறந்த குட்டி தாயின் நீளத்தில் மூன்றில் ஒரு பங்கு நீளம் இருக்கும். குட்டி பிறந்ததும் தாய் அதை மேலே இழுத்துக் கொண்டு வந்து மூச்சு விடச் செய்யும். நீண்ட நாட்களுக்குக் குட்டி தாய்ப்பாலையே குடிக்கும்.

4 அடி முதல் 100 அடி வரை வளரக் கூடிய பல வகைத் திமிங்கலங்கள் உண்டு. சில வகைகள் பெரிய மந்தைகளாக உற்றார் உறவினருடன் வாழ்கின்றன. சில வகை கடல் ஓரத்தில் வாழ்கின்றன. மேலும் சில ஆழ்கடலிலும், சில நன்னீர் நிலைகளிலும் வாழ்வதுண்டு.

உணவிற்காகவும் இனப்பெருக்கத்திற்காகவும் சில வகைத் திமிங்கலங்கள் நீண்ட தூரப் பயணம் செய்வதுண்டு.

வட அட்லாண்டிக் பகுதிகளில் வாழும் பாட்டில் மூக்கன் என்ற திமிங் கலம் குளிர்காலங்களில் மித வெப்ப நீரை நோக்கி இடப்பெயர்ச்சி செய்யும். அதா வது கிழக்கு ஆப்பிரிக்கக் கடற்கரை மற் றும் நியூயார்க் கடற்கரைகளை நாடிச் செல்கிறது. கோடைக் காலம் வந்தவுடன் மீண்டும் வட அட்லாண்டிக் பகுதிக்கே திரும்பி விடும்.

கணவாய் மீன், மீன்கள், மற்றும் மிதவை உயிரினங்களே திமிங்கலங்களின் உணவு. கொலைகாரத் திமிங்கலம் மற்ற திமிங்கலங்களையும், கடல் நாய், கடற் சிங்கம் ஆகியவற்றையும் உண்ணக்கூடியது.

நீலத் திமிங்கலத்தின் ஒரு நாள் உணவு எவ்வளவு தெரியுமா? ஒரு மனிதன் ஆண்டு முழுவதும் சாப்பிடக்கூடிய உணவு இது ஒருநாளைக்கு சாப்பிடும் உணவிற்குச் சமம்! நீலத் திமிங்கலத்தின் குட்டி ஒரு நாளைக்கு 600 லிட்டர் பாலைக் குடிக்கும். ஒரு முதிர்ந்த நீலத் திமிங்கலத் தின் எடை 190 டன்கள் இருக்கும். 80 ஆண்டுகள் உயிர் வாழக்கூடியவை.

**கொ**லைகாரத் திமிங்கலம் மூர்க்கத் தனமுடையது. மனிதர்களைக் கோபத் தோடு எதிர்த்துத் தாக்கும். உடலின் மேற் புறம் கறுப்பாகவும் அடிப்புறம் வெள்ளை யாகவும் இருக்கும்.

வர்க்கத் திமிங்கலத்தில் ஆண் 60 அடி நீளமிருக்கும். மேற்பகுதி கறுப்பாகவும் அடிப்புறம் சாம்பல் நிறமாகவும் காட்சி தரும். கணவாய் மீன்களை விருப்பமாக உண்ணும். ஒரு திமிங்கலத்தி லிருந்து 20 பீப் பாய் தூய எண் ணெயும் 70 முதல் 100 பீப்பாய் கொழுப்பு உருக் கின எண்ணெயும் கிடைக்கும்.



எலும்பு, எண் ணெய், கொழுப்பு, ஆம்பர் எனும் வாசனைப் பொருட்களுக்காக திமிங்கலங்கள் வேட்டையாடப் படுகின்றன.


இதன் எண் ணெய், சோப்பு, மெழுகுவர்த்தி, மார்கரின் போன்ற பொருட்களைச் செய்யப் பயன்படு கிறது. மக்களுக்குப் பயன்படும் எண் ணெயில் 10% திமிங் கல எண்ணெய் ஆகும்.

1925 – 26 ஆம் ஆண்டுகளில் பாக்லாந்தில் மட்டும் 13,188 திமிங்கலங்கள் கொல்லப்பட்டன. 1937 – 38 ஆம் ஆண்டுகளில் 46,039 திமிங்கலங்கள் கொல்லப்பட்டன.

திமிங்கலங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதால் சட்டபூர்வமாக வேட்டையாடுதல் தடைசெய்யப்பட்டுள் ளது.

# 13 சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!

அமைப்பு: விஜி படம்: லலிதா












சவப் பெட்டியை மலையடி வாரத்துக்குக் கொண்டு சென்றனர்.
சிந்துபாத்! கணவன் இறந்தால் மனைவியையும், மனைவி இறந்தால் கணவனையும் சேர்த்துக் குகைக்குள் அடக்கம் செய்வது எங்க வழக்கம்.
என்ன சொல்றீங்க? இது அநியாயம் இல்லையா?



சிந்துபாத்தைக் கதற கதற குகைக்குள் தள்ளினர்.
ஐயோ! உயிரோடு உள்ளே வச்சு மூடறீங்களே... உங்களுக்கு மனசாட்சியே இல்லையா?


நினைவிழந்த சிந்துபாத் காலையில் சூரிய ஒளி பட்டுக் கண் விழித்தான்.
ஆ... நான் இன்னும் உயிரோடுதான் இருக்கிறேனா! அதோ சூரிய ஒளி வருதே! அந்த வழியே தப்பிக்கலாம்....
இறந்தவர்களை விலை உயர்ந்த ஆபரணங்களுடன் அடக்கம் செய்வது அங்கு வழக்கம்.
இந்த நகைகளை எடுத்துக் கொள்ளலாம். ரெண்டு தலைமுறைக்குக் காணும்!
நீண்ட நேரம் நடந்து ஒரு ஊரை அடைந்தான்—
அட... அதோ படகு தயாராக இருக்கே!



சிந்துபாத் படகில் ஏறி மணித் தீவை அடைந்தான்—
சிந்துபாத் இங்குள்ள கற்பூரங்களும் ஈயமும் விலைமதிப்புமிக்கவை.
என்னிடமுள்ள நகைகளைக் கொடுத்து கற்பூரத்தையும் ஈயத்தையும் வாங்கிக்கறேன்.


பல நகரங்களுக்கும் சென்று வியாபாரம் செய்தான்.


பத்திரமாக ஊர் வந்து சேர்ந்தான் சிந்துபாத்.
அடுத்த இதழில் சிந்துபாத்தின் ஐந்தாவது சாகசப் பயணம்.




**முதல் பரிசு** எஸ். சுரேஷ் குமார்,
ராமவர்மபுரம், நாகர்கோவில்.



**மூன்றாம் பரிசு** ஜெ. தனலக்ஷ்மி,
ஒன்பதாம் வகுப்பு, டாக்டர் டி. திருஞானம்
உயர்நிலைப் பள்ளி, மதுரை.

அக்டோபர் மாதத்தில் 'கடற்கரை' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.

# ஓவியப் போட்டி முடிவுகள்





இரண்டாம் பரிசு ம. சௌ. சுகந்தி,
ஒன்பதாம் வகுப்பு, சைதாப்பேட்டை.



ஆறுதல் பரிசு இரா. விவேக் ராஜ், ஒன்பதாம்
வகுப்பு, வி.இ.நா. மேல்நிலைப் பள்ளி, மதுரை.



ஆறுதல் பரிசு
ஹ. கணேஷ்,
திருக்கருங்குடி
அஞ்சல்,
திருநெல்வேலி.

# தீபா கொடுத்த

பள்ளிக்குக் கிளம்பிக் கொண்டிருந்த தீபா, "அம்மா, எனக்கு ஒரு பத்து ரூபா குடுங்கன்னு மூணு நாளா கேட்கறேனில்ல?" என்று தான் பாடிய பாட்டையே இருபதாவது முறை யாகப் பாடினாள்.

அம்மாவுக்கு எரிச்சல் தாங்க முடியவில்லை. "தீபா, என்கிட்ட காசு இருந்தா தந்திருக்க மாட்டேனா? மாசக் கடைசியாச்சே! பாப்பாவை டாக்டர்கிட்டே வேற கூட்டிட்டுப் போகணும். நானே யார்கிட்ட கடன் வாங்கலாம்னு யோசிச்சிட்டு இருக்கேன். நீ வேற தொந்தரவு பண்ணாதே!" என்றார்.

"அம்மா, நான் எனக்காகவா கேட்கறேன். நம்ம நாட்டுச் சிப்பாய்ங்க எல்லாம் நமக்காக காஷ்மீர்ல சண்டை போடுறாங்க. அவங்களுக்காக ஸ்கூல்ல இருந்து பணம் வசூல் பண்றாங்க! எல்லா பிள்ளைகளும் இருபது, முப்பது என்று குடுக்கறாங்க. நா ஒரு பத்து ரூபா யாச்சும் தர வேணாமா?"

"ஆமாம், இங்கே இருக்கிறவங்களுக்கே சோத்தைக் காணலை. இவ தானம் பண்ணப் புறப்பட்டுட்டா! இதோ பாரு, பணக்காரங்க குடுக்கட்டும். நம்மளால முடியாது. நமக்கே யாராவது நிதி குடுத்தா நல்லதுன்னு இருக்கோம்! பேசாமல் கிளம்பு. எனக்கு ஏகப்பட்ட வேலை கிடக்கு" - அம்மா கோபமாய்க் கத்திவிட்டு, புழக்கடைப் பக்கம் சென்றார்.

தீபாவுக்கு அழுகையாக வந்தது. 'சே, இந்தம்மா சுத்த மோசம்! தேவி, ராமு, கலா எல்லாரும் பணம் குடுத்தாங்க! இவங்க என்ன பணக்காரங்களா? மற்றவர்களுக்காகவா கொடுக்கணும்னு நினைக்கிறேன்? எனக்கும் அந்தப் பொறுப்பு இருக்கே. பாவம், சிப்பாய்கள் ராத்திரி பகலா குளிரிலும் பனியிலேயும் கஷ்டப்படுறாங்கன்னு டீச்சர் சொன்னாங்களே! அவங்களுக்கு ஏதும் தர வேணாமா? இந்த அம்மாவுக்கு ஏன் புரியவே இல்லை?' தீபா மனம் வருந்தினாள்.

'சே! இந்தப் பொண்ணுக்கு என்ன சொல்லிப் புரியவைக்கிறது? மனுஷி கிடந்து அல்லாடுறேன்! இந்த நாலு பிள்ளைங்களுக்கும் சமைத்துப் போடவே சக்தியில்லை! என் அவஸ்தை இதுக்கென்ன தெரியுது?' அம்மா வருந்தினார்.

பாவம் தீபாவின் அம்மாவையும் குறை கூற முடியாது. தீபாவின் அப்பா வேறு ஊரில் வேலை பார்க்கிறார். அவர் செலவு போக குறைந்த தொகையே அனுப்புவார். நாலு பிள்ளைகளும் அம்மாவும் சாப்பிட வேண்டும். பள்ளிச் செலவு, துணி, வீட்டு வாடகை, ரேஷன், அது இது என்று மாதாந்திர பட்ஜெட்டே பற்றாக்குறைதான். இருபது தேதி ஆகிவிட்டால் அக்கம் பக்கம் கடன்தான் வாங்கணும். தீபா கேட்ட பத்து ரூபாய் அம்மாவுக்கு இந்த நேரத்தில் நூறு ரூபாய் மாதிரி.

பரீட்சை நெருங்கியது. தீபா கார்கில் பற்றிய கவலையையெல்லாம் மூட்டை கட்டி விட்டு, மும்முரமாகப் படிக்கத் தொடங்கினாள். வகுப்பில் அவள்தான் எப்போதும் முதல் மாணவி என்றாலும் பரீட்சைக்கு என்றால் கடுமையாக உழைக்க வேண்டுமே!

தேர்வு முடிந்து மார்க் வந்ததும் தீபா மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தாள். எல்லாப் பாடத்திலும் அவள்தான் முதல்! அம்மாவுக்கும் ஏகப்பட்ட சந்தோஷம். 'பாவம்! குழந்தை! கஷ்டப்பட்டுப் படிக்கிறாள். அடுத்த மாசமாவது அவள் கேட்ட பத்து ரூபாய்க்குப் பதில் இருபது ரூபாயாகத் தரணும்!' என்று நினைத்தார் அம்மா.

"அம்மா, நாளைக்கு எங்க பள்ளிக்கூட ஆண்டு விழா. கலெக்டர் தலைமை தாங்கி, எனக்குப் பரிசு எல்லாம் தருவார். அப்பாதான் ஊரில் இல்லை; நீங்களாவது வாங்கம்மா!" என்றாள் தீபா.

"கட்டாயம் வரேன். நான் குடுத்து வச்



# நிதி!

சிருக்கணும்ப!' என்றார் அம்மா.

விழா நாளும் வந்தது. பள்ளி ஜேஜே என்றிருந்தது. மேடையில் தீபாவுக்குப் பரிசு வழங்குவதைப் பெருமையுடன் பார்த்தார் அம்மா.

கலெக்டர் பேசும் போது, "தீபா என்ற இந்த மாணவி எல்லாப் பாடத்திலும் முதல் மதிப்பெண் வாங்கியதோடு நில்லாமல், சுத்தம், ஒழுக்கம் இவற்றிலும் முதலிடம் பெற்றிருக்கிறாள். பள்ளிக்கும் ஒரு நாள் கூட லீவு எடுக்காமல் வந்திருக்கிறாள். நீங்கள் இவளை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும். இவளைப் பற்றி நான் பெருமையடைகிறேன். என்னுடைய சிறப்புப் பரிசாக இந்த ஐநூறு ரூபாயை அவளுக்கு அன்புடன் அளிக்கிறேன்'' என்று கூறியவுடன் கரகோஷம் வானை எட்டியது.

அம்மாவுக்கு சந்தோஷத்தில் பேச்சே வரவில்லை. 'ஐநூறு ரூபாயா? இந்த மாதம் குழந்தைகளுக்கு நல்ல சாப்பாடாகச் செய்து போடணும்!' என்று மனம் கணக்குப் போடத் துவங்கியது.

தீபா எழுந்து மைக்கின் முன் வந்தாள். "எல்லோருக்கும் வணக்கம். நம்ம சிப்பாய்களுக்காகப் பள்ளியில் நிதி திரட்டினார்கள். அப்போ என்னால பணம் கொடுக்க முடியலே! ரொம்பவும் வேதனையாயிருந்தது. அதனால இப்போ இந்த ஐநூறு ரூபாயை நான் ரொம்ப சந்தோஷத்தோட கார்கில் நிதிக்காக கலெக்டர்கிட்டயே கொடுக்கிறேன்!'' என்று பணிவுடன் கரம்கூப்பி வேண்டிக் கொண்டாள். கலெக்டரே திகைத்து விட்டார். கைத்தட்டலால் கட்டிடமே அதிர்ந்தது.


''இந்தக் குழந்தையைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை. பெரியவர்களுக்கே இல்லாத தாராள மனசு இந்தக் குழந்தைக்கு இருப்பது பெருமைக்குரிய விஷயம்! இவளைப் பெற்ற தாயை மேடைக்கு அழைக்கிறேன்!'' என்றார் கலெக்டர்.

அம்மாவை பள்ளி நிர்வாகி மேடைக்கு அழைத்துப் போனார். தீபா தன் கையினால் மாலை அணிவிக்க, அந்தத் தாயின் உள்ளம் பெருமிதத்தால் பூரித்தது. தீபா மகிழ்ச்சிப்பெருக்குடன் 'ஜெய்ஹிந்த்' சொல்ல கூட்டமும் பின்பற்றியது.

**ராதா பாலா**


# கிறிஸ்துமஸ் துளிகள்!

கிறிஸ்துமஸ் தாத்தா தோன்றியது தங்கள் நாட்டில்தான் என நெதர்லாந்து, பிரான்ஸ் மற்றும் வட அமெரிக்கர்கள் கூறிக் கொள்கின்றனர். கிறிஸ்துமஸ் தாத்தாவின் உடை கம்பளியால் செய்யப்பட்டது. குள்ளமான உருவம். வெண்பனியில் சறுக்கிச் செல்லக் கூடிய நீள் வண்டியில் கையில் மணி அடித்தபடியே வருவார். சறுக்கு வண்டியை ரெயின் டீர் எனப்படும் பனிமான்கள் இழுத்து வரும். எனவே ஆர்டிக் பகுதியைச் சேர்ந்தவர்தான் ஒரிஜினல் கிறிஸ்துமஸ் தாத்தா என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.




**சான்டாகிளாஸ் பெயர் வந்தது எப்படி?**

சின்டி கிளாஸ் என்ற டச்சுப் பெயரே சான்டா கிளாஸ் என ஆகியிருக்கக் கூடும் என்கிறார்கள். இந்தச்







சின்டி கிளாஸ் என்பவர் யார்? துருக்கியில் மைரா தேவாலயத்தில் இதே பெயரில் ஓர் ஆர்ச் பிஷப் இருந்திருக்கிறார். இவர் மக்களின் குறைகளைத் தீர்க்க அரும்பாடு பட்டார். ஆதரவற்ற பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆதரவுக் கரம் நீட்டினார். இவர் தம்மை யார் என்று வெளியே காட்டிக் கொள்ளாமல் இருக்க சான்டாகிளாஸ் வேடமணிந்து இரவில் வந்து அவர்கள் வீட்டு வாசற்படியில் பரிசுப் பொருட்களை வைத்துப் போவார். இந்தப் பரிசுகள் அவர்களுக்குத் தேவையான துணியாகவோ, பணமாகவோ, நகையாகவோ, பொம்மையாகவோ இருக்கும். இதையறிந்த மக்கள் சான்டாகிளாஸ் உடையணிந்த கிறிஸ்துமஸ் தாத்தாவை பெரிதும் விரும்பினர். நாளடைவில் மக்களுக்கு நல்லது செய்ய விரும்பிய பலரும் சான்டா கிளாஸ் உடையணிந்து உதவ ஆரம்பித்தனர். இது தற்போது பல நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வருகிறது.

கிறிஸ்துமஸ்ுக்கு பலரும் வாழ்த்து அட்டைகளை அனுப்பி ஒருவருக்கொருவர் தங்கள் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வர். பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் தபால் மூலம் வாழ்த்து அட்டைகள் அனுப்பப்பட்டன. ஒரு அமெரிக்கர் 63,000 கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகளை அனுப்பி சாதனைப் படைத்திருக்கிறார்.

**பி. மைதிலி, மானாமதுரை**

கிறிஸ்துமஸ் என்ற பெயர் எப்படி வந்தது தெரியுமா? கிரேக்க மொழியில் 'கிறிஸ்டோால்' என்றால் 'காப்பாற்ற



அவதரித்தவர்' என்று அர்த்தம். இப்போது வழக்கில் இல்லாமல் இருப்பினும் ஒரு காலத்தில் ஆங்கிலத்தில் 'மாஸ்' என்ற வார்த்தைக்கு பண்டிகை அல்லது 'கொண்டாடுதல்' என்னும் பொருள் இருந்து வந்தது. 'கிறிஸ்து என்ற வார்த்தையை சுருக்கமாக கிரேக்க மொழியில் 'X' என்ற எழுத்தாலும் குறிப்பிட்டனர். ஆகவேதான் கிறிஸ்துமஸ் என்பதை ஆங்கிலத்தில் 'X-MAS' என்று எழுதுவதும் வழக்கத்தில் இருந்து வருகிறது.

உலகத்திலேயே மிகவும் பிரம்மாண்டமான தேவாலயம் என கருதப்படுவது வாடிகனில் அமைந்துள்ள செயின்ட் பீட்டர்ஸ் சர்ச்தான். மைக்கேல் ஏஞ்சலோ என்று உலகப் புகழ் பெற்ற கட்டடக் கலைச் சிற்பிதான் இதனை வடிவமைத்துக் கட்டினார். இந்தத் தேவாலயம் 1506ம் ஆண்டில் கட்டத் தொடங்கப்பட்டது. இதன் கட்டடப் பணி தொடர்ந்து 120 ஆண்டுகள் நீடித்ததாம்!

உலகிலேயே மிகப் பெரிய பைபிள் புத்தகம் ஒன்று லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தில் இருக்கிறது. இது ரொம்ப புராதனமானது. ரப்பர் அச்சுகளைக் கொண்டு கையாலேயே அச்சடிக்கப்பட்ட இந்த பைபிளின் நீளம் மட்டும் நான்கு அடி ஒரு அங்குலம். உயரம் இரண்டு அடி ஒன்பது அங்குலம். எடை அரை டன். இது 8043 பக்கங்கள் கொண்டது.

க. பூங்கொடி, சித்தோடு.

### சைனாவில் கிறிஸ்துமஸ்

பட்டுத் துணியினாலான பல்லக்கில் குழந்தை ஏசுவின் உருவத்தை வைத்து அலங்காரம் செய்து ஊர்வலமாக எடுத்துச் செல்வார்கள். குழந்தை ஏசு, பூமியில் அவதரித்ததை சீன நாட்டுக் கிறிஸ்தவர்கள் வரவேற்கும் இந்த வைபவத்தில் ஊர்வலம் வரும் வழியெல்லாம் விளக்குகளும் செடிகளும் தோரணங்களும் கட்டி அழகு படுத்தப்பட்டு இருக்கும்.

கிறிஸ்துமஸ் விழாவையொட்டி நண்பர்கள், உறவினர்கள் வாழ்த்து அட்டை பரிமாறிக் கொள்வது வழக்கம். முதன் முதலில் வாழ்த்து அட்டை தயாரித்தவர் பிரபல ஓவியர் வில்லியம் தாம்சன். இங்கிலாந்தில் உள்ள பக்கிங்காமை சேர்ந்தவர். 1844-ம் ஆண்டு இதை அவர் தயாரித்து நண்பருக்கு அனுப்பினார்.


– ஆர். மகாதேவன்,
திருநெல்வேலி

## எங்கள் ஊருக்கு வாருங்கள்!



ஒவ்வொரு ஊருக்கும் ஒரு சிறப்பு இருக்கும். உங்கள் ஊரின் அருமை பெருமைகள் மற்ற ஊர்களில் வசிக்கும் வாசகர்களும் அறிந்து கொள்ளவே இந்தப் பகுதி ஆரம்பிக்கப்படுகிறது. உங்கள் ஊர், எந்த மாவட்டத்தில் இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டு அதன் சிறப்புக்கள், விநோதங்கள் முதலியவற்றை 'எங்கள் ஊருக்கு வாருங்கள்' என்ற தலைப்பில் சுவையாக எழுதி அனுப்புங்கள். ஒவ்வொரு மாதமும் கோகுலத்தில் பிரசுரமாகும். சன்மானம் உண்டு!

உங்கள் முகவரி, வகுப்பு, பள்ளி ஆகியவற்றையும் குறிப்பிட மறந்து விடாதீர்கள்!




கீழே உள்ள பத்து கேள்விக்கும் விடைகளைக் கண்டுபிடியுங்கள். சரியான விடைகளை எழுதிய இருபது பேருக்குப் பரிசு வழங்கப்படும். விடைகளை எழுதி அனுப்புவதோடு மறக்காமல் உங்கள் முழு முகவரியையும் எழுதி, முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

முடிவு தேதி : **31.12.99**

1. மாமல்லபுரத்தை நிறுவியவர் ____________
2. பவளம் ஒரு ____________ பிராணி.
3. தமிழ்நாட்டில் பழுப்பு நிலக்கரி____________யில் வெட்டி எடுக்கப்படுகிறது.
4. நமக்கு ____________ வகைப் பற்கள் உள்ளன.
5. பாண்டியரின் கொடியில் உள்ள சின்னம் ____________
6. அண்மையில் ஓய்வு பெற்ற ஜெர்மனியின் டென்னிஸ் வீராங்கனை ____________
7. ஜப்பானின் தலைநகரம் ____________
8. பத்ரிநாத் கோயில் ____________ மாநிலத்தில் உள்ளது.
9. குறிஞ்சி மலர் ____________ ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும்.
10. ஊசல் கடிகாரத்தைக் கண்டறிந்தவர் ____________

*ஆசிரியர்*
***கோகுலம்,***
*47. ஜவஹர்லால் நேரு சாலை,*
*ஈக்காட்டுதாங்கல்,*
*சென்னை – 97*



## 6 படகுப் பயணம்

# தங்கச் சிலை!

நதிக்கரையோரத்து அடர்ந்த கானகத்தினூடே ரங்குடுவைச் சுமந்தபடி, நித்யாவும் சத்யாவும் போய்க் கொண்டிருந்தார்கள். ஸ்ட்ரெச்சரின் குலுக்கல், ரங்குடுவின் தூக்கத்துக்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடாது என்று தங்கள் கை வலியையும் பொறுத்துக் கொண்டு இருவரும் ஜாக்கிரதையாக நடந்தார்கள். அடிக்கடி ரங்குடு முனகினான். கவலையுடன் குழந்தைகள் இருவரும், ஸ்ட்ரெச்சரைத் தாழ்த்திக் கண் மூடிய நிலையில் ரங்குடுவின் உடல் நடுங்குவதையும் அவன் உதடுகள் துடிப்பதையும் பார்த்துக் கண் கலங்கினார்கள்.

"ரங்குடு நினைவு தப்பிய நிலையில் பிதற்றுகிறான். உடல் அனலாகக் கொதிக்கிறது...'' என்றாள் நித்யா. அவன் கன்னத்தில் கை வைத்துப் பார்த்தபடி.

"சரியாயிடுமா நித்யா...?" பீதியுடன் கேட்டான் சத்யா.


"அரங்கநாதனோட பண்ணை வீட்டை அடைந்ததும் காயத்தை முறைப்படி சுத்தம் செய்து மருந்து வைத்துக் கட்டுப் போட வேண்டும். கவலைப்படும்படி ஏதும் இருக்காதுன்னு நினைக்கிறேன்" என்றாள் நித்யா. "ரத்த ஒழுக்கு நிக்கலே - பாண்டேஜ் மேலே சிகப்பு பரவிக்கிட்டிருக்கு பார்."

"அப்போ நாம தாமதிக்காம பண்ணை வீட்டுக்குப் போயிடணும் நித்யா...'' பரபரத்தான் சத்யா.

கானகத்து ஒற்றையடிப் பாதையில், கை வலி தாங்காமல் இரண்டு தடவை ஸ்ட்ரெச்சரைக் கீழே வைத்து, கைகளை உதறி ஆசுவாசப்படுத்திக் கொண்டார்கள் நித்யாவும் சத்யாவும். சீக்கிரமே தொலைவில், மங்களூர் சிவப்பு ஓட்டுக் கட்டிடம் கண்ணில் படவே, புதிய தெம்புடன் வேகமாக நடந்து பண்ணை வீட்டை அடைந்து ஸ்ட்ரெச்சர் சுமையை வீட்டு வராந்தாவில் இறக்கினார்கள். சொல்லி வைத்தாற்போல, அரங்கநாதன் பண்ணை வீட்டினுள்ளிருந்து ஆவலுடன் இவர்களை வரவேற்க வந்தார்.

''பழனியாண்டவா, முருகா! நல்ல வேளை வந்து சேர்ந்துட்டீங்க... நான் படாத கவலை இல்லே... நல்லவேளை உங்களுக்கு ஏதும் ஆகலையே...?" என்று மகிழ்ச்சியோடு அருகில் வந்தவர், ரங்குடு ஸ்ட்ரெச்சரில் முடங்கிக் கிடப்பதைப் பார்த்துப் பதறியபடி, "இந்தப் பயல் ரங்குடுவுக்கு என்ன ஆச்சு?" என்று அருகில் குனிந்து ரங்குடுவைத் தொட்டுப் பார்ததவர், ''உடல் நெருப்பாகக் கொதிக்குதே, நல்ல ஜுரம்!" என்றார்.

''ரங்குடுக்குக் காலில் பலத்த காயம் பட்டிருக்கு சார்!" என்றாள் நித்யா. "குண்டர்களின் கவனத்தை எங்களி




**வாண்டு மாமா**

டமிருந்து திருப்ப, ரங்குடு அவர்கள் பார்வையில் படும்படி எதிர்த் திசையில் ஓடினான். அந்த ரௌடிங்க ரங்குடுவைச் சுட்டுட்டாங்க. குண்டு நேரடியாய் பாயலே - மரத்திலே பட்டு, அதன் சிதறல் ரங்குடு காலிலே பலமாத் தாக்கிடுச்சு. அதையும் பொருட்படுத்தாம, ரங்குடு ஒரு புதர்க் குழியிலே உருண்டு ஒளிந்திருந்து...'' என்றாள் நித்யா.

''ரங்குடு ரொம்ப .தைரியசாலி சார்... எங்க ரெண்டு பேர் உயிரையும் காப்பாத்தி - தான் காயமடைஞ்சுட்டான்!'' என்றான் சத்யா நெகிழ்ச்சியுடன்.

''காயத்தைப் பாக்கலாம்'' என்றபடி அரங்கநாதன் ரங்குடுவின் கால்கட்டை சோதித்துக் கொண்டே ''காமாட்சி...!'' என்று குரல் கொடுத்தார். வீட்டினுள்ளிருந்து கருணை முகங் கொண்ட நடுத்தர வயதுடைய ஒரு மூதாட்டி வந்தார். அதற்குள் அரங்கநாதன், ரங்குடுவை ஸ்ட்ரெச்சரிலிருந்து தூக்கி வராந்தாவிலிருந்த திண்ணையில் படுக்க வைத்தார். ஜில்லென்ற அதன் சிவப்பு சிமெண்ட் தரையும் வேப்ப மரத்துக் குளிர்ந்த காற்றும் இதமாக இருந்தன. ''காட்டுப் பகுதியிலே இவ்வளவு கச்சிதமா எப்படிக் கட்டுப் போட்டீங்க?'' என்று வியந்தபடியே கட்டைப் பிரிக்கலானார் அரங்கநாதன்.



''நித்யாதான் சார் பாண்டேஜ் போட்டா. அவ ஃபர்ஸ்ட் எய்டு கோர்ஸ் படிச்சிருக்கா!'' என்றான் சத்யா.

''சத்யா தன் சட்டையைக் கிழித்துப் பாண்டேஜ் துணியாக்கித் தரலைன்னா என்னால் எப்படி கட்டுப் போட்டிருக்க முடியும்?'' என்றாள் நித்யா, தன் தம்பியைப் பெருமையுடன் பார்த்துக் கண் சிமிட்டியபடி.

''ரெண்டு பேருமே புத்திசாலிக் குழந்தைங்க!'' என்று பாராட்டிய அரங்கநாதன் காமாட்சி அம்மாளுக்குச் சில கட்டளைகளை இட்டார். ''வெந்நீர் வச்சுக் கொண்டு வா. அலமாரியிலே 'மெடிகல் கிட்' இருக்கு. அதையும் எடுத்துட்டு வா'' என்றார்.

குளிர்ந்த காற்று ரங்குடுவின் மயக்கத்தைத் தெளிவிக்க, மெல்லக் கண் திறந்து பார்த்தான்.

நித்யா – காமாட்சியின் உதவியுடன், அரங்கநாதன் ரங்குடுவின் காயத்தைச் சுத்தம் செய்து, மருந்து வைத்துக் கட்டுப் போட்டார். ''இந்தப் பயலை உடனே டவுனுக்குக் கொண்டு போய், ஒரு டாக்டர் கிட்டே காட்டணும்!'' – தன் கைகளைக் கழுவிக் கொண்டே கூறினார்.

''எனக்கு அப்படியெல்லாம் ஒண்ணுமில்லீங்க ஐயா'' என்றான் ரங்குடு பலவீனமான குரலில்.

''ஒண்ணும் இருக்கக் கூடாதுன்னு தான்டா ஆசைப்படறேன் ரங்குடு. ரத்தம் வெளியேறி இருக்கு. ஆகையினாலே ஒரு வாரம் நீ பெட் ரெஸ்டிலே இருந்தாகணும்!''

''படுத்த படுக்கையாவா? ஐயோ! வெளிலே எங்கேயும்...''

''மூச்! பேசக்கூடாது. அருமையான படுக்கை. வேளாவேளைக்கு ரொட்டி, பால், சாப்பாடு – ஐஸ்கிரீம் வேணும்னாலும் உனக்குத் தர ஸ்பெஷலா ஏற்பாடு பண்றேன்!'' என்று கண்களைச் சிமிட்டியபடி, குறும்பாகச் சிரித்தார் அரங்கநாதன்.

''ஓவ்...வ்...!'' என்று முனகிய ரங்குடுவின் முகத்தில் லேசாக மகிழ்ச்சி பரவுவதைக் கண்டாள் நித்யா.

''ரங்குடு! அரங்கநாதன் சார் எங்களை அப்பாகிட்டக் கூட்டிப் போயிட்டார்னா எங்க டாடி உனக்கு நிஜமாவே ஒரு உயிருள்ள நாயைப் பரிசாக வாங்கித் தருவார்'' என்றாள் அவன் மகிழ்ச்சியை அதிகப்படுத்த.

''ஆமா'' ரங்குடு! நல்ல ஜாதி நாயா – குட்டி நாயா வாங்கித் தருவார்!'' என்றான் சத்யா – தன் பங்குக்கு.

இருவரையும் பார்த்துத் திருப்தியோடு முறுவலித்த ரங்குடு, அயர்வினால் கண் மூடியவன் அப்படியே தூங்கிப் போனான்.

குழந்தைகள் குளித்து உணவுண்டபின் அரங்கநாதன் அவர்களைத் தன் அலுவலக அறைக்கு அழைத்துப் போனார். அலமாரியிலிருந்து ஆந்திரப் பிரதேச 'மேப்'பை எடுத்து மேஜை மீது விரித்தார். ''நீங்க ரெண்டு பேரும் ஓய்வு எடுத்துக்குங்க. நான் ரங்குடுவை, காரில் டவுனிலுள்ள என் வீட்டுக்குக் கொண்டு போறேன். அங்கு போனதும் டாக்டருக்கு 'போன்' செய்து வரவழைத்து, ரங்குடுவை அவர் பொறுப்பில் ஒப்படைத்துவிட்டு, நான் மறுபடி இங்கு வறேன்'' என்று தன் திட்டத்தை விளக்கினார். ''காமாட்சி அம்மாளிடம் இரண்டு நாள் பயணத்துக்கு வேண்டிய உணவைத் தயாரித்து 'பேக்' பண்ணித் தரச் சொல்றேன் – நாம் படகில் போக வேண்டி இருக்கும்... இதோ பாருங்க...'' என்று மேப்பில் சுட்டிக் காட்டினார்.

''இது துங்கபத்ரா நதி... இதன் வழியே போனோம்னா, உங்க அப்பா குறிப்பிட்ட பழங்காலத்து மலைக் கோயிலுக்குப் போகலாம். அந்த மலைப் பகுதியிலே, பெரும் நிலப்பரப்புக்கு உரிமையான ரெட்டிகாரு ஒருத்தர் இருக்கார். எனக்குத் தெரிஞ்சவர். அவர் உதவியோட, உங்க அப்பாவை ஜெயராஜ் குண்டர்களிடமிருந்து மீட்டு, புராதன தங்கப்புதையலையும் காப்பாற்றி விடலாம்.''

குழந்தைகளின் உள்ளத்தை அழுத்திக் கொண்டிருந்த கனம் குறைந்து போயிருந்தது. ''நதியில் – படகில் ரொம்ப தூரம் பயணம் செய்ய வேண்டி இருக்குமா சார்?'' என்று கேட்டான் சத்யா.

''ஆமா. இதோ இந்த மேப்பிலேயே நதி


**''மூணு வருஷத்துக்கு முன்னாடி இதுதான் நடக்கும்னு நீ நினைச்சது இப்ப அப்படியே நடந்துடுச்சா, என்னதான் நினைச்ச?''**

**''அப்ப இருந்த உயரத்தைவிடக் கொஞ்சம் வளர்ந்திடுவேன்னுதான்!''**

**— காயக்காடு ராமகிருஷ்ணன்**

இவ்வளவு தூரத்துக்கு இருக்கே! மலையிலே சீதாராம ரெட்டிகாரு கார் கொடுத்து உதவு வார். மலை மேலே போக.. நான் விடியற் காலையில் வரும்போது நீங்க ரெடியா இருங்க" என்று கூறியவர், மேப்பை மடித்து வைத்து விட்டு, அயர்ந்து தூங்கும் ரங் குடுவை, காமாட்சி அம்மாளின் உதவி யுடன் நலுங்காமல் தன் காரின் பின் சீட்டில் கொண்டு போய்ப் படுக்க வைத் தார். நித்யா சத்யாவிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பிப் போனார் அரங்கநாதன்.

நித்யா - சத்யாவைத் தூக்கம் அரவணைக்கவில்லை. மனதில் கவலையும் எதிர்பார்ப்பும் அழுத்திக் கொண்டிருக் கும்போது, அடித்துப் போட்டாற்போலத் தூக்கம் வருமா? கருக்கலிலேயே கண் விழித் துக் கொண்டார்கள். சமையலறையில்



காமாட்சி அம்மாள் உணவுப் பண்டங்கள் தயாரிப்பதில் மும்முரமாக இருந்தார். அவற்றின் மணம், தூக்கத்தை முழுமையாக விரட்டி விடவே, பயணத்துக்குத் தங்களை ஆயத்தமாக்கிக் கொள்ளுவதில் முனைந் தார்கள். குளித்துப் புதிய உடைகளை அணிந்துகொண்டே, "நம்ம கவலை யெல்லாம் தீர்ந்துடும்னு நினைக்கிறேன்" என்றாள் நித்யா.

"சீதாராம் ரெட்டிகாரோட உதவி யோட, நம்ம டாடியை சீக்கிரமாகக் கண்டு பிடிச்சுடலாம்னு தோணுது" என்றான் சத்யா - நம்பிக்கையோடு. காமாட்சி அம் மாள் உணவுப் பொட்டலங்கள் அடங்கிய 'ரக்சாக்கை' அவர்களிடம் கொடுத்தாள். இரவு அரங்கநதான் மடித்து வைத்த 'மேப்'பை நித்யா மறக்காமல் தன் பேக்கினுள் வைத்துக் கொண்டாள். அப் போது வெளியே கார் சத்தம் கேட்டது.

"அரங்கநாதன் சார் வந்துட்டார்! இத்தனை சுருக்க வருவாருன்னு நினைக் கலே!" என்று ஆச்சரியப்பட்டபடியே ஜன் னல் அருகே போய் வெளியே பார்த்தான் சத்யா.

அவன் முகம் பீதியினால் வெளுத் தது. "ஐயோ, நித்யா!" என்று குழறியது அவன் குரல். "அந்தப் படுபாவி ஜெய ராஜ் இங்கேயும் வந்துட்டான். காருக் குள்ளே அவன் அடியாட்கள்...! நாம் தோட்ட வாசல் வழியே வெளியேறி காட்டுக்குள்ளே போயிடலாம் வா..." என்று பரபரப்புடன் ரக்சாக்கையும் டிராவல்கிட் டையும் எடுத்துக்கொண்டு பின் பக்கம் ஓடினான். நித்யாவும் அதேபோலத் தன் தம்பியைப் பின் தொடர்ந்தாள். சமையல் அறையில் இருந்த காமாட்சி அம்மாளிடம் சுருக்கமாக விஷயத்தை விளக்கி, "அவங் களை எப்படியாவது சமாளி!" என்று கூறி கருக்கிருளில் கலந்து போனார்கள். பண்ணை வீட்டுக் கதவை உலுக்கும் ஓசை யும், குண்டர்களின் கோபக் குரலும் குழந்தைகளை விரட்ட, அவர்கள் மரங் களினூடே புகுந்து ஓடலானார்கள்.

"அவங்க நம்மைத் தேடிட்டு வரு வாங்க... நிச்சயம்" நித்யாவின் குரலில் பீதி கப்பிக் கிடந்தது. "நாம் எங்கே ஒளிவது?"

"பதட்டப் படாம வா நித்யா!" என்று அவள் கையைப் பற்றியபடி மங்கலான வெளிச்சத்தில் நதியை நோக்கி நடக்க லானான் சத்யா. சலசலத்து ஓடும் நதி யில் - தொலைவில் - கறுப்பாக நீரில் ஏதோ மிதந்து கொண்டிருந்தது. நடையை வேகமாக்கினார்கள் நித்யாவும் சத்யாவும்.

நதியை நெருங்கியபோது, இருளை விரட்டி எழும் சூரியக் கதிர்களின் பனி படிந்த மங்கலான வெளிச்சத்தில் அது - அந்தக் கறுப்பான பொருள் - ஒரு பரிசல் படகு என்பதை அறிந்தபோது குழந்தை களுக்கு ஏற்பட்ட சந்தோஷத்துக்கு அளவே இல்லை.

அந்தப் படகில் ஒரு மூதாட்டியும் ஒரு வாலிபனும் மட்டுமே அமர்ந்திருந்தனர். பெரிய மூங்கில் கூடைகளில் கோழிகளும் வாத்துக்களும் அடைக்கப்பட்டுப் படகில், ஏற்றப்பட்டிருந்தன. வாலிபன் படகுக்குக் கோல் போட்டு வலிக்க ஆயத்தமாக இருந் தான். மூதாட்டி, புகையிலை நறுக்கை முறுக்கித் துண்டாடி வாயில் அடக்கிக் கொண்டே, படகை நோக்கி ஓடிவரும் குழந்தைகளைப் பார்த்தவள், படகுக்குக்



கோல் போட வேண்டாமென்று வாலிபனிடம் கூறினாள்.

"நித்யா மூச்சிரைக்கப் பேசினாள் - "பாட்டி! எங்களைப் படகிலே ஏத்திக்கோ... நாங்க...." சத்யாவைப் பார்த்துக் கேட்டாள் - ''நாம எங்கே போகணும் சத்யா?"

''சீதாராம ரெட்டிகாருவோட நிலத்துக்கு - அதாவது மலைக் கோயிலுக்குப் போக இறங்கும் படகுத் துறைக்கு" என்றான் சத்யா.

அவர்களின் தமிழ்ப் பேச்சு புரியாமல் புகையிலையைக் குதப்பிக் கொண்டே அவர்களை வெறித்துப் பார்த்தாள் கிழவி.

"நம்ம பாஷை அவங்களுக்குப் புரியலே சத்யா. அவங்க தெலுங்கு நமக்குப் புரியாது!- இது நித்யா.

சத்யா சோர்ந்து விடவில்லை. டி.வி.யில் காது கேளாதோர் வாய் பேசாதோருக்குச் சைகை மூலம் செய்தி வாசிப்பது நினைவு வரவே அப்படி நாம் முயற்சித்தால் என்ன என்று - தங்கள் நிலையைப் பலவிதமான கோணங்கி சைகைகள் மூலம் கிழவிக்கு விளக்கினான். கிழவிக்கு சத்யாவின் அபிநயம் தமாஷாக இருந்தது. ஒரு வழியாக அவர்கள் படகில் பயணிக்க விரும்புகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு, படகில் ஏறிக் கொள்ளும்படி கை கொடுக்க - நித்யாவும் சத்யாவும் உற்சாகத்தோடு படகுக்குள் தாவிக் குதிக்க படகு நிலை தடுமாறி ஆட்டம் கண்டது.


(தொடரும்)

# வானத்தையே வளைக்கலாம்!



கிளியைப் போல் பறக்கணும்னா
றெக்கை ரெண்டு வேணும்!
குயிலைப் போல பாடணும்னா
குரலில் வளமும் வேணும்!
மானைப் போல குதிக்கணும்னா
நாலு காலு வேணும்!
மனுசன் போல வாழணும்னா
நல்ல மனசு வேணும்!

காக்கா நெறம் கறுப்புத்தான்
அழகாத்தானே இருக்குது!
முயலுக் குட்டி சிறுசுதான்
துள்ளிக் குதிச்சி ஓடுது!
குட்டிக் குட்டி எறும்புகள்
கூடி சேர்ந்து வாழுது!
சண்டை போடும் நம்மைப் பார்த்து
கழுதை கூட சிரிக்குது!



ரெட்டை மாட்டு வண்டியை
ஒத்தைமாடு ஓட்டுமா!
தண்டவாளம் இல்லாம
ரயிலு வண்டி பறக்குமா!
அஞ்சு விரலும் சேர்ந்தாத்தான்
அள்ளிச் சோறு தின்னலாம்!
ஒத்துமையா சேர்ந்து நின்னா
வானத்தையே வளைக்கலாம்!

— பாலு





## எங்கள் பள்ளியில் நடந்தது!

### என்ன சொன்னேன்?


தமிழாசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு சர்க்குலர் வந்தது. ஆசிரியர் பாடத்தை நிறுத்திவிட்டு, "வருகிற திங்கள், செவ்வாய் இரண்டு நாட்களும் விடுமுறை" என்று படித்து முடித்தார். மீண்டும் பாடத்தைத் தொடர நினைத்து, "நான் கடைசியில் என்ன சொன்னேன்?" என்று கேட்டார். என் நண்பன் வேகமாக எழுந்து, "திங்கள், செவ்வாய் விடுமுறைன்னு சொன்னீங்க சார்!" என்றான். வகுப்பே சிரித்தது. "விடுமுறை காதில் விழுந்தவுடன் பாடம் எல்லாம் மறந்து போச்சா?" என்று கேட்க அவன் மௌனமாக இருந்தான்.

– ஜெ. அன்பரசு,
பதினோராம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
கீழ்பென்னத்தூர்.



### எதில் வசிக்கும்?

பள்ளி நேரம் முடிந்ததும் வகுப்பு மாணவிகளை ஐந்து குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் ஒரு தலைவியையும் நியமித்து படிக்கச் சொல்வார் ஆசிரியர். குழுத் தலைவர்கள் அந்த நேரத்தில் சந்தேகங்களைச் சொல்லிக் கொடுப்பர். படித்த பாடத்திலிருந்து கேள்வி கேட்டு பதிலும் எழுதச் சொல்வர். ஒருநாள் என் தோழி அவள் குழுவில், "மண் புழு எங்கே வசிக்கும்? அதைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக" என்று எழுதச் சொல்லியிருக்கிறாள். அந்தக் குழுவில்



இருந்த குறும்புக்கார மாணவி, 'மண்புழு என்ன மன்னனா? மாடமாளிகையில் வசிப்பதற்கு? மண்புழு மண்ணில்தான் வசிக்கும்' என எழுதியிருந்தாள். தோழி கோபத்துடன் என்னிடம் முறையிட்டாள். "நீ கேட்ட கேள்வி சரியில்லை. பேரிலேயே மண்புழுன்னு இருக்கும்போது இப்படிக் கேட்கலாமா?" என்று கூறி சமாதானம் செய்தேன் நான்.

– எஸ். சிந்துஜா, எட்டாம் வகுப்பு,
ஜாஸ்மின் மெட்ரிகுலேஷன் பள்ளி,
பொறையார்.

### எழுதியது யார்?

என் தம்பி இரண்டாம் வகுப்பு படிக்கிறான். அவனிடம் ஆத்திச்சூடி சொல்லுமாறு ஆசிரியர் கேட்டிருக்கிறார். பாதி வரை சொல்லிவிட்டு திருதிருவென விழித்திருக்கிறான். உடனே ஆசிரியர், "சரி, ஆத்திச்சூடி எழுதியது யாருன்னு சொல்"



என்றிருக்கிறார். உடனே, "நீங்கதான் டீச்சர்'' என்றானாம் தம்பி. ஆசிரியர் திகைத்து, "நானா?" என்று கேட்டிருக்கிறார். "ஆமாம் டீச்சர். நீங்கதானே நேற்று போர்டில் எழுதினீங்க" என்று சொல்லவும், ஆசிரியர் சிரித்தாராம். இந்த நிகழ்ச்சியை என்னிடம் அன்று மாலை ஆசிரியர் கூறவும் நானும் சிரித்தேன்.

– எஸ். சத்யா, கோவில்பட்டி.

# ஆத்திச்சூடி எழுதியது யார்?

## எதிர்காலத்தில்...

என் தோழி மீனா அடிக்கடி உடல் நிலை சரியில்லை என்று லீவு போடுவாள். அன்று வகுப்பாசிரியர் எங்களது எதிர்காலத் திட்டம் என்ன என்பதை ஒவ்வொருவரிடமும் கேட்டார். ஒரு மாணவி,



"நான் மருத்துவராக ஆவேன்" என்றாள். இன்னொருத்தி, "இவளுக்கே தலைமை மருத்துவராக வருவேன்" என்றாள். அடுத்தவள், "இவர்கள் இருவரும் பணிபுரியும் மருத்துவமனையைக் கட்டப் போவதே நான்தான்" என்று கூறினாள். அடுத்ததாக என் தோழி மீனா எழுந்தாள். உடனே ஆசிரியர், "மீனா பணம் தராமலா மருத்துவமனை கட்டப்படும்!" என்றார். வகுப்பே சிரித்தது. அவள் அமைதியாக நிற்பதைப் பார்த்த ஆசிரியர், "விளையாட்டுக்குச் சொன்னேன்" என்று கூறி உட்கார வைத்தார்.

– பு. ஸ்ரீமதி, வேலூர்.

## பாடலுடன்...



ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு விதமாகப் பாடம் நடத்துவார்கள். எங்கள் சமூக அறிவியல் ஆசிரியர் பாடங்களை பாடியபடியே நடத்துவார். அது எங்களுக்கு எளிதாக மனதில் பதியும். ஒருநாள் பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போதே, "உன்னைப் பார்க்கும் போது நீ புத்தகத்தைப் பார்க்கிறாயே, நான் புத்தகத்தைப் பார்க்கும்போது, நீ தெருவைப் பார்க்கிறாயே" என்று ராகத்துடன் பாடினார். நாங்கள் திகைத்தோம். "இந்தப் பாடலுக்கு உரியவன் தானாக எழுந்து நின்றால் தண்டனை குறைவு" என்றார். பின்னால் உட்கார்ந்திருந்த மாணவன் எழுந்து நின்றான். தெருவைப் பார்க்க முடியாத இடத்தில் அவனை உட்கார வைத்தார் ஆசிரியர்.

– த. பரதன், மன்னார்குடி.


# சைவ நரி!

கதை : பூரணி

படம் : சசி




சந்திரகிரி காட்டில் பொல்லாத நரி ஒன்று வாழ்ந்து வந்தது. ஒரு நாள் திடீரென சந்நியாசி போல் காட்சியளித்தது.




அங்கு வந்த யானையார் "அட எப்போதிருந்து இந்தக் கோலம்" என வியந்தார்.




"நான் இப்ப சைவமா மாறிட்டேன். ஐயோ! சிங்கராஜா வர்றார்; காப்பாற்றுங்கள்" என்றது நரி பயத்துடன்.




"சரி. என் முதுகில் ஏறு" என்றார் யானையார்.




அருகில் வந்த சிங்கராஜா "டேய், இன்னிக்கு எங்கிட்டயிருந்து தப்ப முடியாது" எனக் கர்ஜித்தார்.



"சிங்கராஜா. நரி இப்ப திருந்திட்டான். மன்னித்து விடுங்கள்" என்றார் யானையார்.


"அவன் குணம் மாறாது. நீரே புரிந்து கொள்வீர்" என்றபடி சிங்கராஜா கிளம்பினார்.
அப்போது "யானை மாமா வணக்கம்" என்றபடி இரு முயல்கள் வந்து சேர்ந்தன.
முயல்களைப் பார்த்த நரிக்கு வாயில் நீர் ஊறியது. "யானையாரே அக்கரையில் முட்டைக் கோசு அமோகமா விளைஞ்சிருக்கு" என்றது.
"நானும் சைவம். முயல்குட்டிகளும் சைவம். எங்களை முதுகில் ஏற்றி அக்கரைக்கு அழைத்துச் சென்றால் திருப்தியாக சாப்பிடுவோம்."
முயல்களும் போக விரும்பின. யானையார் மூவரையும் முதுகில் ஏற்றிக் கொண்டு ஆற்றில் இறங்கி அக்கரையை அடைந்தார்.
"மாமா! முட்டைக் கோசுகளைக் காணோமே!"
"முதலில் இந்தப் பசுமையான இலைகளைச் சாப்பிடுங்கள். நான் போய் முட்டைக் கோசு இருக்குமிடத்தைப் பார்த்து வருகிறேன்."
நரி சென்றதும் அங்கு வந்த காகம் "முயல்களே சாப்பிட வேண்டாம். அது விஷச்செடி" என்றது.


யானையார் அதிர்ந்தார். "நான் சொல்வது உண்மைதான்!" – காகம்.
"விஷச் செடிகளைச் சாப் பிட்டு மயங்கிய உங்களைச் சாப்பிடுவது தான் திட்டம். போன வாரம் கூட ஒரு மான் மாட்டிக் கொண்டது."
நரி வந்து சேர்ந்தது. "நரியாரே முட்டை கோசு சாப்பிட்டாச்சா?" என்றார் யானையார். "ஏதோ சாப்பிட்டேன்" என்றது நரி.
"ஐயோ! உனக்கு வெள்ளரிப் பழம் கிடைக்கலையா?" என்றார் யானையார்.
"வெள்ளரிப்பழமா, எங்கே இருக்கு?" என்று பரபரத்தது நரி.
"மேற்குப் பக்கம் போய் திரும்பினா வெள்ளரித் தோட்டம். எல்லாம் பழுத்திருக்கும். சீக்கிரம் போயிட்டு வா."
நரி ஓடவும் காக்கைக்கு நன்றி கூறி முயல்களை ஏற்றிக் கொண்டு கிளம்பினார் யானையார்.
"நரி என்னாகும் மாமா?" என்ற முயல்களிடம் "ஆற்றைக் கடந்து காட்டிற்குள் வர முடியாமல் தவிக்கட்டும்" என்றார் யானையார்.



# சார் தபால்!

## கோகுலம் சுழல் கோப்பை யாருக்கு?

### உள்ளம் குளிர்ந்தது!

✉ த. ஜானகி எழுதிய 'அசல் வைரக்கல் எது?' என்ற சிறுகதை விறுவிறுப்பாகச் சென்றது. திருவடி ஏமாறும்போது என் உள்ளமும் ஏமாந்தது. இறுதியில் உண்மை வென்று திருவடியின் உள்ளம் குளிர்ந்தது போல் என் உள்ளமும் குளிர்ந்தது.

–எம். செல்லையா, சாத்தூர்.

### புதிய தகவல்!

✉ வெள்ளையில் கறுப்புக் கோடா, கறுப்பில் வெள்ளைக் கோடா என்று கண்டு பிடிக்க முடியாத வரிக்குதிரை மிகவும் சாது என நினைத்திருந்தேன். அனிமல் பிளானட் சேனலில் காண்பிக்கும்போதெல்லாம் புலி, சிங்கம் துரத்தும் போது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடுவதைப் பார்த்ததால் இந்த எண்ணம். இது பின்னங்கால்களால் ஒரு உதை விட்டால் சிங்கமே தோற்றுவிடும் என்பது எனக்குப் புதிய தகவலாக இருந்தது.

–கே. மெஹினா பேகம், பத்தாம் வகுப்பு, ஏற்காடு.

### பிடித்த பகுதிகள்...

✉ எனக்கும் என் நண்பர்களுக்கும் மிகவும் பிடித்த பகுதிகள் பிருந்தாவனம், எங்கள் ஊரில் நடந்தது, எங்கள் பள்ளியில் நடந்தது, விடுகதைப் பக்கம், புதிர்கள் ஆகியவை. ஏன் தெரியுமா? எங்களைப் போன்ற மாணவர்களின் படைப்புகள் இதில் அதிகம் இடம்பெறுவதே காரணம்.

–செ. சரவணக்குமார், சாத்தூர்.

### சிரிப்பாக...

✉ 'எலிகளைப் பிடிக்கும்' கதை சிறியதாக இருந்தாலும் சிரிப்பாக இருந்தது.

–ஆர். வனிதாஸ்ரீ, ஆறாம் வகுப்பு, குற்றாலம்.

### சந்தோஷம்!

✉ தேன் கூடு விளையாட்டு உண்மையிலேயே மிகவும் சுவாரசியம். நடுப்பக்கங்களை எடுத்து பெரிய அட்டையில் ஒட்டி வைத்து விட்டேன். அடிக்கடி விளையாடும் போது கிழியாது! வெயிலில் விளையாடாமல் வீட்டில் விளையாடுவதால் அம்மாவுக்கும் சந்தோஷம்!

– என். கே. ரகுராம், என்.கே. பிரசாத், கோவை.

### வியப்பு!

✉ சூரியனில் 109 பூமிகளை நிற்க வைக்கலாமா! பூமியே ரொம்பப் பெரிசு என்று வியக்கும் என்னால் இதைக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை!

– எம். செண்பகம், ஒன்பதாம் வகுப்பு, செங்கல்பட்டு.

### யார்?

✉ கோகுலம் சுழல் கோப்பை இந்த ஆண்டு பெறப் போவது யார்? சீக்கிரம் சொல்லி விடுங்கள். ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறோம்.

– ஆர். கணேஷ், பத்தாம் வகுப்பு, வெள்ளோடு.

கணேஷ், அடுத்த இதழ் வரை காத்திருங்கள். முடிவு தெரிந்து விடும்.

– ஆர்.

# Nanny's Christmas Present

DECEMBER '99

Rs. 6/-

## THE IMPIOUS BOY

## RENDEZVOUS with a GHOST

*Plus all regular features*

*The monthly magazine for childrer*

# GOKULAM




47, Jawarharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097

# மஞ்சு எப்படி மாறினாள்?

**எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்**



**காட்சி – 1**

**இடம் :** மணி வீடு

**மணி:** மஞ்சு! நீ எதுக்கு புத்தகங்களை யெல்லாம் பையிலே எடுத்து வச்சுக்கிட்டிருக்கே?

**மஞ்சு :** ஓ... உனக்கு இன்னும் தெரியாதா? நான் இன்னிக்கு நம்ம சித்தப்பா வீட்டுக்குப் போகப் போறேன். அங்கே பத்து நாள் தங்கிட்டு வரப் போறேன்.

**மணி :** சித்தப்பா வீட்டுக்கா! எதுக்கு?

**மஞ்சு :** ம்... சித்தப்பா பெண் பார்கவி, அண்ணா ரகுவோடு சேர்ந்து படிக்கப் போறேன்.

**மணி :** எதுக்கு திடீர்னு?

**அம்மா :** ஆமாம்டா! உங்க சித்தி ரெண்டு பேரையுமே அவங்க வீட்டுலே கொஞ்ச நாள் வந்து தங்கச் சொல்லி யிருக்கா. இப்போ மஞ்சு போயிட்டு வரட்டும். அடுத்ததா நீ போகலாம். ஒரே சமயத்துலே போனா, அங்கேயும் போய் சண்டை போட்டுக்கிட்டிருப்பீங்க!

**மணி :** பள்ளிக்கூடம் எப்படிப் போவே?

**அம்மா :** சித்தப்பா வீட்லேயிருந்தும் உங்க பள்ளிக்கூடம் பக்கம்தானே?

**மணி :** அ...ப்...பா! நான் பத்து நாள் இங்கே தனியா ஜாலியா இருப்பேன்.

**மஞ்சு :** நான் சொல்ல வேண்டியதை நீ சொல்லாதே! சரி, சரி, மொபெட் சாவியைக் கொடு. என் துணிகளை இஸ்திரி போட, பக்கத்துத் தெரு லாண்டரியில கொடுத்திருக்கேன். வாங்கிட்டு வரணும்.

**மணி :** பக்கத்துத் தெரு கடைக்குப் போக மொபெட்டும் வேண்டாம். சைக்கிளும் வேண்டாம். நடந்தே போ, பரவாயில்லை. நேத்து மொபெட்டை துடைக்கச் சொல்லியிருந்தேன். அதையும் செய்யலே.

**மஞ்சு :** எனக்கு அதுக்கெல்லாம் நேரமில்லை! நீ இப்போ சாவியைக் கொடு. நேரமாச்சு!

**மணி :** நம்ம வீட்டுலேயே 'அயர்ன் பாக்ஸ்' இருக்கு இல்லே... இஸ்திரி போட்டுக்க வேண்டியதுதானே! அண்ணன் சொன்னா தங்கை கேக்கணும் தெரிஞ்சுக்கோ! இதோ பார் நகத்தைக் கடிச்சுக்கிட்டே பேசாதேன்னு நேத்து தானே சொன்னேன். ஏன் இப்படி திடீர்னு மாறிட்டே? நல்லாத்தானே நடந்துக்கிட்டிருந்தே..

**அம்மா :** டேய் மணி! உங்களோட விவாதம் தினம் நடக்கிறதுதான்! போனா போகட்டும். சாவியைக் கொடுத்தனுப்புடா.

**மணி :** இந்தா, மொபெட்டைத் துடைச்சு வச்சுட்டுப் போ, இல்லேன்னா

அப்பா வந்தா திட்டுவாங்க.

**காட்சி – 2**

**இடம்** : ரகு வீடு

**மஞ்சு** : பார்கவி! ரகு எங்கே போறான்?

**பார்கவி** : லாண்டரிக்குப் போட்ட அப்பாவோட துணிகளை வாங்கிட்டு வரப் போறான்.

**மஞ்சு** : ஏன் நடந்தே போறான்? மொபெட், சைக்கிள் ஏதாவது எடுத்துக்கிட்டுப் போக வேண்டியதுதானே?

**பார்கவி** : பக்கத்துலே இருக்கற லாண்டரி கடைக்கு மொபெட்டா? பக்கத்துலே இருக்கற எந்த இடத்துக்கும் ரகு அண்ணா நடந்துதான் போவான். நானும் அப்படித்தான்!

**மஞ்சு** : பாவாடை சட்டைக்கெல்லாம் நீயே இஸ்திரி போட்டுக்கறே? லாண்டரியிலே போட மாட்டே?

**பார்கவி** : வீட்டிலே தான் 'அயர்ன் பாக்ஸ்' இருக்கே. ரகு அண்ணா கூட தன் துணிக்குத் தானே அயர்ன் பண்ணிப்பான்!

**மஞ்சு** : பரவாயில்லையே. நல்ல பழக்கம்தான்!

**பார்கவி** : நான் ரகு அண்ணா எது சொன்னாலும் கேட்பேன். எங்க அப்பாவோட சிநேகிதர்கள் ரகுவை பாய் ஆஃப் க்ளீன் ஹாபிட்ஸ், அதாவது நல்ல பழக்கவழக்கங்கள் கொண்டவன்னு அடிக்கடி சொல்வாங்க! வா விளையாடப் போவோம்!

**காட்சி – 3**

**இடம்** : ரகு வீடு

**பார்கவி** : ரகு அண்ணா! மணியண்ணா வந்திருக்கான்.

**ரகு** : வா மணி!


**மணி** : அம்மா மஞ்சுவை உடனே அழைச்சுக்கிட்டு வரச் சொன்னாங்க. மஞ்சுவுக்கு ஒரு சிறுகதைப் போட்டியிலே முதல் பரிசு கிடைச்சிருக்கு. நாளைக்கே பரிசளிப்பு விழாவாம்.

**பார்கவி** : அப்படியா.... வாழ்த்துகள் மஞ்சு.

**ரகு** : வாழ்த்துகள் மஞ்சு! அப்பா, அம்மா வந்ததும் சொல்லிட்டுப் போகலாம்.

**மஞ்சு** : உங்களுக்கு நான் ஸ்வீட் தர ஆசைப்படறேன். அடுத்தத் தெரு ஸ்வீட் ஸ்டால் வரைக்கும் போயிட்டு வந்துடறேன்.

**ரகு** : போயிட்டு வா, வேணும்னா என் மொபெட்டை எடுத்துக்கிட்டுப் போ!



உங்க வீட்லே நீ அப்படித்தான் போற வழக்கம்னு கேள்விப்பட்டேன்.

**மஞ்சு** : இல்லை வேண்டாம்! நடந்தே போயிட்டு வரேன்! பக்கத்துத் தெருவிலே தானே கடை இருக்கு! மணி! நீ வீட்டுக்குப் போ! நான் என் புத்தகங்களையும் துணி களையும் எடுத்துக்கிட்டு வந்துடறேன்.

**ரகு** : ஏ! மஞ்சு! என்ன இது? நகத்தை அடிக்கடி கடிச்சபடி பேசறே? இந்தப் பழக்கம், நம்ம உடல்நலத்துக்குக் கேடு! நாளைக்குப் புத்தாண்டு நாள். இந்தப் புத்தாண்டு நாள் அடையாளமா இந்தப் பழக்கத்தை நீ விட்டுடணும்.

**மஞ்சு** : சரிண்ணா! இந்த வினாடி யிலேயிருந்தே இந்தப் பழக்கத்தை விட்டுடறேன். கடைக்குப் போயிட்டு வந்துடறேன்.

**மணி** : (தனக்குள்) என்ன இது? இந்த மஞ்சு நம்ம வீட்டிலே நான் சொன்னதைக் கேட்காம எல்லா இடத்துக்கும் மொபெட்டை எடுத்துக்கிட்டுப் போவா! இங்கே வண்டி இருந்தும் கூட நடந்து போறேங்கறா. ரகு சொன்னதும் நகம் கடிக்கற பழக்கத்தையும் விட்டுடறேங்கிறா. எல்லாமே தலைகீழா நடக்கிறது. நான் சொன்னா எதையும் கேட்கறதில்லே. வீட்டுக்கு வரட்டும்... கேட்கறேன்.

## காட்சி – 4

**இடம்** : மணி வீடு

**மஞ்சு** : மணி அண்ணா! இதோ பார், இதுதான் எனக்குக் கிடைச்ச பரிசு! நல்லா இருக்கா பார்!

**மணி** : எங்கிட்டே பேசாதே போ!

**மஞ்சு** : சித்தப்பா வீட்டுலேயிருந்து நான் திரும்பி வந்ததுலேயிருந்து ஏன் எங்கிட்டே கோபமா இருக்கே?

**மணி** : ஆமாம் கோபம் தான்! நான் உன் சொந்த அண்ணன். ரகு ஒன்று விட்ட அண்ணன். ஆனா நான் சொல்ற எதையும் நீ கேக்கறதில்லே. ஆனா ரகு வீட்டுலே நீ இருந்தப்போ, அவன் சொல்றபடியே நடந்துகிட்டே ஏன் அப்படி?


**மஞ்சு** : ஆமாம்! ரகு என்ன சொன்னாலும் அதை மறுத்து நடக்க என்னால முடியாது!

**மணி** : ஏன்?

**மஞ்சு** : மத்தவங்க எப்படி நடந்துக்கணும்னு அவன் விரும்பறானோ, அப்படியே அவன் நடந்து காண்பிக்கறான். உதார ணமா இப்ப கூட நீ நகத் தைக் கடிச்சுக்கிட்டேதான்



# தலையாட்டும் பொம்மை!



தஞ்சா வூரு பொம்மை
தலையை ஆட்டும் பொம்மை!
மண்ணால் செய்த பொம்மை
மலிவு விலையில் பொம்மை!

கையும், காலும் இல்லை
கனத்த உருட்டுப் பொம்மை!
கையால் தொட்டால் போதும்
கரணம் போட்டே ஆடும்!

அழுத பிள்ளை சிரித்தே
ஆடச் செய்யும் பொம்மை!
பழைய தஞ்சைக் கலையின்
பெருமை கூறும் பொம்மை!

— புலேந்திரன்

பேசினே. தெருக் கோடி கடைக்கும் நீ மொபெட்டை எடுத்துக்கிட்டுப் போறே. அயர்ன் பாக்ஸ் இருந்தும் லாண்டரியிலேதான் உன் துணிகளை அயர்ன் பண்ண கொடுக்கறே. இதையெல்லாம் நான் உன்னைப் பார்த்துத்தான் கத்துக்கிட்டேன். அதனால நீ சொல்றபடி என்னால நடக்க முடியலே! ஆனா ரகு அண்ணா பக்கத்துக் கடைகளுக்கு நடந்தே போறான். நகத்தைக் கடிக்கறதில்லை. தானே அயர்ன் பண்ணிக்கிறான். அதனால அவன் சொல்றபடி நடக்கணும்னு எனக்குத் தோணுது.

**அப்பா :** மணி! மஞ்சு சொல்றதும் சரிதானே. தான் சொல்றதைத் தானே கடைப்பிடிக்கிறவனாலத்தான், மத்தவங்க தவறுகளையும் திருத்த முடியும். இது எல்லாருக்கும் எப்பவும் பொருந்தும். நீ மஞ்சுவை விட ரெண்டு வயசு பெரியவன்! நீதான் அவளுக்கு முன்னுதாரணமா நடந்து காட்டணும். நீ அண்ணன் கிறதனால மட்டும், மஞ்சு நீ சொல்றபடி நடக்கணும்னு எதிர்பார்க்க முடியாது. நீயும் ரகு மாதிரி 'பாய் ஆஃப் க்ளீன் ஹாபிட்ஸ்'னு சொல்லும்படியா நடந்துக்க. அப்புறம் நீ சொல்றபடி நானே நடப்பேன்!

**மணி :** அப்பா! நீங்க சொன்னது ரொம்ப சரி. நாளைக்கே நானும் ரகு வீட்டுக்குப் போகப் போறேன்! அங்கே ஒரு வாரம் தங்கப் போறேன்.

**அப்பா :** எதுக்குடா?

**மணி :** நானும் அவங்களோடு இருந்தா, மஞ்சு மாதிரி மாறிடுவேன். இப்ப உடனே கீழே இருக்கற மொபெட்டைத் துடைச்சுட்டு வரேன்!

**அப்பா :** வெரிகுட் மணி!

# விடுகதைப் பக்கம்



**I** 1. ஒற்றைக் காலில் நிற்கும் வெள்ளையன் ஓடினால் பிடித்துவிடும் கொள்ளையன் –அவன் யார்?

2. மூடிய சிறைக்குள் ஒழுங்காய் இருப்பான்; திறந்துவிட்டால் காற்றில் மறைவான் – அவன் யார்?

3. காலிலே கிடப்பான். கத்திக் கொண்டே இருப்பான் – அவன் யார்?

## ஐந்து ஊருக்கு ஒரே மந்தை – அது என்ன?

4. தாளைக் கண்டதும் கடிப்பான். ஒவ்வொரு முறையும் பல்லை இழப்பான். அவன் யார்?

5. மூன்று பிள்ளைகள் உள்ள குடும்பம். மூத்தவன் குட்டை, அடுத்தவன் நெட்டை, இளையவன் ஒல்லி. அவர்கள் யார்?

– **எஸ். கவிதா,**
**ஏழாம் வகுப்பு, திருநெல்வேலி – 7.**

**II** 1. சொல்லிக் கொடுத்தால் திரும்பச் சொல்லும் ஆனால் கிளியல்ல –அவன் யார்?

2. நித்திரையில் ஒரு சின்னத்திரை கண்டேன் –அது என்ன திரை?

3. அந்தரத்தில் பந்தல் கட்டி உணவினை பிடித்துத் தின்பான் –அவன் யார்?

4. குறுக்கும் நெடுக்கும் சென்று உலகத்தார் மானம் காப்பான் –அவன் யார்?

– **ஏ. ஸ்ரீராமுலு,**
**பெரம்பலூர் மாவட்டம்.**

**III** 1. ஐந்து ஊருக்கு ஒரே மந்தை – அது என்ன?

2. ஒரு பெண்ணிற்கு மூன்று கொண்டை – அது என்ன?

3. ஒரு சிமிழியில் மூன்று பெண்கள் – அது என்ன?

4. மேனி எல்லாம் கண்கள் மிக உண்டு அது என்ன?

5. குதித்தான் பல்லை இளித்தான் – அவன் யார்?

6. வேலிதாண்டி வெள்ளைக் குதிரை வந்து விட்டது. – அது என்ன?

– **பொன் திருவரங்கன்,**
**ஆறாம் வகுப்பு 'அ' பிரிவு,**
**ஆர்.சி. பள்ளி, மானாமதுரை.**

**IV** 1. ஏற உதவுபவன் இறங்கவும் உதவுவான் – அவன் யார்?

2. அழைக்காமல் வருபவன் அலைக் கழிக்காமல் செல்ல மாட்டான் – அவன் யார்?

3. இருட்டில் வெளிச்சம். வெளிச்சத்தில் இருட்டு– அது என்ன?

4. ஒலி கொடுப்பான். பிறகு குரல் கொடுப்பான் – அவன் யார்?

5. இது இருந்தால் எதுவுமே இராது– அது என்ன?

– **சிவபெருமான், இரணியல்.**

**விடைகள் :**

**I** 1. கொக்கு, 2. கற்பூரம், 3. கொலுசு, 4. ஸ்டேப்ளர், 5. கடிகாரத்தின் சின்ன முள், பெரிய முள், வினாடி முள்.

**II** 1. குழந்தை, 2. கனவு, 3. சிலந்தி, 4. நெசவுத் தொழில்.

**III** 1. உள்ளங்கை, 2. அடுப்பு, 3. ஆமணக்கு விதை, 4. நார்க்கட்டில், 5. சோளப் பொறி, 6. பருத்தி.

**IV** 1. ஏணி, 2. நோய், 3. காமிரா படம், 4. டெலிபோன், 5. ஓட்டை.





## சைக்கிள்

அன்று விடுமுறை. அப்பா தம்பிக்கு சைக்கிள் ஓட்ட கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார். தம்பி சரியாக ஓட்ட முடியாமல் இரண்டு முறை கீழே விழுந்து காயமாகி விட்டது. உடனே தம்பி "நான் சைக்கிள் கத்துக்க விரும்பலை" என்றான் அப்பாவிடம். அவனை சமாதானப்படுத்த அப்பா "நானும் சின்ன வயசில் இப்படித்தான் இரண்டு தடவை கீழே விழுந்தேன். அதுவும் ஒரு மரத்தில் இடித்து விழுந்தேன். ஆனால் மறுநாளே சரியாக ஓட்டக் கற்றுக் கொண்டேன்" என்றார். "அப்பா, நீங்க இடித்த மரத்தைக் காட்டுங்கள். நானும் இடிச்சிட்டு நாளைக்கே சைக்கிள் ஓட்டி விடுகிறேன்"

## விலை அதிகம்!

எங்கள் தெருவில் ஒருவர் பொம்மை விற்றுக் கொண்டு வந்தார். அதைப் பார்த்ததும் என் தம்பி பொம்மை வாங்கித் தரும்படி அடம் பிடித்தான். அம்மா பொம்மை வியாபாரியை அழைத்து விலை கேட்டார். "முப்பது ரூபாய்" என்றார் வியாபாரி. "முப்பது ரூபாயா! விலை ரொம்ப அதிகமாக இருக்கே" என்று அம்மா சொன்னார். "இது அருமையான




பொம்மை. கண்ணை மூடிக்கிட்டு தாராளமா முப்பது ரூபாய் கொடுக்கலாம்" என்றார் வியாபாரி. உடனே அருகில் இருந்த தம்பி "அம்மா கண்ணை மூடிக்கிட்டு அதிகமா பணம் கொடுத் துடப் போறீங்க. கண்ணை திறந்துட்டே கொடுங்க" என்றான். தம்பியின் பேச்சைக் கேட்டு ரசித்த வியாபாரி ஐந்து ரூபாய் தள்ளுபடி செய்தார்.

– ப. காளிதாசன், நீர்விளங்குளம்,
புதுக்கோட்டை மாவட்டம்


## வாயைத் திறந்து...

தொழிற் பயிற்சி நிலையத்தில் சேர்வதற்காக கடலூருக்குச் செல்ல வேண்டியிருந்தது. நானும் நண்பனும் கடலூர் பேருந்தில் ஏறினோம். அது எங்கள் நிறுத்தத்தை விட்டால் கடலூரில்தான் நிற்கும். வண்டி வேகமாக போய்க் கொண்டிருந்தது. என் நண்பன் கண்டக்டரிடம் இரண்டு விரலைக் காட்டினான். உடனே கண்டக்டர் விசில் ஊதி பேருந்தை நிறுத்தினார். பிறகு "ஏம்ப்பா, ஏறி ரெண்டு நிமிஷம்தான் ஆகுது. எல்லாத்தையும் முடிச்சிட்டு ஏறலாமில்லை. இப்படி உயிரை வாங்கறே" என்றார் எரிச்சலுடன். "என்ன சார் கேட்டேன்! ரெண்டு கடலூர் டிக்கெட்டுக்காக விரலைக் காண்பித்தேன்" என அப்பாவியாகச் சொன்னான் நண்பன் "வாயைத் திறந்து கேட்கக் கூடாதா?" என்றபடி மீண்டும் விசில் ஊதினார் கண்டக்டர்.

– ந. துரை,
வெள்ளையாம்பட்டு.



# திருடன் கொடுத்தானா?



என்றாங்னே பார்க்கலாம்! அப்பாவும் நானும் சிரிக்க ஆரம்பித்தோம்.

– ம. மகேஷ்,
தாரமங்கலம்.


## எப்படி இருக்கு?



எனக்கும் தங்கைக்கும் அப்பா ஊரிலிருந்து புதுத் துணிகள் வாங்கி வந்தார். எனக்கு என்று அப்பா கொடுத்த துணியை தங்கை வாங்கிக் கொண்டாள். இருவரையும் புதுத் துணிகளைப் போட்டுக் கொண்டு வருமாறு அம்மா சொன்னார். முதலில் என் தங்கை போட்டுக் கொண்டு வந்து என்னிடம் "எப்படி இருக்கு?" என்றாள். எரிச்சலிலிருந்த நான் "உன்னை மாதிரியே இருக்கு" என்றேன். "உண்மையாவா! ரொம்ப அழகா இருக்கா?" என்றாள் வியந்தபடி. "இல்லை. லூசா இருக்கு" என்றேன். உடனே அடிக்க என்னைத் துரத்தினாள். "எனக்கு வாங்கினது உனக்கு லூசாதானே இருக்கும்" என்று சமாளித்தேன்.

– டி. மாரியம்மாள்,
பத்தாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, ஆண்டிப்பட்டி

## திருடன்!



இரவு தூங்கிக் கொண்டிருந்தோம். பக்கத்து வீட்டிலிருந்து திடீரென 'திருடன், திருடன்' என்ற சத்தமும் அழுகையும் கேட்டது. விளக்கைப் போட்டு எல்லோரும் வெளியே வந்தோம். பக்கத்து வீட்டுக்காரர் "திருடன் வந்தான். கம்பை எடுத்துக்கிட்டு அடிக்க போனபோது, எங்களை அடிச்சிட்டு ஓடிட்டான். நல்லவேளை அடி பலமாக இல்லை" என்றார். இதைக் கேட்ட என் பாட்டி "திருடன் வந்தால் எதையாவது எடுத்துட்டுத் தான் போவான். பரவாயில்லை, உங்களுக்கு கொடுத்துட்டுப் போயிருக்கான்" என்றார். பக்கத்து வீட்டுக்காரர்கள் வலியை மறந்து சிரித்தனர்.

– என். ரம்யா, எட்டாம் வகுப்பு,
ராஜ் மெட்ரிகுலேசன் பள்ளி,
கூறை நாடு, மயிலாடுதுறை

## ஊறுகாய்

நான் மளிகைக் கடைக்குச் சென்றிருந்தேன். எனக்கு முன் ஒரு சிறுவன் சாமான்களை வாங்கிக் கொண்டிருந்தான். எல்லாம் வாங்கி முடித்து கிளம்பும்போது "பிரியா ஊறுகாய் தாங்க" என்றான். உடனே கடைக்காரர் "இலவசமா கறிவேப்பிலை தரலாம். ஊறுகாய் எல்லாம் தர முடியுமா?" என்று கேட்டார். "உங்ககிட்ட யாரு ஓசியா கேட்டா? நான் கேட்டது பிரியா ஊறுகாய்" என்றான். கடைக்காரர் மன்னிப்புக் கேட்டு விட்டு ஊறுகாயைக் கொடுத்து அனுப்பினார்.

– பி. விஜயகுமார்,
ஆட்டையாம்பட்டி, சேலம் மாவட்டம்.



# அநியாயமான தீர்ப்பு!

குயில் ஒன்று மரக்கிளையில் அமர்ந்து பாடிக் கொண்டிருந்தது. மறுநாள் அந்தக் காட்டில் வன விழா! அதையொட்டி ஒரு பாட்டுப் போட்டி. அதில் பங்கு பெறத்தான் அந்தக் குயில் பாடிப் பயிற்சி செய்து கொண்டிருந்தது. எப்படியாவது முதல் பரிசைப் பெற்றுவிட வேண்டும் என்பது அதன் நோக்கம்.

அருகில் இன்னொரு மரம். அதில் ஒரு காகம். அதற்கும் போட்டியில் பங்குபெற ஆசை. எனவே, அதுவும் உரக்கப் பாடிப் பயிற்சி செய்து கொண்டிருந்தது.

அந்தக் காகத்தின் கரகரப்பான குரல் குயிலுக்கு இடையூறாக இருந்தது. எனவே அது, "ஏ கறுப்புக் காகமே! வீணில் ஏன் 'காவ் காவ்' என்று கத்திக் கொண்டிருக்கிறாய்? இங்கே நான் பாடிப் பயிற்சி செய்து கொண்டிருப்பது தெரியவில்லையா?" என்றது.

அதற்குக் காகம், "என்ன இப்படிக் கேட்டு விட்டாய்? நானும்தான் போட்டியில் பாடப் போகிறேன்" என்றது.

அதைக் கேட்ட குயில் ஏளனமாகச் சிரித்து விட்டு, "உனக்கெல்லாம் பாட்டுப் போட்டி ஒரு கேடா? ஏற்கெனவே கரகரத்த குரல் உரக்கக் கத்தி, அதை ஏன் இன்னும் கெடுத்துக் கொள்கிறாய்? சும்மா கிட. உன் கத்தல் என் பயிற்சிக்கு இடையூறாக இருக்கிறது" என்றது.

காகத்துக்கு மிகுந்த வருத்தமாகப் போய் விட்டது.

அப்போது, தெற்கு வானில், சற்று தூரத்தில் திடீரென்று செந்நிற ஒளி தென்பட்டது. கூடவே கரும்புகை மண்டலம்.

காகத்துக்கு அங்கு என்ன நடக்கிறது என்பது புரிந்து விட்டது. ஆம்! அங்கு பெரும் காட்டுத் தீ!

காட்டில் அப்படிப்பட்ட தீ எப்போதாவது ஏற்படுவது உண்டு. அதில் சிக்கிப் பறவைகளும் விலங்குகளும் உயிர் விட்டு விடும். விவரம் தெரியாமல், ஏராளமான பறவைகள் அந்தப் பக்கமாகப் பறந்து போய்த் தீயில் விழுந்து மடிந்து போய்விடும்.

காகம் அந்தகைய அழிவைப் பல முறை நேரில் பார்த்திருக்கிறது. எனவே அது பதறிப் போய்விட்டது. முடிந்த வரையில் மற்ற பறவைகளை எச்சரிக்கை செய்து, அவற்றைக் காப்பாற்ற விரும்பியது. தன்னுடைய அந்த முயற்சியில் குயிலும் துணை நின்றால் நல்லது என்று அது



நினைத்தது.

எனவே காகம் குயிலை நோக்கி, "குயிலே, குயிலே... அதோ பார்! பெரும் காட்டுத் தீ! உடனே கிளம்பு... நீ ஒரு பக்கம் போ. நான் ஒரு பக்கம் போகிறேன். இருவருமாகப் பறந்து போய், வர இருக்கும் ஆபத்து பற்றிக் கூறி எல்லாப் பறவை களையும் எச்சரிக்கை செய்யலாம் புறப் படு..." என்று அதை அழைத்தது.

ஆனால், குயில் அதைப் பொருட் படுத்தவே இல்லை. அது மிக அலட்சிய மாக, "ஏ காகமே! முட்டாள்தனமாகப் பேசாதே! அந்தத் தீ வெகு தூரத்தில் இருக் கிறது. அதால் நமக்கு ஒன்றும் ஆபத்து இல்லை" என்றது.

அதற்குக் காகம், "இல்லை குயிலே...! அப்படி எண்ணாதே. அந்தப் பக்கத்துக் குப் பறந்து செல்லும் பறவைகள் தாமாக அத் தீயில் போய் விழுந்து இறந்து போகும். எனவே, தீயைச் சுற்றி நாற்புறமும் உள்ள பறவைகளை எச்சரித்து, அந்தப் பக்கம் போகாமல் தடுக்க வேண்டும்... தயவுசெய்து புரிந்து கொள். கிளம்பி வா..." என்று மன்றாடி அழைத்தது.

குயில் வர மறுத்து விட்டது. "பொதுச் சேவை செய்வதற்கெல்லாம் எனக்கு நேரம் கிடையாது. எனக்கு விருப்பமும்

## ஜானகி மணாளன்

இல்லை. நாளைக்கு வன விழாப் பாட்டுப் போட்டி! அதில் நான் முதல் பரிசைப் பெற்றே தீர வேண்டும். இன்று முழுவதும் பாடிப் பாடிப் பயிற்சி செய்தால்தான், எனக்கு வெற்றி கிட்டும். எனவே நீ போ, நான் வர முடியாது" என்றது.

மேலும் தொடர்ந்து, "நீ உடனே கிளம்பு. உன்னுடைய நாராசக் குரலி லிருந்து எனக்கு விடுதலை வேண்டும். அப்போதுதான் என்னால் நிம்மதியுடன் பயிற்சி செய்ய முடியும்" என்றது.

குயில் தன் பேச்சைக் கேட்காது என்ப தைக் காகம் புரிந்து கொண்டு விட்டது. எனவே, அது தனியாகவே நாற்புறமும் பறந்து திரிந்து, உரத்த குரலில் கரைந்து, தீயின் ஆபத்து பற்றி, எல்லாப் பறவை களையும் எச்சரித்தது. 'தீயுள்ள பக்கம் இரை தேடப் பறக்காதீர்கள்' என்று கூறி, மற்றப் பறவைகளைத் தடுத்தது.

காகத்தின் இந்த நன்முயற்சியால், அந் தக் காட்டின் பறவைகள் எல்லாம் காப் பாற்றப்பட்டன.

மறுநாள், திட்டமிட்டவாறு, வன விழா பாட்டுப் போட்டி நடைபெற்றது.



பட்டியல் பெயர் வரிசைப்படி, எல்லாப் பறவைகளும் மேடையேறிப் பாடின.

கழுகு, மைனா, வானம்பாடி மூன்றும் தான் நடுவர்கள்.

குயிலின் முறை வந்தபோது, 'தனக்கு நிகர் வேறு யார் இந்தச் சபையில்' என்ற கர்வத்துடன், அது மேடை ஏறியது. 'வசந்தமே நீ வாராய்' என்று தொடங்கும் பாடலைத் தன் திறமை முழுதும் காட்டி, அது வெகு இனிமையாகப் பாடியது. அனைவரும் மெய்மறந்து பாட்டை ரசித்தனர்.

கடைசியாகக் காகத்தின் முறை. ஏற்கெனவே, அதனிடம் கரகரப்பான குரல்! முதல் நாள் உரத்த குரலில் கத்தியதன் காரணமாகக் குரல்வளை வீங்கிப் போய் விட்டதால், இப்போது வினோதமான கட்டைக் குரலாக மாறியிருந்தது. பாழ்பட்ட தன் குரலில் அது, 'அடுத்தவர் வாழப் பாடுபடு...' என்று தொடங்கும் பாடலை, மிகவும் சிரமப்பட்டுப் பாடியது. சுருதி சுத்தம் துளியும் இல்லை. வேகம் குறைந்து இயங்கும் ஆடியோ காஸட்டிலிருந்து வெளிப்படும் 'கன்னா பின்னா' ஒலியைப் போன்று, சிரமப்பட்டு முக்கி முனகிப் பாடியது காகம்!

அதைக் கேட்ட குயிலின் முகத்தில் பரிகாசப் புன்னகை! அத்துடன் ஏளனப் பேச்சு! அது தன் அருகில் இருந்த மற்ற பறவைகளிடம், "காக்கையின் கத்தலைக் கேட்டீர்களா? கிழிந்து போன மத்தள ஒலியைப் போல் இல்லை? இதெல்லாம் ஏன் பரிசுக்கு ஆசைப்பட்டுப் போட்டிக்கு வருகிறதோ? வெட்கக்கேடுதான்" என்றது.

குயில் கிசுகிசு என்றுதான் பேசியது. என்றாலும், அது என்ன பேசியிருக்கும் என்பதைக் காகத்தால் யூகிக்க முடிந்தது. உடனே அதன் மனம் மிகவும் புண்பட்டு விட்டது. எனினும், 'பலன் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும்; போட்டியில் பங்கு பெற்றோம்' என்ற நிறைவு அதன் மனதில் இருந்தது.

ஒருவழியாகப் போட்டி நிறைவுற்று, பரிசு பெற்றவர்களின் பெயர்களை அறிவிக்க எழுந்தார் கழுகார்.

முதல் பரிசு பெற்ற பறவையின் பெயர் அறிவிக்கப்பட வேண்டும். உடனே குயில் மேடையேறுவதற்குத் தயாராகி விட்டது. தன்னைத் தவிர வேறு எவருக்கும் முதல் பரிசு கிடைக்காது என்ற நம்பிக்கை அதனிடம்.

கூட்டத்தினரை ஒரு தடவை பார்த்து விட்டுக் கழுகார் சொன்னார் - "இன்றையப் போட்டியில் எல்லாப் பறவைகளுமே மிக நன்றாகப் பாடினார்கள்; என்ன செய்வது? ஒருவருக்குத்தானே முதல் பரிசு வழங்க முடியும்! எனவே, நடுவர்களின் ஒருமித்த தீர்ப்புப்படி, இன்று முதல் பரிசு பெறும் பறவை..." என்றவாறு சற்று நிதானித்து விட்டுச் சொன்னார், "முதல் பரிசு பெற்ற பறவை காகம்!"

அவ்வளவுதான்! குயிலுக்குச் சப்பென்று ஆகிவிட்டது. அதனிடம் ஏற்பட்ட ஏமாற்றம் கடும் கோபமாக மாறி விட்டது. உடனே அது, உரத்த குரலில் நடுவர்களின் தீர்ப்பை எதிர்த்து இப்படிச் சொன்னது, "இது நியாயமான தீர்ப்பு அல்ல. ஒருதலைப்பட்சமானது" என்றது.


குயிலின் குற்றச்சாட்டுக்குப் பதில் அளிக்கும்விதம் குயிலிடம் கழுகார் கேட்டார் : "காகத்தின் குரல் பாழ்பட்டதுதான்; அப்படி அது பாழ்பட்டுப் போனதற்குக் காரணம் என்ன?"

குயிலிடம் பதில் இல்லை. எனவே

**"சார், சென்னை போற இந்த இரண்டு பஸ்ல எது முன்னால போகும்?"**

**"இந்த இரண்டு பஸ்ஸுமே முன்னால்தான் சார் போகும்!"**

**- சீ. புருஷோத்தமன்**



# குறுக்கெழுத்துப் புதிர் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 எ | ரு | ம் | 2 பு | ■ | 3 டா | ல் | பி | ன் |
| ர் | ■ | ■ | ய | ■ | 4 சோ | ■ | ■ | 5 கூ |
| ணா | ■ | ■ | ல் | 6 நூ | ■ | ■ | ழை | ■ |
| கு | க் | 7 பா | ■ | ■ | 8 பு | ர | 9 த | ம் |
| ள | ■ | ■ | ளி | ■ | லி | ■ | ■ | ன |
| ம் | 10 த | ந் | 11 கா | ■ | ■ | ம் | ப | 12 தீ |
| ■ | றி | ■ | ■ | ணை | 13 ப | ■ | ■ | ஸ் |
| 14 தே | ■ | ■ | ணை | ■ | ல | ■ | ■ | ல |
| ன் | பி | ப் | 15 ஆ | ■ | ன் | லோ | பி | 16 பா |



கழுகார், "இதற்கு நீ பதில் கூற மாட்டாய். ஒரு ஆல மரத்தில் அமர்ந்து நேற்று உன் வீட்டருகில் நடந்தவை எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். காட்டுத் தீ பற்றிய செய்தியை மற்ற பறவைகளுக்கு அறிவித்து அவற்றை எச்சரித்துக் காப்பாற்ற நீ முன் வரவில்லை. மறுத்து விட்டாய். எனவே, மிகுந்த அபிமானத்துடன் இந்தக் காகம் தன்னந்தனியாகக் கூச்சலிட்டு எல்லாப் பறவைகளையும் எச்சரித்து, அழிவிலிருந்து அவற்றைக் காப்பாற்றியது. அப்போது காகம், இவ்விதம் கத்துவதால், தன் குரல் வளை வீங்கிக் குரல் கட்டிப் போகுமே என்பது பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. தன்னை வருத்திக் கொண்டு, பிறருக்கு உதவி, அவர்களுடைய துயர் துடைக்க யார் முன்வருகிறார்களோ, அவர்களே மற்ற எல்லாரையும் விட உயர்ந்தவர்கள்.

"பாட்டுப் போட்டிக்குக் குரல் அவசியம்தான்; அத்துடன் அவர்கள் பாடும் பாடலின் பொருளையும் நாம் பார்க்க வேண்டும். 'அடுத்தவர் வாழப் பாடுபடு' என்ற காகத்தின் பாடலில் பரோபகாரக் கருத்துகள் சிறப்பாக இருந்தன. பாட்டில் மட்டுமல்லாது, அந்தப் பரோபகார குணத்திற்கு ஏற்ப இக் காகம் நடந்து கொண்டும் விட்டது. எனவே, காகத்தின் செயலையும் அது பாடிய பாடலின் பொருளையும் பெருமைப்படுத்தும் விதம், அதற்கு அதிக மதிப்பெண்கள் அளித்து நீதிபதிகள் போட்டியில் முதலிடம் வழங்கியுள்ளனர். காகத்துக்கு எங்களது பாராட்டுகள். பரிசைப் பெற்றுச் செல்லுமாறு, காகத்தை மேடைக்கு அழைக்கிறோம்..." என்றார்.

கழுகாரின் நீண்ட – விளக்கமான பேச்சை ஆமோதிக்கும் விதம் எல்லாப் பறவைகளும் ஆரவாரம் செய்தன. மகிழ்ச்சியடைந்த காகம் பெருமை பொங்க மேடையேறியது. அவமானப்பட்ட குயில், தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு அங்கிருந்து வெளியேறியது!

# கோகுலம் க்விஸ் முடிவு

அக்டோபர் கோகுலம் க்விஸ் போட்டியில் ஆர்வத்துடன் நிறைய பேர் பங்கேற்றனர். சரியான விடைகளை எழுதிய இருபது பேர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :**

1. பி. எம். சபீதா, புதூர், திருச்சி.
2. எம். எம். ரிஸ்வான், கிளியனூர் அஞ்சல், மயிலாடு துறை.
3. எஸ்.ஜி. கீர்த்தனா, பட்டாபிராம், சென்னை.
4. ப. காளிதாசன், நீர்விளங்குளம், புதுக்கோட்டை மாவட்டம்.
5. சூர்யகலா, அரசினர் மேல்நிலைப் பள்ளி, போரூர்.
6. ஆர். சம்பத்குமார், இரத்தினசபாபதிபுரம், கோவை.
7. எம். சந்திரமௌலீஸ்வரன், சோழபுரம், குடந்தை தாலுகா.
8. எம். கே. நாகலக்ஷ்மி, விக்கிரமசிங்கபுரம், திருநெல்வேலி மாவட்டம்.
9. என். ஹரிராம்குமார், வி.எம். சத்திரம், திருநெல்வேலி.
10. எம். பாலகுமாரன், சோழபுரம்.
11. அருணா கோபி, அரும்பாக்கம், சென்னை.
12. எஸ். ஆர். அருண், சிவகிரி.
13. ச. வேங்கடலக்ஷ்மி, திருச்சி.
14. டி.ஜி. சிவப்ரியா, காஞ்சிபுரம்.
15. திவ்யா சௌந்தர், கோவை.
16. செ. கார்த்திக்ராஜ், ஆர்.எஸ். புரம், கோவை.
17. எஸ். கவிதா, திருநெல்வேலி.
18. க. இலக்கி அரசு, ராயன்பாளையம், காரைக்கால்.
19. க. அட்சயா, புலியூர், கரூர் மாவட்டம்.
20. கி. பிரதீப்குமார், கோழிவிளை, கன்னியாகுமரி மாவட்டம்.

**சரியான விடை :**

1. கூடு கட்டவும் அடைக்கவும் தெரியாத பறவை குயில்.
2. பைசா நகரத்து சாய்ந்த கோபுரம் இத்தாலி நாட்டில் உள்ளது.
3. பாரமானியைக் கண்டறிந்தவர் டாரிசெல்லி.
4. உலகத்தின் கூரை என அழைக்கப்படும் நாடு திபெத்.
5. அக்பர், தீன் இலாஹி என்ற புதிய மதத்தைத் தோற்றுவித்தார்.
6. உலகிலேயே மிகச் சிறிய கண்டம் ஆஸ்திரேலியா.
7. மனித இனத்தின் அறிவியல் பெயர் ஹோமோ சேப்பியன்ஸ்.
8. பாண்டா கரடிகள் சீனா நாட்டில் வாழ்கின்றன.
9. மாலைக்கண் நோய் வைட்டமின் ஏ குறைவால் ஏற்படுகிறது.
10. நீண்ட நேரம் கொண்ட ஒரு நாளை உடைய கிரகம் வெள்ளி.

**பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள்.**
**கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.**

டி.வி. பார்த்துக் கொண்டிருந்த மேனகாவை அழைத்தான் பிரதீப்.

"எதுக்குடா கூப்பிட்டே?" என்றபடி அவனருகே அமர்ந்தாள் மேனகா.

"ஜோக் சொல்றேன் பார். வரிக்குதிரை : நான் சொன்ன கதை நன்றாக இருந்ததா? குதிரை : வரிக்கு வரி ரொம்பவும் சுவாரசியமாகத்தான் இருந்தது" என்று பிரதீப் கூற மேனகா சிரித்தாள்.

"என்ன பிரதீப், மேனகா சிரிச்சிட்டிருக்கீங்க?" என்றபடி நண்பன் விநோத் வந்தான்.

"வா விநோத். உனக்கும் ஒரு ஜோக் சொல்றேன். மாடு 1 : சோகமா இருக்கியே ஏன்? மாடு 2 : வாழ்க்கையில் தோல்வி ஏற்பட்டிருச்சு, அதான்! மாடு 1 : இதுக்கெல்லாம் சோர்ந்து போகலாமா? முட்டி மோதி முன்னேறுவதுதான் வாழ்க்கை!"

"நல்லாயிருக்கு. உனக்கு எப்படி இந்த மாதிரி ஜோக் எல்லாம் வருது?" என்று வியந்தான் விநோத்.

"விநோத் இது பிரதீப் போட சொந்தச் சரக்கு இல்லை. 'குழந்தைக்குப் பிராணிகள் சொல்லும் ஜோக்ஸ்' என்ற புத்தகத்தைப் படிச்சிட்டுத்தான் சொல்றான்" என்றாள் மேனகா.

"அப்படியா! இருந்தா எனக்கும் கொடு பிரதீப்."

"விமலா வாங்கிட்டுப் போயிருக்கா. அவ தந்தவுடன் தரேன். இந்தப் புத்தகம் முழுவதுமே




விலங்கு, பறவைகள், பூச்சிகள் சொல்லக் கூடிய ஜோக்குகளா கவே இருக்குடா."

''வேற என்ன புத்தகம் வச்சிருக்கீங்க ரெண்டு பேரும்?'' என்று கேட்டான் விநோத்.

"நீ ஏதாவது படிச்சிருப்பியே! முதல்ல அதைச் சொல்" என்றாள் மேனகா.

"எஸ்.எஸ்.வாசன் என்பவர் எழுதிய 'நகைச்சுவை ததும்பும் நாடோடிக் கதைகள்' என்ற புத்தகத்தைப் போன வாரம் படிச்சேன் மேனகா. இதுல 21 கதைகள் இருக்கு. ஓவியர் ராமுவின் கைவண்ணத்தில் முழுப் பக்கப் படங்களோட படிக்க நல்லா இருக்கு. அளவும் பெரிசு'' என்று நிறுத்தினான் விநோத்.

"நான் சமீபத்துல கதைப் புத்தகங்கள் எதுவும் படிக்கலே. ஆனால், 'அன்னை இந்திராவும் அருமைப் புதல்வர்களும்' என்ற புத்தகத்தைப் படித்தேன். இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி, சஞ்சய் காந்தி ஆகிய மூவரைப் பற்றிய செய்திகள், சுவையான சம்பவங்கள் கட்டுரை வடிவில் தரப்பட்டுள்ளன. சிறுவர்க்கான புத்தகமா இருந்தும் படங்களே இல்லை" என்றாள் மேனகா.

அப்போது, ''என்ன மூணு பேரும் சேர்ந்து ஒரே அரட்டை என்றபடி" உள்ளே நுழைந்தாள் விமலா.

"ஜோக் புத்தகம் கொண்டு வந்திருக்கியா?" என்று பரபரத்தான் விநோத்.

"பொறுமையா இரு. அதோட ரா. பொன்ராசன் எழுதிய பாலும் தேனும் புத்தகத்தையும் கொண்டு வந்திருக்கேன்'' என்றாள் விமலா.

''கோகுலத்தில் அடிக்கடி பாட்டெழுதுவாரே அவர்தானே!'' – மேனகா.

''நீ சொல்றது கரெக்ட். கலாவின் படங்களில் ஒவ்வொரு பாட்டும் தாளம் போட்டு பாடவைக்குது.

"குட்டிராணி குட்டிராணி
குளிக்க வேணாமா? – இன்னும்
குளிருக்குப் பயந்து நின்றால்
அழுக்குப் போகுமா?"

புத்தகத்தை வாங்கி வேகமாக ஒரு பாடலைப் பாட ஆரம்பித்தான் பிரதீப்.

"அம்மா நின்றார் அம்மா நின்றார்
அடுப்பங் கரையிலே – எங்க
அக்கா வந்து

# குட்டிராணி குட்டிராணி குளிக்க வேணாமா?


அப்பம் கேட்டாள்
அம்மா விடத்திலே!

அழுது அழுது அக்கா கேட்டும்
அம்மா கொடுக்கலே – எங்க
அப்பா வந்து எனக்கும் தந்தார்
அம்மா தடுக்கலே!"

"இந்த மாதிரி நிறைய பாடல்கள் அருமையா இருக்கு. சில பாடல்களை கோகுலத்தில் நான் ஏற்கெனவே படிச்சிருக்கேன். நீங்க படிச்சிட்டு மெதுவா கொடுத்தாப் போதும். நான் வரேன்'' என்றபடி விமலா கிளம்பினாள்.

— ரே

- குழந்தைகளுக்குப் பிராணிகள் சொல்லும் ஜோக்ஸ், டி.என். இமாஜான், பக். 132, ரூ. 24/- மணிமேகலை பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை – 17.
- நகைச்சுவை ததும்பும் நாடோடிக் கதைகள், எஸ்.எஸ். வாசன், பக். 76, ரூ. 29/ - இராமநாதன் பதிப்பகம், விற்பனை உரிமை – மணிமேகலை பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை – 17.
- அன்னை இந்திராவும் அருமைப் புதல்வர்களும், எஸ். குலசேகரன், பக். 80, ரூ. 17/- அமிழ்தம் பதிப்பகம், 15, முத்துப் பிள்ளை தெரு, வ.உ.சி. நகர், வேலூர் – 632 001.
- பாலும் தேனும், ரா. பொன்ராசன், ரூ. 15/- பழனியப்பா பிரதர்ஸ், 14, பீட்டர்ஸ் சாலை, சென்னை – 14.



## இது என்ன?

'அக்னேஸ் கோன்க்ஸா போஜாக்ஸ் ஹ்யூ' என்ன தெரிந்த பெயராக இல்லையே... வாயிலும் நுழைய மறுக்கும் பெயராக இருக்கிறதே என நீங்கள் நினைப்பது தெரிகிறது. ஆமாம்.



கல்கத்தாவில் அல்லலுறும் ஏழைகள் துயர் துடைக்கும் பணியில் முழுமூச்சுடன் தன்னை அர்ப்பணித்துக் கொண்டதற்காக நோபல் பரிசு பெற்ற அன்னை தெரசாவின் தாயகப் பெயர்தான் இது.

ஆதாரம் : 'சிந்தனைக்கு விருந்தாகும் மணியான செய்திகள்'

## முதல் தபால் தலை!




சுதந்திர இந்தியாவின் முதல் தபால் தலையான மூன்றரை அணா தபால் தலை வெளியிடப்பட்டது நவம்பர் 21, 1945ல். இந்தத் தபால் தலையில், 'ஜெய்ஹிந்த்' என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது.

ஆதாரம் : வருடத்தின் ஒவ்வொரு தேதிக்கும் முக்கிய நிகழ்ச்சிகள்

தகவல் : **ஆறுபாதி புகழேந்தி, மயிலாடுதுறை.**

## வைட்டமின் சி



பத்து ஆரஞ்சுப் பழங்களில் கிடைக்கும் வைட்டமின் 'சி' உயிர்ச்சத்து ஒரு ரோஜாப் பூவின் இதழ்களில் கிடைக்கிறது.

## இங்க்!

எல்லா நாடுகளிலும் 'இண்டியன் இங்க்' என்று அழைக்கப்படும் இங்க்... நம் நாட்டுக்குச் சொந்தமானது இ...
இந்த இங்க் கண்டு...




பிடிக்கப்பட்டது சீனாவில்தான். பிரான்ஸ் நாட்டில் மட்டுமே இந்த இங்க் 'சீனா இங்க்' என்று சரியாக அழைக்கப்படுகிறது.

ஆதாரம் : 'பொது அறிவுக் குவியல்'

தகவல் : பி. தியாகராஜன், பேளுக்குறிச்சி.

## நிறம் மாறும் பாறை




தெற்கு ஆஸ்திரேலியாவில் ஆயர் பாறை என்ற ஒரு பாறை உள்ளது. அப்பாறை தினந்தோறும் காலையிலும் மாலையிலும் தனது நிறத்தை மாற்றிக் கொண்டேயிருக்கிறது. சூரிய ஒளியின் தன்மைக்கு ஏற்ற வகையில் இப்பாறை காலையில் மஞ்சள் நிறத்தில் இருந்து ஆரஞ்சு வண்ணத்திற்கும் மாலையில் சிவப்பு நிறத்திலிருந்து வைலட் வண்ணத்திற்கும் மாறுகிறது.

பல விநோதமான மரங்களும் விலங்குகளும் பறவைகளும் அங்கு இருக்கின்றன.

## மிக ஆழமான சுரங்கம்

மனிதர்களால் தோண்டப்பட்ட மிகப் பெரிய சுரங்கம் தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த கிம்பர்லியில் உள்ளதுதான். 1871-ல் தொடங்கி 1915 வரை 44 ஆண்டுகளில் இரண்டரைக் கோடி டன் பாறையும் மண்ணும் அங்கிருந்து



தோண்டப்பட்டு ஒன்றரைக் கோடி காரட் வைரங்களை எடுத்திருக்கிறார்கள். இதன் எடை சுமார் 2.7 டன்.

இச் சுரங்கம் 500 மீ. நீளம், 400 மீ. அகலம், 1200 மீ. ஆழம் கொண்டது. இப்போது அது திறந்தவெளிக் காட்சியகமாக உள்ளது.

– ஆர்.ஆர். பூபதி, திண்டுக்கல்.

## மிகப் பெரிய அட்லஸ்!


உலகிலேயே மிகப் பெரிய அட்லஸ் புத்தகம் ஜெர்மனியின் பெர்லின் நகர் வாசகசாலையில் உள்ளது. 300 வருடங்களுக்கு முன்பு தயாரிக்கப்பட்ட இந்த அட்லஸ் புத்தகத்தில் 35 நாடுகளின் வரைபடங்கள் மட்டுமே உள்ளன. இதன் எடை 175 கிலோ.

ஆதாரம் : மாணவர்களுக்கு அறிவியல் செய்திகள்

தகவல் : நெ. இராமன், சென்னை.



# பெருமைக்குரிய நாய்!




- மலை பாம்புக்கு விஷமில்லை.
- பன்றிக்கு நீந்தத் தெரியாது.
- வைரத்தின் மூலப் பொருள் நிலக்கரி.
- காகத்திற்கு ஆகாயத் தோட்டி என்று பெயர்.
- பவளம் பிராணிகள் இனத்தைச் சேர்ந்தது.
- ஆர்டிக்கில் வாழ்கின்ற விலங்கு துருவக் கரடி.
- ஒட்டகச்சிவிங்கி சத்தம் போடாது.
- 'மே' என்கிற பூச்சியின் வாழ்நாள் ஒருநாள்.
- பெரிய கடல் பறவை ஆல்பெட்ரோஸ்.

ஆதாரம் : அறிவியல் வினா - விடைகள்

தகவல் : நாகூர் ஆர். லோகநாதன், நாகை.

## நாயின் பெருமை!


இரண்டாவது உலகப் போரில் லண்டன் மீது நடைபெற்ற விமானக் குண்டு வீச்சின் போது பலரைக் காப்பாற்றிய பெருமைக்குரியது ஜெட் என்ற அல்சேஷன் நாய். இதன் வீரத்தைப் பாராட்டி மிக உயர்ந்த விருது அளித்துக் கௌரவித்தார்கள். 1949-ல் அதன் எஜமானி வீட்டுத் தோட்டத்தில் அதைக் கொண்டு போய் விட்டார்கள். மெதுவாக நடந்து சென்று தனது எஜமானியின் மடியில் தலைவைத்து உயிரை விட்டது அந்த நாய்!



ஆதாரம் : 'சுவையான செய்திகள்'

தகவல் : ஆர். பிரகாசம், மருதநாடு.

## இராகு, கேது என்ற பாம்புகள் உண்மையா?



ராகு, கேது என்று சொல்லப்படுவன பாம்புகள் அல்ல, அவை விண்ணில் எங்குமில்லை. அமாவாசையின் போது சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் ஒரு நேர்க்கோட்டில் சந்திரன் வந்தால் சூரியன் மறைக்கப்படும். இதனை நாம் சூரிய கிரகணம் என்கிறோம். மாறாக சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் ஒரு நேர்க்கோட்டில் பூமி வந்தால் சந்திரன் மறைக்கப்படும். இது பௌர்ணமி தினத்தன்று நிகழும். இதனை சந்திர கிரகணம் என்கிறோம். கிரகணத்தின் போது சூரியன் சந்திரன் மறைக்கப் படுவதை நம் முன்னோர்கள் அவற்றை கேது, ராகு என்ற பாம்புகள் விழுங்குவதாக சித்திரித்தார்கள்.

ஆதாரம் : 'எதனாலே... எதனாலே... எதனாலே?'


தகவல் : எல். கோபாலகிருஷ்ணன்

# மாயத் தீக்குச்சிகள்!

நீங்களும் மாஜிக் செய்யலாம்!

**தேவையான பொருட்கள் :**
ஒரே மாதிரியான இரண்டு தீப்பெட்டிகள், பசை.

**எப்படிச் செய்வது?**
ஒரு தீப்பெட்டியின் மீது இருக்கும் படம் உள்ள பகுதியை மட்டும் பிரித்தெடுக்கவும். மற்றொரு தீப் பெட்டியின் பின்





புறம் இந்தப் படத்தை ஒட்டி விடுங்கள். இப்போது தீப்பெட்டியின் இருபுறமும் படங்கள் இருக்கும். தீப்பெட்டியின் உள்ளிருக்கும் குச்சிகளைக் கொட்டி விடுங்கள். காலியான உள் பெட்டியின் பின்புறம் திருப்பி வரிசையாகக் குச்சிகளை ஒட்ட வைத்துக் காய விடுங்கள். நன்றாகக் காய்ந்த பின் உள் பெட்டியை எடுத்து உறையினுள் போட்டு வையுங்கள்.

உங்கள் நண்பர்களிடம் குச்சிகள் இல்லாத பகுதியை முதலில் காட்டுங்கள். பிறகு, "மறைந்த மாயக் குச்சிகளே இங்கு என் சொல்லுக்குக் கட்டுப்பட்டு வந்து சேருங்கள்" என்று கூறிக் கொண்டே நண்பர்கள் அறியாவண்ணம் பின்புறம் திருப்பிக் காட்டுங்கள். ஒட்டி வைத்த குச்சிகளைப் பார்த்த நண்பர்கள் வியப்படைவார்கள். மாறி, மாறி குச்சிகள் இல்லாத பக்கத்தையும், ஒட்டி வைத்த பக்கத்தையும் காட்டி பிரமிக்க வையுங்கள்.

## ஓவியப் போட்டி

**ஓ**வியப் போட்டியில் இந்த மாதம் இடம் பெறப் போவது உங்களின் மனம் கவர்ந்த மிக்கி மௌஸ். மிக்கி மௌஸின் படத்தை வண்ணத்தில் தீட்டி அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உங்கள் முகவரியை அவசியம் குறிப்பிட வேண்டும். கடைசி தேதி 20.12.99




முதல் ரேங்க்
கதை: பூமா
ஏன் ராகுல், ஒரு வாரமா 'பிராக்டிஸ்'க்கு வரலை நீ?
விளையாடப் போனால் படிப்பு கெடுமாம்..
நீ விளையாட்டிலும் சூரன், படிப்பிலேயும் கெட்டிக்காரனாச்சே?
நான் ஏழாவது ராங்க். நீ முதல் ரேங்க். இதையே சொல்லித் திட்டறாங்க வீட்ல!
சரி ராகுல் இனிமே நாம கம்பைன் ஸ்டடி பண்ணலாம். நீ படிக்க நான் எல்லா விதத்திலும் உதவறேன்.
சரி, சுதாகர்.
நல்ல மனசுடா உனக்கு!
அடுத்த மாதம்~
வெரி குட்!
மூணாவது ரேங்க் வந்துட்டியே!
அப்படியே முதல் ரேங்க் வர 'ட்ரை' பண்ணு!
இந்தப் பாராட்டு சுதாகருக்குத்தான் போகணும்!
ஒரு நாள்~
அடுத்த வாரம் பரீட்சை. எங்கே கிளம்பிட்டே ராகுல்?


சுதாகருக்குக் காய்ச்சல். அவன் நாலு நாளா பள்ளிக் கூடத்துக்கு வரலை. வகுப்பில் நடந்த பாடத்தை சொல்லிக் கொடுத்து- -ட்டு வரேன்.
பிறருக்கு உதவுகிற நேரத்தில நீ இன்னும் நல்லா படிச்சா முதல் ரேங்க் வாங்கலாமே!
ராகுலின் அக்கா வந்தா-
டேய் நல்ல சான்ஸ்டா சுதாகரை முந்து வதற்கு!
அக்கா இப்படிப் பேசாதே. ஒரே சமயத்தில் கேம்ஸ்லயும் படிப்பிலேயும் என்னைப் பிரகா சிக்கச் செய்தது சுதாகர்தான்.
படிப்பில் போட்டி, பொறாமை இருப்பதில் தப்பில்லே!
தப்புக்கா! எங்க நட்புக்கு நடுவே பொறாமை நுழைந்ததே இல்லை. இனிமேலும் இல்லை.
குட் ராகுல்!

# பணப்பையில் இருந்த

# மோதிரம் எங்கே?

பணையூரில் மகாலிங்கம் என்ற பணக்காரர் இருந்தார். அவர் மகா கருமி. தினமும் காலையில் நீராடி, பலகாரம் சாப்பிட்டபின் தமது அறைக்குச் செல்வார். அங்கிருக்கும் பெட்டிகளைத் திறந்து தான் சேமித்து வைத்திருக்கும் தங்க நாணயங்கள், நகைகள் அனைத்தையும் பார்த்து அகமகிழ்வார். அவற்றைக் கண்ணில் ஒற்றிக் கொள்வார். முத்தமிடுவார். திருப்தி ஏற்பட்ட பிறகே தினசரி அலுவல்களைக் கவனிக்கப் புறப்படுவார்.

வட்டிக்கு வட்டி போட்டு கறாராக வசூலிக்கும் இரக்கமில்லாத மனம் கொண்டவர் அவர். மாட்டு வண்டியில்தான் பணம் வசூல் செய்யப் போவார். ஒருநாள் எழுநூறு வராகன்களை வசூல் செய்து மடியில்



கட்டிக் கொண்டு ஊருக்குத் திரும்பினார்.

மாட்டு வண்டியின் ஆட்டம் சொகுசாக இருந்ததால் கருமி தூங்கி விட்டார். அவரது வேஷ்டி முடிச்சு நெகிழ்ந்து பணப்பை பாதையில் விழுந்து விட்டது கூடத் தெரியாமல் தூங்கினார்.

வண்டி வீடு வந்து சேர்ந்ததும் பணத்தைக் காணாத கருமி அலறினார். வண்டியை வந்த வழியே திருப்பி ஓட்டச் சொன்னார். மாலை மங்கி இருள் சூழ்ந்து விட்டதால் பணப்பை விழுந்த இடம் தெரியவில்லை.

"ஒன்றா, இரண்டா! எழுநூறு வராகன்கள்! யார் கையில் கிடைத்ததோ? எடுத்தவன் கொடுப்பானோ?" என்று புலம்பியபடி வீடு வந்து சேர்ந்தார்.

"ஐயா! மனசாட்சியுள்ள நல்லவர்கள் ஏராளமாய் இருக்கிறார்கள். எடுத்தவர் கொடுக்க உங்கள் முகவரி தெரிய வேண்டாமா? தண்டோரா போடச் செய்யுங்கள்'' என்று பணிவுடன் கூறினான் வண்டியோட்டி.

''நல்ல யோசனை'' என்றபடி தண்டோரா போட ஏற்பாடு செய்தார். "என் பணப்பையைக் கொண்டு வந்து கொடுப்பவர்களுக்கு நூறு வராகன் பரிசளிப்பேன்'' என்று தெரிவி என்றார்.

**க**ருமி இருந்த ஊரில் பிரமநாயகம் என்ற நல்ல



மனிதரும் இருந்தார். தன்னால் முடிந்த உதவிகளைப் பிறருக்குச் செய்வார். தம் பட்டம் அடித்துக் கொள்ளாத உபகாரி. அவர் கோபித்து, கடிந்து பேசி யாரும் பார்த்ததில்லை! சிறந்த பக்திமான். ஆற்றங்கரை மண்டபத்தில் நிலாக் கால் இரவுகளில் குழந்தைகளுக்கு ஒழுக்கமும் பக்தியும் கொண்ட கதைகளைச் சொல்வார். ஏழை எளியவர்களும் அவரிடம் மிகுந்த மரியாதையும் அன்பும் கொண்டிருந்தனர். தனது சொற்ப வருவாயில் எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார்.

அவரிடம் கருமியின் பணப்பை கிடைத்தது. எண்ணிப் பார்த்தார். எழுநூறு வராகன்கள் இருந்தன.

'பாவம்! யாருடையதோ! தொலைத்து விட்டு எப்படிப் பரிதவிக்கிறாரோ? பள்ளிக்கூடம் ரொம்ப ஒழுகுகிறது. ஓடு மாற்ற வேண்டும். பொதுக் குளத்தைத் தூரெடுத்தால் கோடைக் காலத்தில் தண்ணீர் பஞ்சம் வராது. அதோடு கோவிலையும் பழுதுபார்க்க வேண்டும். அதற்கு இந்தப் பணம் போதுமா? சரி, முடிந்தவரை பார்ப்போம்' என்றெண்ணியபடி வீடு திரும்பினார்.

அப்போது தண்டோராச் செய்தி காதில் விழுந்தது. 'அடாடா! இது மகாலிங்கத்தின் பணமா! பரிசாகக் கிடைக்கும் நூறு வராகனில் பள்ளிக்கூடத்துக்கு மட்டுமே புதுக் கூரை போட முடியும்' என்றெண்ணியபடி கருமியின் இருப்பிடம் சென்றார்.

**க**ருமி தூங்கவும் இல்லை; சாப்பிடவும் இல்லை; அப்போது அதிகாலை நேரம். வண்டியோட்டி வந்து பிரமநாயகம் வந்திருப்பதைக் கூறினான்.

பிரமநாயகம் பணிவுடன் பையைக் கொடுத்தார். பையைக் கொட்டி வராகன்களை எண்ணி மனத்துள் திருப்திப்பட்டுக் கொண்ட கருமி, "மோதிரத்தை என்ன செய்தாய்?" என்று கேட்டார்.

"மோதிரமா? வராகன்கள் மட்டும் தானே இருந்தன!" என்று திகைத்தார் பிரமநாயகம்.

"பார்த்தால் பெரிய மனிதத் தோற்றம்! செய்வது திருட்டுத்தனமா? வைர மோதிரத்தை விற்று விட்டாயா? வீட்டில் வைத்திருக்கிறாயா? கொண்டு வந்து தந்து விட்டு நூறு வராகன்களைப் பெற்றுக் கொள்" என்றார் கருமி.

**பி**ரமநாயகம் நடந்ததை அப்படியே அரசவையில் தெரிவித்தார். கருமியையும் கூப்பிட்டு விசாரித்தார் மன்னர். இருதரப்பு வழக்கையும் கேட்டார். தீர்ப்பு கூறினார் :

"இவர் பரம்பரைப் பணக்காரர். அவரிடம் வைரங்கள் ஏராளம். இப்போது ஐந்து மோதிரங்கள் போட்டிருக்கிறார். ஆறாவது மோதிரம் நழுவுகிறதென்று பையில் போட்டுக் கட்டியதாகச் சொல்கிறார். அவருக்குப் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

"பிரமநாயகம் இந்த ஊரில் செல்வாக்கு மிகுந்த நல்லவர். ஏழைபங்காளரான அவரும் பொய் சொல்ல மாட்டார் என்பதை சாட்சிகள் மூலம் தெரிந்து கொண்டோம். எழுநூறு வராகன்கள் கொண்ட இந்தப் பை மகாலிங்கத்துக்குச் சொந்தமானதல்ல. எழுநூறு வராகன்களும் ஒரு மோதிரமும் கொண்ட பையை எடுத்தவன் வந்ததும் மீண்டும் இந்த வழக்குத் தொடரும். ஏதடா, நான் இப்படித் தீர்ப்பளித்து விட்டேனே என்று நினைக்கக் கூடாது.

"நூறு வராகன் பரிசுப் பணத்திற்காக எழுநூறு வராகன் கொண்ட பணமுடிப்பைத் திருப்பிக் கொடுக்க முன்வந்த பிரமநாயகம் மோசடிப் பேர்வழியாக இருக்க முடியுமா?" என்றார்.

பிறகு, "பிரமநாயகம்! நீங்கள் இந்தப் பணத்தில் உங்கள் விருப்பப்படி நற்பணிகள் செய்யலாம். இதைத் தொலைத்தவர் தக்க ஆதாரங்களோடு நிரூபித்தால் நானே அப் பணத்தைத் திருப்பிக் கொடுப்பேன்" என்றார்.

திருடனைத் தேன் கொட்டியது போல் ஊமையாய் வீடு வந்து சேர்ந்தார் கருமி.

**எப்படி எறும்பு நகர்கிறது?**



**எ**றும்புக்குக் கண் பார்வை மிகக் குறைவு. எனவே அதன் உடலில் கசியும் பியூமரோன், ப்யூமரிக் அமிலம் போன்ற இரசாயனப் பொருளின் வாசனையை நுகர்ந்தபடி ஓர் எறும்பு இன்னொரு எறும்பைப் பின்பற்றிச் செல்கிறது.

**– ஆர். ஆர். பூபதி, திண்டுக்கல்.**




## கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

உங்களுக்குக் கதை, கவிதை, ஜோக் எழுதவும் படம் வரையவும் தெரியுமா? அப்படியென்றால் உங்கள் திறமைகளை வெளிக் கொண்டு வர கோகுலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உடனே சந்தா செலுத்துங்கள். உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

பெயர் : ....................................................................................................

முகவரி : ..................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

# கோகுலம் நியூஸ்!

## கின்னஸ்

**மே** மாதம் நடைபெற்ற உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்காக எல்.ஜி. நிறுவனம் மிக நீண்ட கிரிக்கெட் மட்டையை உருவாக்கியது. இது இந்தியாவின் முக்கிய நகரங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதில் கிரிக்கெட் ரசிகர்கள் இந்தியா வெற்றி பெற வாழ்த்து தெரிவித்து கையெழுத்திட்டனர். இந்தியா வெற்றி பெறா விட்டாலும் இந்த கிரிக்கெட் மட்டை கின்னஸில் இடம் பெறப் போகிறது. இதன் நீளம் 15.24 மீட்டர், அகலம் 1.82 மீட்டர், எடை 430 கிலோ!



## ஃபேஷன் ஷோ!

**ம**னிதர்கள் கலந்து கொள்கிற ஃபேஷன் ஷோக்களைத் தான் நாம் கேள்விபட்டிருக்கிறோம். ஆனால் நாய்கள் கலந்து கொண்ட ஃபேஷன் ஷோ ஒன்று தென் கொரியாவில் நடைபெற்றுள்ளது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பல்வேறு வகையான நாய்கள் பலவித கண்கவர் உடை அணிந்து மேடையில் தோன்றி நடந்து காட்டின. இந்நிகழ்ச்சியை குழந்தைகளும் பெரியவர்களும் மிகவும் ரசித்தனர்.

## மீன் மழை!


**ஆ**லங்கட்டி மழை பெய்வது பற்றி நமக்கெல்லாம் தெரியும். ஆனால் மீன் மழை பெய்தது பற்றி கேள்விபட்டிருக்கிறீர்களா? கடலூர் மாவட்டத்தில் திட்டக்குடி அருகே உள்ள பெண்ணாடம் என்ற ஊரில்தான் இந்த அதிசயம் நிகழ்ந்துள்ளது. இரவெல்லாம் மழை பெய்து அதிகாலையில் எழுந்து பார்த்த மக்களுக்கு வீட்டு வாசலிலும் தெருவிலும் கூரையிலும் மீன்களைக் கண்டதும் அதிர்ச்சி கலந்த ஆச்சர்யம்! இந்த நிகழ்ச்சிக்கு ஆராய்ச்சியாளர்கள் 'டொரனாடோ சுழற் காற்றே' காரணம் என்கின்றனர். டொரனாடோ என்பது எப்போதாவது ஒருமுறை ஏற்படும் அதிக சக்தி கொண்ட சுழற் காற்றாகும். இந்த சுழற்காற்று மையம் கொள்ளும் இடத்தில் உள்ள பொருட்களை தூக்கிச் சென்று காற்று குறைந்த பகுதியில் போட்டு விடும். எனவே ஏரி, குளங்களில் உள்ள மீன் காற்றில் இப்படி வந்து சேர்ந்து விடும். ஆஸ்திரேலியாவில் இது போன்ற மீன் மழை பொழிந்திருப்பதாகக் கூறுகின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

## மிகச்சிறிய பைபிள்!

**உ**லகிலேயே மிகச் சிறிய பைபிள் லண்டனில் உள்ள பொம்மைகள், பழம்பொருட்கள் சேகரிப்போரிடம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. 1614 ஆம் ஆண்டு எழுதப்பட்ட இந்த பைபிளின் நீளம் 4.5 செ.மீ. மட்டுமே!


Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

பிருந்தாவனம்



படத்தை நிறைவு செய்யுங்கள்!




''கால்பந்தாட்ட வீரருக்குப் பிடித்த பல்பொடி எது தெரியுமா?''

'' 'கோல்' கேட் பல்பொடிதான்.''

– சி.பி. செந்தில்குமார்




குருவி மரத்தை அடைய வழி காட்டுங்கள்!

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/99 * Licensed
to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

